www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

நவ.10–16,1996

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 178

## அணி வகுக்கும் வெடிகுண்டுப் படகுகள்

## குமுறும் கடலில் கடற் சமர்

சூடும் சுவையும்



## கிழக்கில் தொடர் அடி



## நடிகை கைது

தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்



## தூக்குமேடைக் குறிப்பு



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தாமத மறுப்பு

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'பௌத்த மத ஆலயங்கள்
தாக்கப்பட்டால்
தமிழர்கள்மீது தாக்குதல்'
என்று ஜனாதிபதி சொன்னதாக
வெளியான செய்தி
சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

கொழும்பு ஆங்கில வார இதழ்
அச்செய்தியை வெளியிட்டது.

ஜனாதிபதி சார்பாக
அச்செய்தி மறுக்கப்பட்டுள்ளது.
ஆனால் குறிப்பிட்ட பத்திரிகை-
செய்தி உண்மைதான்
என்று மீண்டும் சொல்லியுள்ளது.

குறிப்பிட்ட செய்தியில்
உண்மை உண்டா? இல்லையா?
என்னும் சர்ச்சைகளுக்கு அப்பால்
அச்செய்தி தொடர்பாக
அரசாங்கம் காட்டிய அலட்சியம்
ஆச்சரியம் தருவதாய் உள்ளது.

செய்தி வெளியானது ஞாயிற்றுக்கிழமை.
மறுப்பு வெளியானதோ
ஐந்து நாட்களின் பின்னர்தான்!

உடனடியாக அரசாங்கம்
மறுப்பு வெளியிட்டிருந்தால்
இந்தளவுக்கு சர்ச்சை எழுந்திருக்காது!

அரசாங்கம் மறுப்பறிக்கை
வெளியிடுவதில் காட்டிய நிதானம்,
குறிப்பிட்ட செய்தியால்
சாதகமா, பாதகமா என்று
நாடிபிடித்தறிய எடுத்துக்கொண்ட
கால அவகாசம் போலாகிவிட்டது!

வெளியான மறுப்பறிக்கையும்
உள்நாட்டு மக்களுக்கான விளக்கமல்ல;
வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கான
தெளிவுபடுத்தலாகவே இருந்தது.

வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள்
குறிப்பிட்ட செய்தியை
வெளியிடாமல் இருந்திருந்தால்
மறுப்பறிக்கை
விடுக்கப்பட்டிருக்குமா?
என்பது சந்தேகமாக இருக்கிறது!

செய்தியை வழங்கிய
ஆங்கில வார இதழுடன்
அரசாங்கத்துக்கு எப்போதுமே
தகராறு இருக்கிறது.

அந்தப் பத்திரிகையில்
வெளியான செய்திக்கு
மறுப்பறிக்கை கொடுப்பதை
அரச தரப்பினர்
ஒரு கௌரவப் பிரச்சனையாக
நினைத்திருக்கக்கூடும்.

ஆனால் குறிப்பிட்ட செய்தி
கௌரவப் பிரச்சனையாகக் கருதி
கண்டுகொள்ளாமல் இருக்கக்கூடிய
செய்தியல்லவே!

சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு
மறுப்பறிக்கை விடாதிருந்தாலும்
மக்களுக்கு உடனடியாக
உண்மையை உரைத்திருக்கலாம்!

அரசியல் தீர்வு முயற்சிகளில்
மந்தவேகமும்
போர் முஸ்தீபுகளில்
புயல் வேகமும்
காட்டப்பட்டு வருவதால்
தமிழ் பேசும் மக்களிடம்
ஆரம்பத்தில் இருந்த எதிர்பார்ப்புக்கள்
அருகி வருகின்றன.

இனவிரோதங்களைத் தூண்டும்
பேச்சுக்களும், எழுத்துக்களும்
தென்பகுதியில்
தலையெடுக்கத் தொடங்கிவிட்டன.

சுயாதீன தொலைக்காட்சியில்
ஆட்திரட்டலுக்கான
வர்ண விளம்பரத்தில்
இனவாதம் தொனிக்கும்
பிரசாரப் பாடல் ஒலிக்கிறது.

இவற்றையெல்லாம்
கட்டுப்படுத்தும் பொறுப்பை
அரசாங்கம்
தட்டிக்கழித்துவிட முடியாது!

இந்நிலையில்
ஜனாதிபதியை சம்பந்தப்படுத்தி
விபரீதமான செய்தி வெளியானதும்
இனக்குரோதத்தைத் தூண்டுவோருக்கு
சாட்டையடியாகவும்
தமிழ் மக்களின் சந்தேகத்தைப் போக்கவும்
உடனடி மறுப்பு வெளியிட்டிருப்பின்
அது பொறுப்புணர்வின்
அடையாளமாகியிருக்கும்!

வெளிநாட்டில் தனது 'இமேஜ்'
சேதமாகிவிடக்கூடாது என்பதில்
அரசு காட்டும் அக்கறையை
உள்நாட்டு நிலவரங்கள்
சீர்கெடாமல் கவனிப்பதிலும்
காட்டுமானால் நன்றாயிருக்கும்!

ஒத்திப்போடவேண்டியது எது?
உடனடியாகத் தீர்வு காணவேண்டியது எது?
என்பதில்
நாட்டு நலன்தான்
அளவு கோலாக இருக்கவேண்டும்!

❑ ❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## "தேவ அன்பு"

நமது பரம தகப்பனின் இந்த நேசம் தற்சமயம் ஏற்பட்டதொன்றல்ல: "அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன்" என்றார். (எரேமி:31:3) முதல் மனிதன் தேவ அன்பைத் துச்சமாய் மதித்து தேவ மகிமையை இழந்துவிட்டபோதே, மனுக்குலத்தின் மீது தேவன் கொண்ட ஆழமான அன்பு இது! பாவியாகிவிட்டவன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து, நித்திய நித்தியமாய் பாவத்தில் ஜீவிக்க ஏதுவில்லாதபடி, ஜீவ விருட்சத்திற்கு போகும் வழியையே அடைத்து விட்ட தேவ அன்பு இது! சாத்தானின் தலை நசுக்கப்படவும், பாவச் சிறையிலிருந்து மனிதன் மீண்டெழவும், தம்மையே அர்ப்பணித்ததும் இதே அன்புதான்! நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுமளவிற்கு நம்மில் அவர் பாராட்டும் அன்பிற்கு எதனை ஒப்பிடலாம்?

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, தமது வருகையை தாமதித்து, கிருபையின் காலத்தை நீடித்திருக்கிறாரே.

நம் மேல் பாராட்டிய இம் மேலான அன்பை, கிருபையை, தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமான பெரிதான இரட்சிப்பை எப்படி மறந்திருப்போம்? கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பிக் கொள்வோம்? (எபி:2:4) "ஆழம், உயரம், அகலம், நீளமில்லாத தேவ அன்பிற்கு முன்னே நாம் அடிமையாகுவோமாக".

தி.பெ.தேவபாலன், மட்டக்களப்பு.



## உயர்வும் தாழ்வும் குர்ஆனின் மூலமே

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: "அல்லாஹுத்ஆலா இந்த வேதத்தின் மூலம் சில மனிதர்களை உயர்வடையச் செய்கிறான், மற்றும் சிலரை இழிவாக்கி விடுகிறான்." என ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

எந்த மனிதர் இந்தப் பரிசுத்த வேதத்தை விசுவாசங்கொண்டு அதன்படி செயலாற்றுகிறாரோ அப்படிப்பட்டவருக்கு அல்லாஹுத்ஆலா இம்மை மறுமை ஈருலகிலும் உயர்வையும் கண்ணியத்தையும் வழங்குகிறான். எவர் இதன்படி செயல் புரியவில்லையோ அவரை இழிவுபடுத்துகிறான் என்பது இதன் கருத்தாகும்.

மேலும் திருகுர் ஆனிலே "அல்லாஹுத்ஆலா இந்தக் குர்ஆனின் மூலம் பல மனிதர்களுக்கு நேர்வழிகாட்டுகிறான். பல மனிதர்களை வழி தவறச் செய்துவிடுகிறான்."

மேலும் "நாம் குர் ஆனின் மூலமாக முஃமின்களுக்கு நோய் நிவாரணியையும் அருளையும் இறக்கி வைத்துள்ளோம். இது அநியாயம் புரிவோருக்கு நஷ்டத்தை தவிர வேறெதையும் அதிகமாக்காது" என்று அருளியுள்ளான்.

"முஸ்லிம்களே விழித்தெழுங்கள்! பொய் பித்தலாட்டங்களை விட்டுவிட்டு இறைவனின் திருவேதத்தை கண்ணியத்துடன் உற்றுநோக்கி செயல்படுங்கள்! இம்மையிலும், மறுமையிலும் வெற்றி பெறுவீர்கள்."

எம்.எம். முஹம்மது ஆஸிர், சாய்ந்தமருது-10.

# கவிதைப் போட்டி இல.175



### பரிசுக்குரிய கவிதை

## இடம் பெயர்ந்த ஓர் இதயம்

பள்ளி கொள்ள இடமுமில்லை;
கிள்ளிக் கொடுக்க சோறுமில்லை;
சொல்லி அழ சுற்றமுமில்லை;
போர் வெறுத்து ஊர் விட்டோம்!
பார் வெறுப்பின் உயிர் விடுவோம்!

திருமதி ராஜேஸ்வரி ரவீந்திரநாத்-அக்கரைப்பற்று-07.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**ஒப்புக்கு உணவு தினம்**

உணவு தந்தார்கள்!
ஊட்டு எனறார்கள்!!
ஊட்டினேன்,
புகைப்படமும் எடுத்தார்கள்!
இப்போதான் புரிந்து கொண்டேன்,
ஒக்டோபர் 16 உணவு தினமாமே!!.

க.சுசீலா-கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

**புனர்வாழ்வு**

நாற் திசையும் வேட்டோசை!
நாள் தோறும் வெளியேற்றம்!.
புனர்வாழ்வு கதை நம்பி
புதுவாழ்வு தேடிவந்து-கைதால்
புருசனையும் பறிகொடுத்தாள்!.

உன்னவன்-வட்டவளை.

**மருந்து**

வட்க்கு கிழக்கில்
துப்பாக்கிக்குப்
பெரு விருந்து!
சோறோ
அருமருந்து!!

செல்வி எஸ்.பிரமிளா-
மவுன்ட் பாம், நில்லம்பை.

**நேற்றால் இன்று**

கைகட்டி வாழ்ந்த
நேற்றைய நிழல்களால்
கையேந்தி நிற்கும்
இன்றைய நிஜங்கள்.

சி.மு.சுந்தரேசன்-அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

**நாதி இல்லை**

உண்டதோ பாதி
கையிலே மீதி
நெஞ்சிலே போர் பீதி
இறக்கும் வரை-இனி
இல்லையே நாதி!

செல்வி நிஹாறா ஏ.முத்தலிப்-அநுராதபுரம்.

**எதிரொலி**

கொஞ்சுகின்ற மழலையினை
வஞ்சியிவள் மடியிருத்தி
அஞ்சி நிற்கும் இந்த நிலை
வெஞ்சமரின் எதிரொலியோ?

சி.சசிதாரணி-தேத்தாப்பளை.

**எப்போது காண்பது?**

குற்றுயிர்க் குழந்தையைக் காப்பாற்ற எண்ணி
சோற்றுப் டருக்கையை ஊட்டிடும் அன்னையின்
தோற்றம் காட்டிடும் துன்பத்தின் சாயலில்
சற்றேனும் அமைதியைக் காணுதல் கூடுமோ?

யோ.செ.பெனடிக்ற்- காலி வீதி, தெஹிவளை.

**அவலம்**

அம்புலிகாட்டி அமுதூட்டி மகிழ்ந்தது
அந்தக்காலம்.
பொம்பருக்கு பயந்திங்கு பதுங்கியிருந்து
உணவூட்டுவது
இந்தக்காலம்.


எம்.முரளிதரன்-பஸ்தரிப்பு நிலையம், வெளிமடை.

**முன்னேற்றம்**

எங்கள் நாடு
முன்னேறுகிறது-
சோமாலியா நோக்கி.

சுபா வரன்- கண்டி.

# கவிதைப் போட்டி இல-178



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 16.11.1996

-முகவரி- கவிதைப் போட்டி இல.178
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்) சாலை



யாழ்ப்பாண செய்திகளை முரசு தணிக்கை நேரத்திலும் முடிந்தளவு வெளிக்கொண்டுவந்தது. கல்தோன்றி மண்தோன்றா காலத் தமிழர்கள் என்று பெருமைப்பட்டுக் கொண்டோம். இபபோதும் ஒரு குறைச்சலும் இல்லை. இங்கே ஆதிகால மனிதர்கள் போலத்தான் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்.

மா. தியாகராஜா,
மட்டுவில்-யாழ்ப்பாணம்.

சமீபகாலமாக முரசு வழங்கும் சிறுகதைகள் வெகு நேர்த்தியாக உள்ளன. நம்மைச் சுற்றியுள்ள கோரங்களையும், கண்ணீர்க் கதைகளையும் கருவாக வைத்து எழுதப்படும் கதைகள்தான் தேவை. ஷெல் அடியும், குண்டுவீச்சும், பதுங்க இடம் தேடும் ஓட்டமுமாய் மாறிய வாழ்க்கையை, அதன் துயர்களை சிறுகதைகள் தெளிவுபட தொட்டுக் காட்டட்டும்.

எம். லோகநாதன்,
திருமலை.

முரசே! கவிதைப் போட்டியில் புதைகுழியில் ஒரு பெண் பலியாகிக் கிடக்கும் காட்சியைப் பிரசுரித்தாய். நீ அந்த அவலத்தை பிரசுரித்த சூட்டோடு யாழில் இருந்து புதைகுழியில் மீட்கப்பட்ட அவலச்செய்தியும் வந்தது. காலத்தின் கண்ணாடியாக அமைந்துவிட்டது கவிதைப் போட்டிப் படம்.

செ. உருத்திரகுமார், வவுனியா.

முரசில் 'தாய்' நாவல் தரப்பட்டது ஒரு துணிச்சலான முயற்சி. எங்கே இடைநடுவில் நிறுத்தி விடுவீர்களோ என்றுதான் நினைத்தேன். 'தூக்கு மேடைக் குறிப்பு' தொடராக வெளிவரப்போகும் அறிவிப்பைக் கண்டதும்தான் 'தாய்' நிறைவடையப்போகிறதே என்னும் ஆதங்கத்துக்கு சற்று ஆறுதலாக இருந்தது. 'தூக்கு மேடைக் குறிப்பு' பற்றி கேள்விப்பட்டுள்ளேன். முரசின் மூலம் அறியப்போவதில் மகிழ்ச்சி!

ஆர். விநாயகமூர்த்தி, ஆரையம்பதி.

அன்பின் முரசே! நீ தரும் தொடர்கள் எதுவுமே சோடைபோவதில்லை. காலமறிந்து, வாசகர் விருப்பம் அறிந்து தொடர்கள் தருகிறாய். 'தா.மறுபடி தா' இரண்டு பாகமும் விறுவிறுப்புக் குறையவேயில்லை. பூலான்தேவி தொடருக்கு எங்கள் குடும்பத்தினரின் மொத்த வாக்குகளையும் அளிக்கிறோம். சூப்பர்!

திருமதி விசாலாட்சி ராமலிங்கம்,
ஆசிரியை-சிலாபம்.

எதிர்க்கட்சித் தலைவர் மீதும்தான் விசாரணை நடைபெறுகிறது. விசாரணைகளில் அவர் குற்றவாளியாகக் கருதப்பட்டால் ஐ.தே.கட்சியை அரசாங்கம் தடைசெய்யுமா? என்று ராஜதந்திரியார் எழுப்பிய கேள்வி அர்த்தபுஷ்டியானது. எதிர்க்கட்சி மீது அரசாங்கம் சாட்டும் குற்றச்சாட்டுக்கள் புலிகள் இயக்கத்தினர் மீதான குற்றச்சாட்டுக்களை விட அதிகமாக உள்ளன. அப்படியிருக்கும்போது புலிகளை தடை செய்வதில் மட்டும் ஆர்வம் காட்டுவது ஏனோ?

ஏ. அஹமத், மூதூர்.

'கொள்ளை ராணி பூலான்' தொடர் மெய் சிலிர்க்க வைக்கிறது. பாவம் அவள் பட்டுள்ளபாடு எந்தப் பெண்ணுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது! என்று மனம் ஏங்குகிறது.

கே. புவனலோஜினி, சமகிபுர-இறக்குவானை.

முரசு 175தைக் கண்டேன் பார்த்தேன்! சுவைத்தேன்! வெகு பிரமாதம். ஆனால் ஒரு குறை- அரசியல் தொடரை ஒரு பக்கத்தில் முழுதாக தராமல் விட்டுவிட்டீர்களே? என்பது தான். எனினும் ரசிகனின் பூலான் தேவி மிக விறுவிறுப்பாகவும் சுவையாகவும் உள்ளது. முரசே.. உன் பணி தொடரட்டும்.

ஆர்.கிருஷ்ணன், கொழும்பு-15.

என் இனிய முரசே,
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறப்புமிக்கவை- காதில பூ கந்தசாமி, சிந்தியாவின் கேள்வி பதில்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. என்றென்றும் உன் பணி தொடர என் நல்வாழ்த்துக்கள்.

க.ரூபன்,புங்குடுதீவு-10.

அன்பின் இனிய முரசே!
நீ சுமந்து வரும் தா! தொடரின் இரண்டாம் பாகம் நாம் நினைத்ததை விட வித்தியாசமாகவும் மிக விறு விறுப்பாகவும் செல்கின்றது. பூலான் தேவி தொடரினை ரசிகன் தன் பாணியில் தரும் விதம் பிரமாதமாக உள்ளது. பாராட்டுக்கள்.

சி.அமீன்- நாச்சியாதீவு.

தாவை தரும் கிரைம் மன்னன் பிரபாகருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். காதில பூ கந்தசாமியின் சந்திப்பு படு ஜோர். இலக்கிய நயம் சூப்பர். தேன்கிண்ணம் தேனாகவே இனிக்கின்றது.

ரிஸ்மிலா ரில்வான்,அக்குரணை.

அன்புக்கு இனிய முரசே!
முத்தான முத்துக்கள் பல சுமந்து வரும் முரசில் ஒவ்வொரு முத்தும் அற்புதமானவையே, இருந்தும் ரசிகன் தரும் பூலானின் உண்மைக் கதையை வாசிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் மெய்ச் சிலிர்க்க வைக்கின்றது.

வத்சலா செல்லத்துரை,தலவாக்கலை.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

* ஜி. யோகராணி, இரத்தினபுரி.
* பைறோஸ், சாய்ந்தமருது-11.
* பத்மா டெய்சி, ரம்பொடையூர்.
* செல்வி த. பத்மா, திருகோணமலை.
* ஆர். அசோக்குமார், டிக்கோயா.
* ரிஸ்லா ஹனிபா, அக்குறணை.
* கி. தக்ஷிலா, இறக்குவானை.
* எம். விதுஷியா, மட்/முறக்கொட்டாஞ்சேனை.
* ஜெ. ஜேசுதாசன், அப்புத்தளை.
* கனகரத்தினம் பாமினி, உடப்பு.
* எம்.ஐ.எம். றஸீன், பெரிய நீலாவணை-03.
* எம்.யே. ரயீஸ் அஹமட், அநுராதபுரம்.
* பாலசுந்தரம் நிரஞ்சன், மட்டக்களப்பு.
* ஆ. லிங்கேஸ்வரன், ஜெர்மனி.
* எம்.பி. அமின், நிந்தவூர்-01.
* செல்வி பா. தில்லை, இராகலை.
* ஜமாலுல்லா அன்வர் அலி, காத்தான்குடி-05.
* ஜெலிலா றூபியா, நிந்தவூர்-03.
* பி. சிவபாக்கியம், கொழும்பு-14.
* திருமதி எஸ். பவானி, வத்தளை.
* பா. ஜெயராமகுமார், மட்டக்களப்பு.
* வி. சுதர்சன், மொன்றியல்-கனடா.
* எம். மகேஸ்வரன், ஆறுமுகத்தான் குடியிருப்பு.
* சுதர்ஷினி வீரையா, தலவாக்கலை.
* அன்பு சாந்தி, திருமலை.
* செல்வம் விஜயசீலன், மூதூர்.
* எஃப். நேசன், ஹட்டன்.
* செல்வி லரீமா ஸனூன், மக்கொன.
* கிராசி என். ராஜா, நீர்கொழும்பு.
* ஏ.எம். இப்திகார், ஏத்தாலை.
* ஏ.எம்.எம். நியாஸ், மருதமுனை-01.

எங்கள் இனிய முரசே,
காதில பூ கந்தசாமி என்ற பகுதி எங்கள் அனைவரின் மனதிலும் இடம் பிடித்து விட்டது. அதே போன்று பல சுவையான ஆக்கங்களை பிரசுரிப்பதற்கு எங்கள் அனைவரின் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன்.

வ.கௌசல்யா குமாரி- ஹொப்டன்



படிப்பகம்

www.padippakam.com

# மாவீரர்தினத் தாக்குதலுக்கு புலிகள் திட்டம்!

# நாடெங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்!

## வன்னியில் இருந்து கிழக்குக்குப் புதிய அணிகள்!

**எதிர்வரும் நவம்பர் 27ம் திகதி புலிகள் இயக்கத்தின் மாவீரர் தினமாகும். நவம்பர் 26ம் திகதி பிரபாகரனின் 42வது பிறந்தநாளாகும். மாவீரர் தினக் கொண்டாட்ட ஏற்பாடுகள் புலிகள் இயக்கக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மாவீரர் தினத்தை முன்னிட்டு பாரிய இராணுவ நடவடிக்கைகளில் இறங்குவது புலிகள் இயக்கத்தினரின் வழக்கமாகும். அதனால் புலிகள் இயக்க மாவீரர் தினத்தை முன்னிட்டு படைமுகாம்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளன. நாடெங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்படவுள்ளன.**

### நவம்பர் 27

நவம்பர் 27ம் திகதி புலிகள் இயக்கத்தினர் மாவீரர் தினத்தை முன்னிட்டு பெரும் தாக்குதல் ஒன்றுக்கு அவர்கள் திட்டமிட்டிருக்கலாம் என்று பாதுகாப்புப்படை வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

மாவீரர் தினக் கொண்டாட்டத்துக்கு முன்னர் தாக்குதலை நடத்திவிட்டு மாவீரர் தினத்தை பூர்த்தி செய்வது புலிகளின் வழக்கமாகும்.

இம்முறை மாவீரர் தினத்தில் கொழும்பிலும் புலிகள் இயக்கத்தினர் தாக்குதல் நடத்தக்கூடும் என்று பாதுகாப்புப் படை வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன. அதனால் தேடுதல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இப்போதிருந்தே தீவிரமாகியுள்ளன.

கொழும்பில் புலிகள் இயக்கத்தினர் 45 பேர் ஊடுருவியுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மாவீரர் தினத்தை முன்னிட்டு தலைநகரில் மேற்கொள்ளப்படும் தீவிர பாதுகாப்பு மற்றும் தேடுதல் கைது நடவடிக்கைகளுக்கு கட்டியம் கூறுவது போலவே அச்செய்தி அமைந்துள்ளது.

தலைநகரில் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் இயக்கத்தினர் தயாரிப்புக்கள் செய்வதற்கு இடமளிக்காமல் முன்கூட்டியே பாதுகாப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட படையினர் நினைத்துள்ளதாகத் தெரிகிறது.

இதனால் தலைநகரில் பரவலான கைதுகளும், தேடுதல்களும் இனிவரும் நாட்களில் அதிகமாகலாம் என்று நம்பப்படுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள படைமுகாம்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகள் தாக்குதல் நடத்த முடியாதளவில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கிய படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சாத்தியங்களும் இருக்கின்றன.

அவ்வாறு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் புலிகளை தற்காப்பு நிலைக்குள் தள்ளி, தாக்குதல் ஒன்றில் ஈடுபடாமல் அவர்களைத் தடுக்கும் தந்திரமாக அது அமையும்.

### கிழக்கில் புலிகள்

கிழக்கிலும், எல்லைப்புறப் பகுதிகளிலும் புலிகளின் அணிகள் தமது தாக்குதலைத் தீவிரமாக்கலாம் என்று தெரியவருகிறது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும், திருமலை மாவட்டத்திலும் இருக்கும் புலிகளின் அணிகள் மத்தியில், கூடுதலான தாக்குதல்களை நடத்துவது யார் என்பதில் போட்டி ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் பங்கேற்ற புலிகள் இயக்க மூத்த தளபதிகளில் ஒருவரும், திருமலை மாவட்ட விசேட தளபதியுமான சொர்ணம் தற்போது திருமலைக்கு திரும்பியுள்ளார்.

சமீபத்தில் திருமலை கடற்பரப்பில் கடற்படையினரின் டேராப் படகு கடற்புலிகளாலும் கடற் கரும்புலிகளாலும் தாக்கப்பட்டது. அதனையடுத்து வன்னியில் இருந்து படகுகள் மூலமாக ஆயுதங்களும், புதிய தாக்குதல் அணிகளும் கிழக்கு மாகாணத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

திருமலை கடற்பகுதியில் கடற்கரும்புலிப் படகுகள் பாதுகாப்பாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே, கடற்புலிப் படகுகளில் வன்னியில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு புதிய அணிகள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கொண்டாட்ட ஏற்பாடுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாகரை, வவுணதீவு, பட்டிப்பளை, போரதீவு பிரதேசங்களிலும், ஏறாவூர் பற்று பிரதேசத்தில் உள்ள பங்குடாவெளி, கரடியனாறு பிரதேசங்களிலும் மாவீரர் தினக் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அங்குள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் பேச்சுப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள் என்பவையும் நடைபெறவுள்ளன.

யாழ்குடாநாட்டில் படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் மாவீரர் தினத்தை பெரியளவில் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

1989ம் ஆண்டு முதல் மாவீரர் தினத்தை புலிகள் இயக்கத்தினர் அனுஷ்டித்து வருகின்றனர். புலிகள் இயக்கத்தில் முதன் முதலில் பலியானவர் லெப்டினன்ட் சங்கர் என்னும் சத்தியநாதன். 27.11.82ல் அவர் பலியானார். அவர் பலியான நாள்தான் மாவீரர் தின நாளாக புலிகள் இயக்கத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

## கிழக்கில் புலிகள் தொடர் தாக்குதல்!

### கைப்பற்றிய ஆயுத விபரம் தெரிவிப்பு!

கிழக்கு மாகாணத்தில் புலிகள் இயக்கத்தினரால் தொடர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கடந்த மாதத்தில் நடைபெற்ற தாக்குதல்கள் சிலவற்றில் தம்மால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகப் புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

14.10.96 அன்று இரவு 10.25 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் கறப்பளையில் பொலிஸ் காவலரண்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தாக்குதலில் நான்கு பொலிசார் பலியாகினர். ரி.56 ரகத் துப்பாக்கிகள்-04, 60 மில்லி மீட்டர் மோட்டார்-01, அதற்கான ஷெல்கள்-13, றிப்பீட்டர் துப்பாக்கி-01, ஏ.கே. எல்.எம்.ஜிலிங்-375, ரி.56 மகசீன்-12, 40 எம்.எம் மோட்டார் ஷெல்கள்-05, ஏ.கே. கோள்சர்-02, ஐ.எம். ரவைகள்-850, கிற்பேக்-10 ஆகியன தம்மால் கைப்பற்றப்பட்டதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். தமது தரப்பில் எவ்வித சேதமுமில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

21.10.96 அன்று அதிகாலை 6.25 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிவேம்பு இராணுவ முகாமிலிருந்து 600 மீட்டர் தொலைவில் உள்ள மருங்கையடி என்னுமிடத்தில் மோதல் இடம்பெற்றது. தமது அணிகள்மீது தாக்குதல் நடத்த முன்னேறிவந்த இராணுவத்தினர்மீது திடீர்த் தாக்குதல் நடத்தியதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

07 இராணுவத்தினர் பலியாகினர்: பலியானவர்களில் இரு இராணுவத்தினரின் உடல்கள் கைப்பற்றப்பட்டன.

அத்தாக்குதலில் தம்மால் கைப்பற்றப்பட்டவை குறித்து புலிகள் வெளியிட்டுள்ள பட்டியல்:

ஏ.கே.எல்.எம்.ஜி-01, ரி.56-2 ரகத் துப்பாக்கிகள்-05, ரி.56 பட்மொடல் துப்பாக்கி-01, றம் மகசீன்-01, ஏ.கே.மகசீன்-01, ஐ.எம். ரவைகள்-1025. தமது தரப்பில் சேதமில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

22.10.96 அன்று காலை 6 மணியளவில் பள்ளியக்கொட என்னுமிடத்தில் உள்ள பொலிஸ் நிலையம் நோக்கிச் சென்ற பொலிஸ் அணிமீது தாக்குதல் நடத்தப்பட்டது. 27 பொலிசாரும், 2 ஊர்காவல் படையினரும் பலியானார்கள். புலிகள் தரப்பில் சேதமில்லை.

ரி.56-1 ரகத் துப்பாக்கிகள்-19, அதற்கான மகசீன்-78, எஸ்.84 ரக துப்பாக்கிகள்-02, மகசீன்-02, எ-3, ஜி-3 ரக துப்பாக்கிகள்-02, எஸ்.எல்.ஆர்-01, ரி.81 எல்.எம்.ஜி-01, ஏ.கே. எல்.எம்.ஜி-01, 303 துப்பாக்கி-01, 40 எம்.எம். பிஸ்டல்-01, வோக்கி-02, ஐ.எம். ரவைகள்-2946 ஆகியன கைப்பற்றப்பட்டதாக புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

## தலைநகரில் தாக்குதல் நடத்த படப்பிடிப்பு!

### புகைப்படம் எடுத்த சிங்கள இளைஞருக்கு சிறை

கொழும்பில் தாக்குதல் நடத்துவதற்கு ஏற்ற இடங்களை தெரிவு செய்வதில் புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

தாக்குதலுக்கான திட்டமிடுதலுக்கு உதவும்வகையில் கொழும்பில் உள்ள முக்கிய நிலைகள் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழர்கள் புகைப்படம் எடுத்தால் கைது செய்யப்படுவார்கள் என்பதால் சிங்கள இளைஞர்கள் சிலரை புலிகள் பயன்படுத்தியுள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

புலிகள் இயக்க உளவுப்பிரிவினருக்கு புகைப்படம் எடுத்துக் கொடுத்த சிங்கள இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் கைது செய்யப்பட்டதை அடுத்தே அத்தகவல் வெளியாகியது.

இதுபற்றித் தெரிய வருவதாவது: ரணசிங்க ஆராய்ச்சிகே அஜித் ரோகன என்னும் இளைஞர் ஒரு ஓட்டோ சாரதியாவார். அவருடன் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டனர் புலிகள் இயக்க உளவுப் பிரிவினர்.

கொழும்பில் தாம் குறிப்பிடும் சில இடங்களை புகைப்படம் எடுத்துத்தந்தால் தேவையான பணம் தரலாம் என்று கூறினார்களாம். அவரும் அதற்கு இணங்கினார். அவருக்கு கமரா ஒன்றும் கொடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, இந்தியத் தூதரகம், கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையம், பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம், கொழும்பில் உள்ள ஒரு பாலம் ஆகியவற்றைப் படமெடுத்துத் தருமாறு கூறப்பட்டதாம்.

அதன்படி எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள் புலிகள் இயக்க உளவுப்பிரிவினரிடம் சேர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. மேலும் புகைப்படங்களை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

விசாரணையில் அவர் உண்மைகளை ஒப்புக்கொண்டார். புலிகள் இயக்கத்தினரிடம் இருந்து அதுவரை 39 ஆயிரம் ரூபா பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அதனையடுத்து அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. கடந்த 30.10.96 அன்று கொழும்பு மாஜிற்ஸ்ரேட் அந்த இளைஞருக்கு 15 மாதச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

அந்த இளைஞருக்காக ஆஜரான சட்டத்தரணி தனது வாதத்தில், தனது கட்சிக்காரருக்கு அந்தப் புகைப்படங்கள் எதற்காகக் கேட்கப்படுகின்றன என்று தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் உதவியிருக்க மாட்டார் என்று கூறினார். அந்த வாதத்தை மாஜிற்ஸ்ரேட் ஏற்றுக்கொள்ளவில்லை.

## எரிபொருள் தட்டுப்பாடும் இருளும்

### மட்டக்களப்பு நிலவரம் தடுமாற்றம்

(ஏறாவூர் நிருபர்)

இங்கினியாகலையிலிருந்து மட்டக்களப்புக்குக் கிடைக்கும் மின் விநியோகத்தைப் புலிகள் கடந்த மாதம் போரதீவில் தடைப்படுத்தி சேதமாக்கிவிட்டனர். இன்னமும் அதைத் திருத்தியமைப்பதற்குப் புலிகள் அனுமதிக்கவில்லை. முதல் தடவை திருத்த வேலைக்குச் சென்ற இ.மி.ச. ஊழியர்களையும், உபகரணங்களையும், வாகனத்தையும் புலிகள் தடுத்து வைத்துப் பின்னர் ஊழியர்களை மட்டும் விடுவித்தனர்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மாத்திரம் மின் விநியோகம் வழங்கப்பட வேண்டும் என்பதில் படையினரும், படையினரின் கைக்குள் உள்ள சிவில் நிருவாகப் பகுதிகளுக்கு மின்விநியோகம் கிடைக்கக் கூடாதென்பதில் புலிகளும் தீவிரமாக உள்ளதாகவும் அறியவருகிறது.

கடந்த ஒரு மாதமாக நிலவும் இந்த இழுபறி நிலையினால் தற்சமயம் மட்டக்களப்பின் ஒரு பகுதி முற்றாக இருளில் மூழ்கியுள்ளது. மற்றைய பகுதி ஒன்று விட்டு ஒருநாள் இருளில் கிடக்கிறது. இப்பொழுது மட்டக்களப்புக்கு ஹபறணை ஊடான மின் விநியோகம் மட்டுமே கிடைக்கிறது.

கடந்த வாரம் மட்டக்களப்புக்கு எரிபொருள், மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றி வந்த புகைவண்டி புலிகளின் கண்ணிவெடித்தாக்குதலுக்கு இலக்கானது. மட்டக்களப்பு-நாவலடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒரு சரக்குப் பெட்டி முற்றாகச் சேதமடைந்ததுடன் 4 பெட்டிகள் தடம் புரண்டன. அரை கிலோ மீட்டர் தூரத்திற்குத் தண்டவாளம் சேதமடைந்தது.

படையினருக்குத் தேவையான பொருட்களை ஏற்றிச்சென்ற ரயில்வண்டியே தாக்கப்பட்டதாக புலிகளின் சர்வதேச தலைமையகம் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் விற்ற படைவீரர் மாட்டினார்!

(ஏறாவூர் நிருபர்)

இராணுவ எரிபொருள் பவுசரிலிருந்து வழக்கமாக, கள்ளத்தனமாக தனியார் ஒருவருக்கு எரிபொருள் விற்றுவந்த படைவீரர் சிலர் இராணுவ இணைப்பதிகாரியிடம் வகையாக மாட்டினர்.

படை முகாமுக்கு எரிபொருள் வழங்கும் இராணுவ பவுசர் வண்டியை ஏறாவூரிலுள்ள நாவலடிக்கடை வர்த்தகருக்கு கடையின் பின்புறமாக- மறைவான இடத்தில் நிறுத்தி எரிபொருள் இறக்கிக் கொண்டிருந்தபோது கொம்மாதுறைப் படைமுகாமின் இணைப்பதிகாரி உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து மேற்படி களவைக் கண்டு பிடித்தார். ஏராளமான பொதுமக்கள் இச்சம்பவத்தைப் பார்த்துக் கொண்டு நின்றனர். 'யுத்த ஹமுதா 4534' என்ற இலக்க பவுசரிலிருந்தே கள்ளத்தனமாக எரிபொருள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஏற்கனவே இக்களவு நடந்து வருவது பற்றிக் கேள்விப்பட்டிருந்த இராணுவ இணைப்பதிகாரி கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்கே காத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் இப்பொழுது மிகுந்த எரிபொருள் தட்டுப்பாடு நிலவிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

எரிபொருளை வாங்கிய நாவலடிக் கடை வர்த்தகர், . பல வருடங்களாக எரிபொருட்களை இவ்விதம் களவாகப் படைத்தரப்பினரிடமிருந்து குறைந்த விலைக்குப் பெற்று எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் வேளையில் அதிகரித்த விலைக்கு விற்று வருவதாக விஷயமறிந்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

## 'விடுதலை நாகங்கள்' எச்சரிக்கை

### பல பிரமுகர்கள் பதவி விலகலாம்!

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரமுகர்களுக்கு 'தமிழின விடுதலை நாகங்கள்' என்ற பெயரில் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இச்செய்தி கடந்தவார முரசில் வெளியாகியிருந்தது.

எச்சரிக்கைக் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற பிரமுகர்களில் பலர் தமது கட்சிகளில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது. ஒரு சிலர் மட்டுமே நாகங்களை எதிர்கொள்ளும் துணிச்சலோடு உள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நீலன் திருச்செல்வத்தின் அம்பாறை மாவட்ட இணைப்புச் செயலாளர் பூ.கணேசன் தனது இணைப்பாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். கடந்த 31.10.96 அன்று அவர் அதனை அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து வேறு கட்சிகளின் பிரமுகர்களும் விலகக்கூடும் என்று தெரியவந்துள்ளது.

## கையெழுத்தில் நீலன் செய்த மோசடி!

### ஜனாதிபதிக்கு ஆதரவாக அவசர அறிக்கை

"பௌத்த மத ஆலயங்களை புலிகள் தாக்கினால், தமிழர்களைத் தாக்குவேன்" என்று ஜனாதிபதி கூறியதாக 'சண்டே லீடர்' பத்திரிகை செய்தி வெளியிட்டமை தெரிந்ததே.

"அச் செய்தியை ஜனாதிபதி செயலகம் மறுத்திருந்தது. அச் செய்தி வரிக்கு வரி சரியானதே. வேண்டுமானால் வழக்குப் போட்டுப் பார்க்கலாம்" என்று 'சண்டே லீடர்' மீண்டும் பதிலளித்தது. இச் சர்ச்சை தொடர்ந்து கொண்டிருந்தபோது கூட்டணியினரிடம் ஒரு அறிக்கையைப் பெற்றது அரசாங்கம். அந்த அறிக்கை அரசாங்க தகவல் திணைக்களம் மூலமாக பத்திரிகைகள், வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் என்பவற்றுக்கு விநியோகிக்கப்பட்டன.

'சண்டே லீடர்' செய்தியை தமிழ் கட்சிகளே நம்பவில்லை என்று வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு தெரிவிப்பதற்காகவே கூட்டணியின் அறிக்கை பெறப்பட்டது.

சண்டே லீடர் செய்திப்படி ஜனாதிப்தி தெரிவித்த கருத்து, அதிகாரிகள் கூட்டமொன்றில் வைத்து கூறப்பட்டதாகவே இருந்தது. கூட்டணியினருக்கு கூறப்பட்டதாக செய்தியில் தெரிவிக்கப்படவில்லை.

#### அறிக்கை ஏன்?

ஆனாலும் கூட்டணி சார்பாக வெளியான அறிக்கையில், "ஜனாதிபதி அவர்களே! நீங்கள் எங்களிடம் அப்படித் தெரிவிக்கவில்லை. நீங்கள் அப்படித் தெரிவிக்கவும் மாட்டீர்கள் என்று நம்பிக்கை இருக்கிறது." என்று கூறப்பட்டிருந்தது.

சர்ச்சையில் சம்பந்தப்படாத ஒரு கட்சி ஏன் அறிக்கை விட்டிருக்கிறது என்று ஆராய்ந்தபோது சில தகவல்கள் வெளியே கசிந்தன.

ஜனாதிபதியிடம் நல்ல பெயர் எடுப்பதற்காக தமக்கு சம்பந்தமில்லாத சர்ச்சையில் மூக்கை நுளைத்தவர் ஒரு கூட்டணிப் பிரமுகர் என்பது தெரியவந்தது.


அந்தப் பிரமுகர் அரசுக்கு திரைமறைவில் நெருக்கமானவர் என்ற சந்தேகம் இருக்கிறது. தனது பெயரில் அறிக்கை வெளியானால் அந்தச் சந்தேகம் உறுதியாகிவிடும் என்பதால் இரா. சம்பந்தனின் பெயரில் அறிக்கை வெளியிட்டார். வெளிநாட்டு பிரசாரத்திற்கு கூட்டணியின் கடிதம் உடனடியாகத் தேவைப்பட்டது. இரா. சம்பந்தனை தொடர்பு கொண்டு கையெழுத்துப் பெறத் தாமதமாகிவிடும். எனவே இரா. சம்பந்தனின் பழைய கையெழுத்தை பார்த்து கிட்டத்தட்ட அதுபோலவே கையெழுத்துப் போட்டு கொடுத்துவிட்டார்.

#### தகவல் கசிவு


குறிப்பிட்ட பிரமுகருக்கும், சம்பந்தனுக்கும் எதிரான கூட்டணி முக்கியஸ்தர் ஒருவர் மூலம் குமார் பொன்னம்பலத்திற்கு தகவல் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. தகவல் கிடைத்ததும் கையொப்பங்களை ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு களத்தில் இறங்கினார் குமார். பத்திரிகைகளுக்கு செய்தி தெரிவித்தார். குட்டு அம்பலமானது.

"இரா. சம்பந்தனுக்காக போலிக் கையொப்பமிட்டவர் நீலன் திருச்செல்வம்" என்று தெரிவித்துள்ளார் குமார் பொன்னம்பலம். போலிக் கையெழுத்து போட்ட குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகை இது தொடர்பாக நீலனிடம் தொடர்பு கொண்டு கேட்டுள்ளது. "அது போலிக் கையெழுத்துத் தான்" என்று நீலன் ஒப்புக் கொண்டதாக செய்தி வெளியிட்டுள்ளது. நீலனும் அதனை மறுக்கவில்லை.



சம்பந்தன் கையெழுத்து



போலிக் கையெழுத்து

## திறக்கப்பட்டது ஜின்னா மண்டபம்

(கண்டி நிருபர்)

கண்டி பிரதேச முஸ்லிம்களை எதிர்நோக்கியிருந்த பொது மண்டபம் ஒன்றில்லாத குறை கடந்த வாரம் நிவர்த்திக்கப்பட்டுள்ளது.

கண்டி திரித்துவக் கல்லூரியின் எதிரில் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பாழடைந்த நிலையில் இயங்காமல் இருந்து வந்த கண்டி ஜின்னா நினைவு மண்டபத்தின் முதற் கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்து விட்டதையடுத்து, பொதுமக்களின் பாவனைக்காக கடந்த வாரம் திறந்துவிடப்பட்டது.

பாக்கிஸ்தான் அரசாங்கம் வழங்கிய 11 இலட்சம் ரூபா அன்பளிப்பைக் கொண்டு கட்டிட நிர்மாணப் பணிகளை முஸ்லிம் வர்த்தகர்கள், மற்றும் பெருமக்களின் நிதி உதவியுடன் முதற்கட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. இந்த மண்டபம் இப்பொழுது செய்யப்பட்டிருப்பதால் அதன் நிர்வாகம் கடந்தவாரம் மௌலவி எச்.சலாருத்தீனின் தலைமையில் இயங்கும் அரசியல் சார்பற்ற குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை தமிழர் பிரச்சனை

### ஐ.நா. சபையில் குரல் எழுப்புக!

இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக இந்திய மத்திய-தமிழ்நாடு மாநில அரசுகள் உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டும். இவ்வாறு வை.கோபால்சாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு.க. கோரிக்கை விடுத்திருக்கிறது.

ம.தி.மு.கவின் நிர்வாகக் குழுக்கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது:

"ஈழத் தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணமும் உதவியும் கிடைக்க மத்திய அரசும், மாநில அரசும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகக் காரணமாகவுள்ள இராணுவ நடவடிக்கையை தடுத்து நிறுத்த இந்திய அரசு ஐ.நா. சபையில் குரல் எழுப்பவேண்டும்- என்று தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## தென்பகுதியில் ஒலிக்காத வானொலி வர்த்தக சேவை

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் வர்த்தக சேவையின் நிகழ்ச்சிகளை தென்பகுதி தமிழ் அபிமானிகள்- குறிப்பாக வெலிகம, மாத்தறை போன்ற பிரதேசங்களில் வாழும் நேயர்களால் சற்றும் கேட்க முடியாதிருக்கிறது.

இவ்வர்த்தக சேவை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், இக்குறைபாட்டை பல வழிகளிலும் எம் பிரதேச தமிழ் அபிமானிகள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். சற்றும் இதைப்பற்றிக் கவனத்தில் கொள்ளாதது கவலைக்குரிய விடயம். சிங்கள, ஆங்கில மொழிகளில் என்னென்ன சேவைகள் ஒலிபரப்புச் செய்யப்படுகின்றதோ அத்தனை சேவைகளையும் தெட்டத் தெளிவாகக் கேட்க முடிகின்றபோது தமிழ் சேவைக்கு மட்டும் ஏன்தான் இந்நிலையோ தெரியவில்லை? இதைக்கவனிப்பார் யாரும் இல்லையா? என்று பலரும் கேட்கின்றனர்.

வெலிகமை என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்தான் எமது தகவல் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் கௌரவ அலவி மௌலானா அவர்கள். அவரின் ஊரிலேயே வர்த்தக சேவை ஒலிக்கவில்லை.

எது எப்படி இருப்பினும் இனிமேலாவது வர்த்தக சேவை எமது தென்பகுதியிலும்- குறிப்பாக வெலிகம, மாத்தறை போன்ற இடங்களிலும் ஒலிக்கக் கூடியதாக ஒலிபரப்ப, பிரதி அமைச்சர் அலவி மௌலானா மற்றும் சம்பந்தப்பட்ட சகல உயர் அதிகாரிகளும் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு 'தினமுரசு' வார மலர் மூலம் கவனத்தில் கொண்டு வருகின்றோம். தயவு செய்து எமது தென்பகுதி மக்களின் குறையை நீக்குவார்களா?

எம்.எச்.அக்பர் பாச்சா, வெலிகம.

## நகை அடைவு வைத்தோர் அலைச்சல்

### திருப்பிக் கொடுப்பதில் தாமதம்!

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை மக்கள் வங்கிக் கிளையில் தங்கள் நகைகளை அடைவு வைத்தோர் பலர் பணங்கட்டிய பிறகும் நகைகளை மீட்டெடுக்க முடியாமல் பல வருடகாலமாக அலைகிறார்கள்.

"வன்செயல் காரணமாக நகைகளைப் பாதுகாப்பாக வைத்திருந்தோம்" என்று கூறும் வங்கி நிர்வாகம் 1992ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பணம் கட்டப்பட்ட நகைகளைக்கூட இன்றுவரை கொடுக்கத் தயங்குவது எந்தவகைப் பாதுகாப்பைச் சாரும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கேட்கிறார்கள்.

தங்கள் பணத்தை வெளியில் விடும் போது வட்டியும் முதலுமாகக் கணக்கிலிடும் வங்கி, நகைகளை அடைவு வைத்தோரிடமிருந்து பெற்றுக்கொண்ட பல்லாயிரக் கணக்கான ரூபா பணத்துக்கு உடனேயே, ஒப்பந்தப்படி நகைகளை மீளளிக்கத் தவறிய நிலையில் நான்கு ஆண்டுகளுக்கு வட்டி வழங்குவதே சரியானது எனவும் பாதிக்கப்பட்டோர் கூறுகின்றனர்.

"விளம்பரங்களில் காட்டும் அக்கறையை நடைமுறையிலும் காட்டினால் எவ்வளவு நல்லது?" என்று கேட்டார்- நாளும் பொழுதும் வங்கிக்கு நடந்து அலுத்துப் போன முதியவர் ஒருவர்.

## "ஆசிரிய நியமனம் தருவோம்"

### ஆசைகாட்டி பணம் சுருட்டல்

(குருநாகல் நிருபர்)

அண்மையில் நடைபெற்ற ஆசிரிய நியமனத்திற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றியவர்களிடம் ஆசிரிய நியமனம் பெற்றுத் தருவதாகக் கூறி குருநாகல், கேகாலை மாவட்டத்தைச் சார்ந்த பலரிடம் பணம் வாங்கப்பட்டு, ஏமாற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் பல நிகழ்ந்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

பரீட்சார்த்திகளின் முகவரிகளை வைத்து அவர்களைச் சந்திக்க வரும் பேர்வழிகள் ஆசிரிய நியமனம் பெற்றுத் தருவதாகக் கூறி பல ஆயிரங்களைக் கேட்டனராம். நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதாகக் கூறி முற்பணமாக சில ஆயிரங்களை பெற்றுக் கொண்டு சென்றுள்ளனர். இவர்கள் கல்வியமைச்சில் கடமைபுரிபவர்கள் எனக் கூறி அடையாள அட்டைகளையும் காட்டியுள்ளனர். இதை நம்பிய பலர் பணத்தையும் கொடுத்துள்ளனர்.

சில நாட்களின் பின்னர் பணம் கொடுத்தவர்களுக்கு பரீட்சையில் அவர்கள் பெற்ற புள்ளிகள் வந்ததாம். பின் நேர்முகப் பரீட்சைக்கான கடிதமும் வந்ததாம். கடிதமும் கல்வியமைச்சின் முத்திரையும் பதிக்கப்பட்டு வந்துள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு சென்ற பின்னர் தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ள விடயம் பலருக்கும் தெரியவந்துள்ளது.

கேகாலை மாவட்டத்திலும் வரக்காப்பொலைப் பகுதியில் பலர் இப்படி ஏமாற்றப்பட்டுள்ளனர். இந்த ஏமாற்று வேலைக்கு கல்வியமைச்சைச் சார்ந்த பலரிடமும் உதவி பெறப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. ஏனெனில் பரீட்சை எழுதியவர்களின் விபரங்கள் கல்வியமைச்சிலேயே உள்ளன.

எனவே இந்த ஏமாற்று வேலையில் ஈடுபட்ட எவராகினும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், கல்வியமைச்சும் இவ்விடயத்தைக் கவனிக்குமா?

பாதிக்கப்பட்டவர்களும் தங்கள் புகார்களை கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்கலாமே!

## மோசமான நிலையில் மன்னார்–தலைமன்னார் வீதி!

(மன்னார் நிருபர்)

மன்னார்–தலைமன்னார் பிரதான வீதி, ஐந்தாவது கட்டைக்கு அப்பால் மாட்டு வண்டில் கூட பயணம் செய்ய முடியாத அவல நிலையிலுள்ளது.

1989ஆம் ஆண்டுக்குப் பின் இந்த வீதியினால் தாரின் மணத்தைக்கூட நுகர முடியவில்லை. கற்களும், முட்களும் சேர்ந்து கரடு முரடான நிலையில் படு மோசமாகக் காட்சி தந்து கொண்டிருக்கும் இவ்வீதி போன்று இலங்கையில் வேறு எப்பகுதியிலும் காணமுடியாது.

ஒரு தடவை இப்பகுதியில் சேவையிலீடுபடும் பஸ், மறுநாள் கட்டையில் ஏற்றப்படும் நிலைக்கு வந்து விடுகிறது.

இதனால் தொடரான பஸ் சேவையை நடத்த முடியாமல் இ.போ.ச. மன்னார்ச் சாலை திண்டாடுகிறது.

இப்பாதையில் கடமை புரியும் பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் மறுநாள் லீவு எடுக்குமளவுக்கு மிக மோசமான நிலையிலுள்ள இவ்வீதி, மழை காலங்களில் குளமாகி விடுகிறது.

இவ்வீதியினை உடனடியாகத் திருத்த வேண்டியது உரியவர் பொறுப்பாகும். இல்லையேல் மழை காலங்களில் இவ்வீதி வழியாக படகு சேவையினையே நடத்த வேண்டியிருக்கும். அல்லது பயணிகள் நீந்திக் கொண்டே தலை மன்னார் செல்லவேண்டி வரும்.

## தேவை ஒரு பிரேத அறை

கல்முனைக்குடி மாவட்ட வைத்திய சாலை இப்பகுதி மக்களுக்கு அளப்பரிய வைத்திய சேவையை வழங்கி வருகிறது.

இங்கு வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு சத்திர சிகிச்சை, மகப் பேற்று என பல இடம் பெற்றபோதிலும் அவசர சிகிச்சைக்காக வாட்டில் அனுமதிக்கப்பட்டு உயிர் இழப்போரை வைப்பதற்கு பிரேத அறை ஒன்றில்லாதது பெரும் குறையாகவே உள்ளது.

அண்மையில் நஞ்சருந்தி ஆபத்தான நிலையில் இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிர் பிரிந்த ஒரு தமிழரின் உடலைப் பொறுப்பெடுக்க எவரும் வரவில்லை. இந்நிலையில் எங்கு அப்பிரேதத்தை வைப்பது என்பது வைத்தியசாலை வட்டாரத்தில் கேள்விக் குறியாகியது.

எனவே இன்னோரன்ன நிகழ்வுகள் இனிமேலும் இடம் பெறக்கூடாது. சகல வசதிகளும் கொண்ட ஒரு பிரேத அறையை இவ்வைத்திய சாலைக்கு வெகு விரைவில் அமைத்துக் கொடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.சி.கலீல்,
கல்முனை–05

## குண்டுவெடிப்பில் மாணவன் காயம்

### ரெலோ உறுப்பினர் கைது!

(மட்டக்களப்பு நிருபர்)

ஆரையம்பதியில் அக்டோபர் மாதம் 19ம் திகதி சனிக்கிழமை புனித மைக்கேல் தேசியக்கல்லூரி மாணவன் இராமச்சந்திரன் வாசுதேவன் (19 வயது) வீடியோ கசட் குண்டு வெடிப்பில் காயமடைந்த சம்பவம் தொடர்பாக இரு ரெலோ உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வீதியால் சென்று கொண்டிருந்த மேற்படி மாணவனை இவ்விரு சந்தேக நபர்களும் (விசேட அதிரடிப்படையினரும் உடன் நின்றனர்) அழைத்து, ஆரையம்பதி இராம கிருஷ்ணமிசன் வித்தியாலய அறையில் வீடியோ கசட் இருப்பதாகவும் அதனை எடுத்து தருமாறு கேட்டதாகவும் பெற்றோர் காத்தான்குடி பொலிசில் புகார் செய்ததையடுத்தே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட எஸ்.விமலேந்திரன், எஸ்.இரஞ்சன் ஆகிய இருவரும் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜெ.விஸ்வநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நவம்பர் மாதம் 8ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை ஏறாவூர் முஸ்லிம் வியாபாரி ஒருவரை வந்தாறுமூலையில் வைத்து கொலை செய்ததாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இரு ரெலோ உறுப்பினர்களையும் அடுத்த மாதம் 11ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி சி.சிவபாதம் உத்தரவிட்டார்.

## தமிழில் செய்தி சொல்லாத

### தனியார் தொலைக்காட்சிகள்

இலங்கையில் வாழும் பெரும்பாலான மக்களுக்காக வேண்டி ரி.என்.எல் தொலைக் காட்சி நிறுவனம் இரண்டு தடவை சிங்கள செய்திகளை ஒளிபரப்பாக்குகின்றது. பொது மொழியான ஆங்கிலச் செய்தியையும் ஒரு தடவையாயினும் ஒளிபரப்பாக்குகின்றது. ஆனால் இங்கையின் இரண்டாவது தேசிய மொழியான தமிழில் ஒரு போதும் செய்திகள் ரி.என்.எல் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுவதில்லை.

இதையே எம்.ரி.வி தொலைக் காட்சி நிறுவனமும் செய்கின்றது. இது தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் உண்டுபண்ணுகின்றது. இலங்கையின் தேசிய மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்பதை மறந்துவிட்ட ரி.என்.எல், எம்.ரி.வி ஆகிய இரு தொலைக்காட்சி நிறுவனங்களும் தமிழ் மொழிக்கு ஏன் இவ்வளவு பாரபட்சம் காட்டுகின்றனவோ? நாம் அறியோம்?

கிட்ணசாமி நவமலர், கோட்டலோஜ்.

## பிறந்த நாள் வாழ்த்து



ஓட்டமாவடி- 1, ஸாஹிரா மன்ஸிலைச் சேர்ந்த பிர்தௌஸ் மர்கனா தம்பதியின் செல்வப் புதல்வன் **முகமட் சிப்ராண்** 22.10.1996 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று சிறப்போடு வாழ வாழ்த்துகிறார்கள்.


**தபால் மூலம் தையற் கலை பயில இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!**

டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற் கலை பயில இன்றே விண்ணப்பியுங்கள். சான்றிதழ் வழங்கப்படும். பெண்களுக்கு மாத்திரமே பயிற்சி அளிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு:-

**Sithy Kamila Rafi**
DIRECTOR,
7/1, Gonawala Road,
MATALE.


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHOTHERAPHY)


மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலைமிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

நவம்பர் 19 முதல் 30 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax : 436439 டிசம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், நவம்பர் 9, 10, 11 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.


## விளம்பரப் பகுதி




**மலையாள மாந்திரீகம்**



நம்பினார் கெடுவதில்லை என்ற நற்பெயரை 33 வருடமாக தன்னகத்தே கொண்டுள்ள எமது நிறுவனம் என்றென்றும் நற்பெயரை பெற்றுள்ளது. என்னையும் எமது நிறுவனத்தையும் நம்பி பணம் அனுப்பி வைப்போருக்கு அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவே செயல்படுகிறோம். வாடிக்கையாளர்களை கண்ட மாத்திரம், "இதுவே உங்கள் பிரச்சினை" என திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். இதையொட்டியே மக்கள் கூட்டம் குவிந்த வண்ணம் உள்ளது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எந்நேரமானாலும் என்னோடு உரையாட- அதிக செலவில் T.O.D. CALL ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டவர் தங்கு தடையின்றி உரையாடலாம்.

தொடர்புகளுக்கு:-

விசேட வெளிநாட்டு தொலைபேசி :-
TEL 00941344831 EXT. FRS
FAX- 00941342464

மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
பி.கே.சாமி (J.D.G.A.N.)JP.
பி.கே.சாமி அஸோசியட் பிரைவேட் லிமிட்.
இல,162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் ரோட், கொழும்பு-13.



**அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்ட**
**அரச, அரச சார்பான ஊழியர்களுக்கான நிவாரணம்**

கடந்த இரண்டு வருட காலமாக வட-கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் அரச ஊழியர்களிலும் அரச சார்பான ஊழியர்களிலும் கணிசமான தொகையினர் அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பதை நாமறிவோம்.

இடமாற்றம் செய்யப்பட்டமை, உத்தியோக உயர்வு மறுக்கப்பட்டமை, உத்தியோகத்திலிருந்து நிறுத்தப்பட்டமை போன்ற பழிவாங்கல் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டோர் அடைந்துள்ள இதய வேதனைகளை நாமும் பகிர்ந்து கொள்கிறோம்.

இன்னும் அதிக தகுதிகள் இருந்தும் அரசியல் காரணமாக வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சகல முஸ்லிம் ஆண், பெண்களின் மனக் குமுறல்களையும் நாம் துயரோடு தெரிந்து வைத்துள்ளோம்.

மிகக் குறுகிய எதிர்காலத்தில் மேற் சொல்லப்பட்டவர்களுக்கான மனசாந்தி தரும் நிவாரணங்களைத் தேடித் தருவதற்கு நாம் முயற்சிகளை மேற் கொண்டு வருகிறோம்.

எனவே, பாதிக்கப்பட்ட சகலரும் அதுபற்றிய பூரண விபரங்களை விண்ணப்படிவ முறையில் எழுதி அனுப்புமாறு அக்கறையோடு வேண்டுகிறோம்.

முகவரி
"பாதிக்கப்பட்டோர் நிவாரண சேவை"
(Victims Relief Service)
"தாருல் முஸ்லிமீன்" ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி
27, முகிடீன் மஸ்ஜித் ரோட், மருதானை - கொழும்பு - 10

ADVT.

**முஸ்லிம்களின் தாகம் - சமத்துவத் தாயகம்**



**Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை**
மாணவர்கட்கு மலிவு விலையில் புத்தகப் பொதி

| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 250.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 250.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P.
உண்டு
தபாற் செலவு
இலவசம்

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770



**SABONA OF LONDON**
ஆரோக்கியமான வாழ்வுக்கு சபோனா



வாதம், இரத்தக் கொதிப்பு, மூட்டுவலி, தலைவலி, கைகால் மரத்தல் முதலான நோய்களிலிருந்து நிவாரணம் பெற்ற உலகின் பலகோடி மக்கள் அயலாரிடம் உத்தரவாதம் அளிக்கும் சர்வதேச சிறப்பு பெற்ற ஒரே இயற்கை நிவாரணி.

செப்பு, வெள்ளி, 24 கரட் 5 மைக்றோன்ஸ் கனம் கொண்ட தங்க முலாம் பூசப்பட்ட வைவர்ண டிசைன்களிலும் கிடைக்கின்றன.

**சபோனா செப்புக் கையணி**

உலகம் முழுவதுமே வலம் வருகிறது சபோனா


**போலிகளை வாங்கி வருந்தாதீர்கள்**

**Brass, Silver & Gold Plated Magna Bangles are Available ISLAND WIDE**

ரூ. 750/- க்கு மேல்

இருதயக் கோளாறு குருதிச் சுற்றோட்டத் தொகுதி, மாதவிலக்கு நோவு, இரத்தோட்டத் தடை, நரம்பு முடிச்சு, வாசத்தன்மை இழப்பு, அமுக்கம், நரம்புத் தளர்ச்சி, தலைவலி, தூக்கமின்மை, தசைப்பிடிப்பு, இளைப்பு நோய், நீரிழிவு, சோர்வு, இடுப்புப் பிடிப்பு, பிரயாண அசதி, வாதநோய், வலிப்பு நோய்களுக்கு.

**சபோனா மெக்னா கையணி**




தயாரிப்பு :
சபோனா வாதரோக நிவாரண சமாஜம் லண்டன் (U.K)
Estd. 1960

SOLE AGENTS
**WINNER (PVT) LTD.**
100- 1/16, CRYSTAL PALACE SUPER MARKET,
KEYZER STREET, COLOMBO 11.
TEL: 434658, 345245.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கடல் நடுவே விரியும் களம்

கடற்புலிகளின் தளத்தைத் தேடிச் சென்று கடற்படையினரும், கொமாண்டோக்களும், வான்படையினரும் கூட்டுத்தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள்.

நினைத்ததை முடிக்கவில்லையென்றாலும் கடற்புலிகளின் தளத்தை நிர்மூலம் செய்துவிட்டதாக படைத்தரப்பு செய்தி வெளியிட்டது.

கடற்புலித்தளம் நோக்கிய படை நகர்வை தடுத்து நிறுத்த நடைபெற்ற சண்டையில் தம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் பட்டியல் ஒன்றைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

சி.ரி.எஸ்.40, எம்.எம்.ஏ.ஜி.எல்-01, எம்.ஜீ.3,எல்.எம்.ஜி.-02, பி.கே.எல்.எம்.ஜி-02, ஏ.கே.எல்.எம்.ஜி-02, ஆர்.பி.ஜி-01, கோல்ட் கொமாண்டோ-01, ரி.56- 02, ரி.56 பட் மொடல்-02, ஆகியன தம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் என்று புலிகள் பட்டியல் வெளியிட்டுள்ளனர்.

கடற்புலிகளின் தளம் நோக்கிச் சென்ற படையினர் தோல்வியோடு திரும்பிய சூட்டோடு சூடாக திருமலையில் கடற்படைத் தளமும் துறைமுகமும் அமைந்துள்ள பகுதிக்கு அருகில் ஊடுருவிய கடற்புலிகள் வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை நடத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

கடற்புலித்தளம்மீதான தாக்குதலுக்குப் பதிலடியாகவே கடற்கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டதாக கடற்புலிகள் கூறியுள்ளனர்.

ஆனாலும் இத் தாக்குதல் இடம்பெறுவதற்கு ஒருமாதம் முன்பாகவே திருமலைக் கடற்பகுதியில் கடற்புலிகளின் படகுகள் வேவு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கி விட்டன. கடற்புலிகளது விசேட தளபதி சூசையும் திருமலை மாவட்டத்துக்கு நேரடியாகவே சென்று வேவு நடவடிக்கைகள், தாக்குதல் திட்டங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்.

கடற்புலிகளின் தளம்மீதான தாக்குதலுக்கு படையினர் சென்றிருக்காவிட்டாலும், திருமலைக் கடற்பகுதியில் கடற்புலிகளின் தாக்குதல் ஒன்று நடைபெற்றிருக்கும்.

தமது தளத்தை கடற்படையினர் தேடிச் சென்றமையால் முன்னரே திட்டமிட்டிருந்த தாக்குதலை கடற்புலிகள் விரைவாக நடத்தியிருக்கலாம்.

கடற்புலிகளது தளத்தை நிர்மூலமாக்கி விட்டோம் என்று கூறியதன்மூலம் கடற்புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டதாகவே சித்தரிக்க முற்பட்டனர் படைத்தரப்பினர்.

திருமலையில் கடற்படையினரின் மூக்கருகேயே வந்து கடற்புலிகள் உடனடியாக ஒரு தாக்குதலை நடத்தக் கூடும் என்று படைத்தரப்பினர் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

கடற்படையினரிடம் உள்ள போர்ப் படகுகளோடு ஒப்பிடும்போது கடற்புலிகளின் சண்டைப் படகுகள் பலவீனமானவை.

கடற் படையினரின் ஒரு டோரா பீரங்கிப்படகு கடற்புலிகளின் பல படகுகளை ஒரே நேரத்தில் சமாளித்து சண்டை போடக் கூடியது.

ஆனால் கடற்புலிகளிடம் ஒரு ஆயுதம் இருக்கிறது. அதுதான் கடற்படையினருக்கும் பெரும் அச்சுறுத்தல்.

அந்த ஆயுதம்தான் கடற்கரும்புலிகள். அதற்கு ஈடான ஆயுதத்தை கடற்படையினர் பெற்றுக்கொள்ள முடியாது.

கொந்தளிக்கும் கடல்நடுவே கடற் சண்டை ஆரம்பித்துவிட்டால் கடற்கரும்புலிகளின் வெடிகுண்டுப் படகுகள் ஏதாவது ஒரு திசையில் இருந்து உச்சவேகத்தில் சீறிவந்து கடற்படைப்படகுடன் மோதிவிடுகின்றன.

சீறிவரும் கடற்கரும்புலிப் படகுகளை நோக்கி கடற்படையினர் தாக்கும்போது குறி சரியாக அமைந்தால் கடற்கரும்புலிப் படகை எட்டவைத்தே வெடிக்கச் செய்து விடலாம். குறிதப்பினால் கரும்புலிப் படகு மோதிவிடும்.

கடற்கரும்புலிப் படகு ஒன்றோ அல்லது இரண்டோ தனியாக வருமானால் கடற்படையினர் அவற்றை எட்டத்தில் வைத்தே தாக்கிவிடமுடியும்.

அவ்வாறு தாக்கியும் உள்ளனர். ஆனால் கடற்புலிகள் கடற்தாக்குதலில் இரண்டுவிதமான தாக்குதல் உபாயங்களைக் கையாளுகின்றனர்.

ஒன்று, கடற்கரும்புலிகளின் நேரடியான தாக்குதல்.

இரண்டாவது; கடற்சண்டை ஒன்றுக்குள் கடற்படையினரை கடற்புலிகள் இழுத்துக்கொண்டிருக்க, கடற்கரும்புலிகள் புகுந்து மோதுவது.

திருமலைக் கடற்பரப்பில் நடைபெற்றது இரண்டாவது வகையான உபாயம்.

ரோந்துசென்ற டோராப்படகை கடற்புலிகளின் படகுகள் சுற்றிவளைத்து வியூகம் அமைத்துவிட்டன. கடற்புலிப் படகுகளில் இருந்து இயந்திரத் துப்பாக்கிகள் டோராவை குறிவைத்துத் தாக்கத் தொடங்கின்றன.

டோராவில் இருந்து கடற்படைத்தளத்துக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கப்படுகிறது. உடனே சண்டையில் இருந்து பின்வாங்கித் திரும்புமாறு டோராவுக்கு உத்தரவு பறக்கிறது.

டோரா கடற்புலிகளின் வியூகத்துக்குள் இருந்து உடைத்துக்கொண்டு வெளியேற வழிதேடுகிறது. கடற்புலிகளின் படகுகள் நான்கு புறமும் நின்று சுட்டுக்கொண்டிருக்கின்றன.

எந்த வழியால் உடைத்துக்கொண்டு செல்லலாம் என்று முடிவு செய்வதற்கு இடையே கடற்கரும்புலிகளின் படகு ஒன்று வந்து டோராவுடன் மோதுகிறது. டோரா வெடித்து மூழ்கத் தொடங்குவதற்கு இடையில் கடற்புலிகளின் படகுகள் டோராவை நெருங்கி உள்ளே இருப்பவர்கள் மீது வேட்டுக்களைப் பொழிகின்றன.

**வடக்கு-கிழக்கு யுத்தத்தில் முற்றுகையிடவும் முற்றுகையை உடைக்கவும் கடற்பாதை பிரதான பாத்திரம் வகிக்கிறது.**



அதனால் டோராவில் இருந்த கடற்படையினர் எவரும் கடலில் குதித்து தப்ப முடியாமல் போகிறது. தகவலறிந்து உஷாராகி விட்ட மற்றொரு டோராப் படகு ரோந்தை நிறுத்திவிட்டு கடற்படைத்தளம் நோக்கி திரும்பிச் செல்ல, கடற்புலிகள் அதனையும் தாக்குகிறார்கள்.

ஆனாலும் இரண்டாவது டோரா வியூகத்துக்குள் சிக்காமல் சிறு காயங்களுடன் தளம் திரும்பிவிட்டது.

கடற்படையினரின் யுத்தக் கப்பல்களும் பீரங்கிப்படகுகளும் முன்கூட்டியே தயாராகிச் செல்லும் போது கடற்புலிகளால் நேரடி மோதலில் ஈடுபட இயலாது.

தரைச் சண்டையைப் போலவே கடற் சண்டையிலும் கடற்படையினர்மீது அவர்களது பலம் குறைவான நேரத்தில் தாக்குதல் நடத்துவதுதான் கடற்புலிகளின் தந்திரமாக இருக்கிறது.

வடபகுதி முகாம்களுக்கு ஆயுதங்களையும், படையினரையும் கொண்டு செல்லும்போது கடற்படையினரின் போர்க் கப்பல்களும், பீரங்கிப் படகுகளும் அதிக எண்ணிக்கையில் செல்லுகின்றன. வான் வழியான கண்காணிப்பும் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.

கடலில் கடற்புலிகளின் படகுகள் தென்பட்டால் வான்படையினர் தாக்குதல் தொடுத்துவிடுவார்கள். கடற்படையினரின் போர்க்கப்பல்களும் விழிப்பாகச் செல்வதால் கடற்புலிகள் அவற்றை நோக்கி நகர்வது கடினமாக இருக்கும்.

அதனால்தான் கடல் வழிமூலமான பாரிய விநியோக நடவடிக்கைகளின்போது கடற்புலிகள் தாக்குதல் நடத்த முடியாமல் இருக்கிறது.

படிப்படியாக கடற்புலிகளின் பலத்தை விஸ்தரித்து பாரிய கடற்சண்டைகளுக்கு கடற்புலிகள் தயாராகலாம் என்று படையினர் நினைக்கின்றனர்.

அதனால்தான் கடற்புலிகளின் தளத்தை நிர்மூலமாக்கிவிட கங்கணம் கட்டிக்கொண்டு பாரிய தாக்குதலுக்குச் சென்றனர்.

கடற்புலிகள் தயாராவதற்கு இடையில் தாம் முந்திக்கொண்டு அவர்களது முதுகெலும்பை உடைத்துவிடலாம் என்பதுதான் படையினரின் பாய்ச்சலுக்குக் காரணமாக இருந்தது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் முற்றுகையிடவும், முற்றுகையை உடைக்கவும் கடல்வழிப் பாதை பிரதான பாத்திரத்தை வகிக்கிறது.

யுத்தத்தில் அழித்தொழிப்பு இரண்டு கட்டங்களைக் கொண்டிருக்கும்.

ஒரு கட்டம் எதிரியின் எதிர்த்துப் போரிடும் ஆற்றலை அழிப்பது.

கட்டம் இரண்டு; எதிரியை உடலரீதியாக அழித்தொழிப்பது.

முதல் கட்டம் இல்லாவிட்டால் இரண்டாவது கட்டத்துக்குச் செல்ல முடியாது.

படையினர் யாழ் குடாநாட்டை கைப்பற்றி நிலை கொண்டுள்ளனர். கிளிநொச்சி நகரையும் பிடித்து வைத்திருக்கின்றனர்:

ஆனால் வடபகுதிக்கள நிலவரத்தைப் பொறுத்தவரை புலிகளின் தளம் மாறியிருக்கிறதே தவிர போரிடும் பலம் குறைந்துவிடவில்லை.

யாழ் குடாநாட்டுக்குள் புலிகளின் அணிகள் நிலைகொண்டுள்ளன. வன்னியிலிருந்து கடற்பாதை மூலமாக யாழ் குடாநாட்டுக்குள் புலிகளின் அணிகள் போய்வருகின்றன. வன்னியில் நிலைகொண்டுள்ள புலிகளின் தலைமைப்பீடம் நாடெங்கும் உள்ள தனது அணிகளுக்கு விநியோகத்தை மேற்கொள்ளும் பிரதான பாதையாகவும் கடற்பாதை இருக்கிறது.

மட்டக்களப்பில் இன்று காணப்படும் புலிகளின் பிரமுகர் ஒருவர் நாளை வன்னிப் பகுதியில் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். தரைப்பாதைகளில் படையினர் விடிய விடிய விழித்திருக்கும்போது, கடற்பாதை வழியாக கிழக்கில் இருந்து வன்னிக்கு புலிகளின் அணிகள் சுலபமாகப்போய் வருகின்றன.

நேரடியாக கொழும்புக்குள் வெடிமருந்துகளை கொண்டுவரவும் கடற்பாதையையும் புலிகள் பயன்படுத்தி உள்ளனர்.

தமிழகக் கடற்கரைகளில் என்னதான் கண்காணிப்புக்கள் செய்யப்பட்டாலும், இந்தியாவிலிருந்து தமக்குத் தேவையான பொருட்களை அதிவேக விரைவுப் படகுகள் மூலமாக புலிகள் இப்போதும் கொண்டுவந்து சேர்த்துவிடுகின்றனர்.

புலிகள் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு பொருளாதாரத் தடை விதிப்பது மூலம் அரசாங்கம் செய்யக்கூடியது அங்குள்ள மக்களைப் பட்டினி போடுவது மட்டும்தான்.

பெற்றோலும், டீசலும், மருந்துப் பொருட்களும் புலிகளிடம் பற்றாக்குறையாக இருப்பதாக படைத்தரப்பினர் கூறிக்கொண்டிருந்தாலும், புலிகளின் வாகனங்களுக்குப் பெற்றோலும், டீசலும் தாராளமாக கிடைத்துக்கொண்டு தான் இருக்கிறது. புலிகளின் பிரத்தியேக மருத்துவமனைகளும் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன.

கிளிநொச்சி வைத்தியசாலை இல்லையென்றால் காயமடைந்த புலிகளைக் காப்பாற்ற முடியாது என்று படையினர் தரப்பு திருப்தியோடு சொல்லிக்கொள்கிறது.

அரச மருத்துவமனைகள் இருக்கும்போது அதனைப் புலிகள் பயன்படுத்துகின்றனர். அந்த வசதி இல்லாதபோது தமது பிரத்தியேக மருத்துவ மனைகளில் தமது உறுப்பினர்களுக்கு சிகிச்சை செய்கின்றனர்.

தனியான டாக்டர் குழு ஒன்று புலிகள் இயக்கத்தினரிடம் இருக்கிறது. புலிகள் இயக்கத்தில் இணைந்த பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களும் அக் குழுவில் இருக்கின்றனர்.

எந்தவொரு பாரிய இயக்கமும் தனக்கான இரகசிய வைத்தியசாலை, டாக்டர்கள் என்ற வசதிகளை உருவாக்கிக்கொள்ளாமல் இருப்பதில்லை.

ஆனால் மருந்துகள் மட்டும்தான் பிரச்சனையாக இருக்கும். கடற்பாதை மூலமாக புலிகள் மருந்துகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்நிலையில் அரசாங்கத்தின் தரைப் பாதை வழியான முற்றுகைகள், பொருளாதாரத் தடைகள் போன்றவற்றின் மூலமாக புலிகளின் எதிர்த்துப் போராடும் ஆற்றலைப் பலவீனமாக்க முடியவில்லை.

கடற்பாதையைப் பயன்படுத்துவதில் புலிகள் பெற்றுள்ள தேர்ச்சியும், கடற்புலிகளின் வளர்ச்சியும், கடற்கரும்புலிகளின் உருவாக்கமும் புலிகளின் இராணுவ ஆற்றலைத் தக்கவைப்பதில் கணிசமான பங்கை வகிக்கின்றன.

போர் நடைபெறும் புவியியல் நிலவரத்துக்கு ஏற்ப படையணிகளை கட்டி எழுப்புவது ஒரு முக்கிய தேவையாகும்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தைப் பொறுத்தவரை கடல் ஒரு தீர்க்கமான பாத்திரம் வகிக்கிறது. அதற்கேற்ப கடற்புலிகள் அணியை புலிகள் உருவாக்கியிருக்காவிட்டால் இப்போது புலிகள் இயக்கத்தின் பாடு நெருக்கடியாகி இருக்கும்.

பொருளாதாரத்தடை, தரை முற்றுகைகள், யாழ் குடாநாட்டை இழந்தமை, தமிழகத்தில் பின்தளம் இல்லாத சூழல் என்று பல காரணிகளும் சேர்ந்து புலிகள் இயக்கத்தை நச்சுச் சூழல் ஒன்றுக்குள் தள்ளக்கூடிய சாத்தியம் ஏற்பட்டிருக்கும்.

படைத்தரப்பினரும் கடற்பகுதியின் முக்கியத்தை உணர்ந்தே இருக்கின்றனர். அதனால்தான் கடற்படையினருக்கான நவீன போர்ப்படகுகளும், கப்பல்களும் கோடிக்கணக்கான பெறுமதியில் கொள்வனவு செய்யப்படுகின்றன.

கடற்படையினரும், கடற்புலிகளும் இரண்டு கடமைகளைச் செய்கின்றனர்.

ஒன்று, தமது தரப்பினருக்கான விநியோகத்தை மேற்கொள்வது.

இரண்டு; மறு தரப்பினரின் விநியோகப் பாதையைத் தடுப்பது.

ஆனால் ஒரு வித்தியாசம்; படையினருக்கு கடல்வழி விநியோகப் பாதை தவிர, வான் வழியான விநியோகப் பாதையும் இருக்கிறது. புலிகளுக்கு அது கிடையாது. எனவே கடற்புலிகளின் முக்கியத்துவம் அதிகமாகியிருக்கிறது.

ஆரம்பத்தில் கடற்புலிகள் அமைப்பில் வடபகுதியின் கடலோரப் பகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள்தான் அதிகமாக இருந்தனர்.

நீச்சல், சுழியோடுதல், படகு செலுத்தல் போன்றவற்றில் ஓரளவு முன் அனுபவம் உள்ளவர்களாக இருந்தவர்கள் கடற்புலிகள் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பின்னர் தீவிரப் பயிற்சிகள் மூலம் கடற்புலிகள் உருவாக்கப்பட்டனர். பெண் உறுப்பினர்களையும் கடற் சண்டைகளுக்குத் தயார்படுத்தியமை மூலம் கடற்புலிகளின் அணிகள் விஸ்தரிக்கப்பட்டன.

தற்போது கிழக்கு மாகாணத்திலும் கடற்புலிகளின் அணிகளுக்கு ஏற்றவர்களை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பித்துள்ளன.

கடற்புலிகளின் விசேட தளபதி சூசை திருமலையில் பல கூட்டங்களை நடத்தியிருக்கிறார். கிழக்கு மாகாணத்தின் பிற பகுதிகளுக்கும் சென்று கடற்புலிகளின் கூட்டங்களை நடத்துவதும், புதியவர்களை உள்வாங்குவதுமே சூசையின் விஜயத்தின் நோக்கம்.

கிழக்கு மாகாணத்தில் கடற்புலிகள் அணியை பலப்படுத்தும் - முன்னோடி நடவடிக்கையாக திருமலை கடற்பகுதித் தாக்குதலுக்கு திருமலை மாவட்ட உறுப்பினர் ஒருவரும் அனுப்பப்பட்டார்.

திருமலை மாவட்டம் மூதூரைச் சேர்ந்த மேஜர் நளினன் (தெய்வேந்திரன் யோகேஸ்வரன்) என்பவர்தான் கடற்கரும்புலிப் படகை செலுத்திச் சென்று டோராவுடன் மோதி வெடித்துள்ளார். அப் படகில் இருந்த மற்றொரு கடற்கரும்புலி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

கிழக்கு கடற்பகுதியில் கடற்புலிகளின் வெடிகுண்டுப் படகுகள் பெருமளவில் அணிவகுக்கப் போவதற்கான முன்னோட்டமாகவே திருமலைக் கடற்தாக்குதல் அமைந்துள்ளது.

கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுதான் கடற்புலிகளின் முதலாவது குறியாக இருக்கும்.

இதேவேளை கடற்புலிகளின் தாக்குதல் காரணமாக அரசதரப்பும், படை உயர் மட்டமும் பலத்த சந்தேகங்களில் சிக்கியிருக்கிறது.

சமீபத்தில் சில செய்திகளை அரச பிரச்சார சாதனங்கள் வெளியிட்டன.

புலிகளின் ஆயுதக் கப்பல் புறப்பட்டு வருகிறது. என்பது ஒரு செய்தி. கிழக்கு கடலில் மர்மக் கப்பல் என்பது இன்னொரு செய்தி.

உண்மையில் கப்பல் புறப்பட்டுவிட்டதாக செய்தி கிடைத்தால் அதனை இரகசியமாக வைத்திருந்து, வருகிற கப்பலை மடக்கிப் பிடிக்கத்தான் திட்டமிட வேண்டும்.

கப்பல் வருகிறது என்று புலிகளுக்குக் கேட்கக் கூடியதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டியதில்லை.

உண்மையில் கப்பல் புறப்பட்டிருந்தால் புலிகள் என்ன செய்திருப்பர்?

தமது தகவல் தொடர்பு சாதனம் மூலமாக கப்பலுக்கு செய்தி அனுப்புவர். "விஷயம் தெரிந்துவிட்டது திரும்பிச் செல்லவும்" என்று உத்தரவு பறந்திருக்கும்.

இதெல்லாம் தெரியாமல் அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் செய்தி வெளியிட்டிருக்கும் என்று நினைப்பதற்கில்லை.

விஷயம் இதுதான்; புலிகள் கப்பலில் ஆயுதம் கொண்டு வந்துவிடுவார்களோ என்று ஒரு சந்தேகம். அதைத் தடுக்க வேண்டுமானால் கடலில் ரோந்துகளை தீவிரப்படுத்த வேண்டும். இரவிரவாக கடலில் தரித்து நிற்கவேண்டும். அதனால் கடற்புலிகளின் தாக்குதலையும் எதிர்கொள்ள நேரும்.

எனவே- புலிகளுக்கு ஆயுதக் கப்பலை தருவிக்கும் யோசனையே எழாமல் செய்துவிடுவது புத்திசாலித்தனம். ஆயுதக் கப்பல் வருகிறது வருகிறது என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் கடலில் கண்காணிப்பு இருக்கலாம் என்று புலிகள் நினைப்பர். அதனால் கப்பலை தருவிக்கும் யோசனையே எழாது.

கப்பல் புறப்பட்டுவிட்டது என்ற செய்தியின் நோக்கம், புறப்படும் யோசனை இருந்தால் கைவிடட்டும் என்ற புத்திசாலித்தனம்தான்.

கடற்பகுதியில் முழுநேர பாதுகாப்பை மேற்கொள்ள முடியாத பலவீனமும் அச் செய்தியில் மறைந்துள்ளது.

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



முன்னாள் அதிகாரமுடையார் போகப்போகிறார் என்று வைத்தியர்கள் முடிவுசெய்ய முன்னரே பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும் முடிவுபண்ணி விட்டார்களாம். அவருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள், புகைப் படங்களையெல்லாம் ரெடி பண்ணித் தயார் நிலையில் இருந்தவையாம். போய்விட்டார் எண்டு செய்தி கிடைத்தவுடன் திரட்டிவைச்சதையெல்லாம் அச்சில் ஏற்றிப் போட்டினம். அரசியல்வாதிகளும் ஒரு இரண்டு மூன்று கிழமைக்கு முன்னரே இறுதிக் கிரியைகளை எப்படி நடத்துவது எண்டு இரகசிய ஆலோசனை நடத்தி ரெடிப் பொஸிசனில் இருந்தவையாம். அவர் உருவாக்கின பதவியில் இருப்பதால்தான் முன்னணிக் கட்சியின் ஆட்சியும் பத்திரமாகத் தொடர்கிறது. அதுக்காக எண்டாலும் ஒரு நாள் விடுமுறை விட்டிருந்தால் மனம்திறந்து 'தாங்யூ' சொன்னமாதிரி இருந்திருக்குமல்லோ.

பொன்னான தலைவரின் புத்திரர் சமீபத்தில் நல்ல பெயர் எடுத்தது சில அரசியல்வாதிகளுக்கும் பிடிக்கேல்லையாம். "நாங்கள்தான் குறிப்பிட்ட விவகாரத்தில் முதன் முதலாக அறிக்கை விட்டவர்கள், அதையும் செய்தியாகப்போடுங்கோ" எண்டு சில பத்திரிகைகளுக்கு அன்புத் தொல்லை கொடுக்கிறார்களாம். குமாரர் வாயைத் திறக்க முன்னர் தாங்கள் வாயைத் திறக்கவேணும் எண்டு சில அரசியல்வாதிகள் திட்டவட்டமான போர்த்தந்திரம் வகுத்துள்ளதாகத் தகவல். சபாஷ் சரியான போட்டி. விஷயம் நடக்குதோ இல்லையோ யார் முதலில் கண்டிப்பது எண்ட போட்டியால் கண்டபடி அறிக்கைப்போர் அரம்பமாகப்போகுது. தப்பிக்கொள்ள நினைப்போர் பதுங்குகுழி தேடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

கூட்டான கட்சியினருக்கு குயுக்தியான யோசனை தோன்றியிருக்கு. சனத்திடம் கையெழுத்து வாங்கப்போகினமாம். இதெல்லாம் என்னத்துக்கு நடக்குது தெரியுமோ? அடுத்த தேர்தலில் வாக்குவேட்டைக்கு ஒரு ஒத்திகை மாதிரியும் இருக்கும். தங்களுக்கு சப்போர்ட் இருக்கு எண்டு காட்டி அதிகாரமட்டத்தாரிடம் பின்கதவால் பெற வேண்டியதை பெறக்கூடியதாகவும் இருக்கும். எதிரான கையொப்பம் போடச்சொல்லி சனத்திடம் கேட்பினம். பட்ஜெட் வரப்போகுது. அதிகாரத்தரப்புக்கு ஆதரவாக தாங்கள் கைகளை உயர்த்திக்கொண்டு நிப்பினம். அணைக்கிற மாதிரி நடித்துக்கொண்டு அடித்தால்தான் அதிகாரத்தரப்புக்குக் கோபம் வரும். அடிக்கிறமாதிரி நடிச்சுக்கொண்டு அணைத்தால் கோபம் வருமோ. வராது! இதுதான்டா சாணக்கியம்.

கிழக்கின் தனித்துவக் கட்சித் தலைவருக்கும் அதிகாரமுள்ளவருக்கும் இடையில் சமரசம் ஏற்பட்டுப் போச்சல்லோ. இரு தரப்பும் விட்டுக் கொடுப்போடுதான் கை குலுக்கினவையாம். கிழக்குத் துறைமுக விவகாரத்தில் அதிகாரமுள்ளவர் விட்டுக்கொடுத்தாராம். தலைநகரத் துறைமுக விவகாரத்தில் அதிகாரமுள்ளவர் சிபாரிசு செய்த நிறுவனத்திற்கு குத்தகை கொடுக்க தனித்துவத்தலைவரும் உடன்பட்டாராம். முன்னர் அந்த விடயத்தில் தனது சிபாரிசு கவனிக்கப்படவில்லை. எண்ட கோபத்தில்தான் அதிகாரமுள்ளவர் கிழக்குத் துறைமுக விவகாரத்தை கிளறியதாகக் கேள்வி. என்னதான் சொன்னாலும் கிழக்குத் துறைமுக விவகாரத்தில் தான் எடுத்த முடிவில் உடும்புப்பிடி காட்டி சாதிச்சுப்போட்டார் தனித்துவத் தலைவர். இப்ப சமரசத்தால் இரண்டு தரப்புக்குமே நஷ்டம் இல்லை.

தனக்கு அடுத்த தலைவரை உருவாக்க ரெண்டு எழுத்துத் தலைவர் முயற்சி செய்வதாக தமிழ் கட்சிகள் சில கதைகட்டி விட்டிருக்கினம். ரெண்டு எழுத்தாரைப் பொறுத்தவரை ஒரு உறைக்குள் ஒரு கத்திதான். தலைவர் விரும்பினால்கூட இரண்டாவது கத்தியாக உறைக்குள் செல்ல யாரும் தயாராக இல்லைப் பாருங்கோ. ஏற்கனவே அடுத்த தலைவராக கருதப்பட்டவையின் பேச்சு மூச்சைக் காணேல்லை. ரெண்டு எழுத்துத் தலைவருக்கு தன்னை நெருங்க யாராலும் முடியாது எண்ட நம்பிக்கை அபாரமாக இருக்குதுங்கோ. அதனால் அடுத்த தலைவர் பற்றி இப்ப ஏன்யோசிக்க போகிறார். கதைகட்டி விடுகிறவைக்கு யார் அப்படி உருவாகும் தலைவர் எண்டு பெயரைச் சொல்லமட்டும் முடியேல்லை.

திருவான மலையின் 'தங்கமான' வெகுஜனப் பிரதிநிதி இலண்டனுக்குப் போனவரல்லோ. அங்கு 'வானொலி' ஒன்று பேட்டி எடுத்ததாம். "நீங்கள் ஏன் பதவி விலகக் கூடாது" எண்டு கேள்வி கேட்டவையாம். எனக்கு வாக்குப் போட்ட மூதூரில் இருந்து ஒரு ஆளாவது சொல்லட்டும் ரிசைன் பண்ணுகிறேன்" எண்டு போட்டாராம் ஒரு போடு. என்ன தைரியத்தில் சொன்னவர் எண்டு கேட்கிறியளோ. அப்படிச் சொல்பவர்களிடம் எனக்குத்தான் போட்டீர்கள் எண்டு எப்படி நம்புறது எண்டு கேட்கலாம் தானே. சட்டம் படிச்சவரல்லோ திட்டம் இல்லாமல் சவால் விடுவாரோ?

காலத்துக்குப் பொருத்தமான ஒரு குட்டிக் கவிதை.

"போதி மரம்
இன்னமும் இருக்கிறது
ஆனால்
புத்தர்களைத்தான்
காணோம்."

-(அ. சித்திகா)



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்

அற்புதன் - எழுதுவது

# 102 அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# "தாயகம் காக்க ஊருக்கு நூறுபேர்"

## இரண்டு கைக்குண்டுகள்

1987 ஆகஸ்ட் 18

ஸ்ரீ ஜெயவர்தனபுர பாராளுமன்றத்தின் அழகான கட்டிடத்துக்குள் ஆபத்து காத்துக்கொண்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் பாராளுமன்றக் கட்டிடத்துக்குள்தான் நடைபெறும்.

ஜனாதிபதிதான் கூட்டத்துக்கு தலைமை தாங்குவார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் காரசாரமான விவாதங்கள் எழக்கூடும் என்று எதிர்பார்த்துத்தான் ஜே.ஆர். தயாராக வந்திருந்தார்.

ஜே.ஆர்., பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி மற்றும் அமைச்சர்கள், ஆளும் கட்சிகள் அனைவரும் வந்து சேர்ந்ததும் கூட்டம் ஆரம்பமானது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதுதான் முதலாவது கைக்குண்டு வீசப்பட்டது.

பயங்கரமான சத்தத்துடன் வெடித்தது. ஜே.ஆர். இருந்த பக்கமாகவே கைக்குண்டு வீசப்பட்டது. ஆனாலும் ஜே.ஆர்.இருந்த இருக்கை அருகே விழாமல் முன்னாலேயே விழுந்து வெடித்துவிட்டது.



ஜே.வி.பி. உறுப்பினர்கள்; காட்டுக்குள் பயிற்சி

வெடித்த இடத்தில் இருந்தவர்கள் காயமடைந்தனர்.

கைக்குண்டு வெடித்ததும் எல்லோரும் ஒருகணம் திகைப்பில் உறைந்து போயினர்.

ஜே.ஆர். அருகில் இருந்த பிரேமதாசா ஒரு நொடி அதிர்ந்துபோனாலும் மறுநொடியே உஷாராகிவிட்டார்.

தன் இருக்கையில் இருந்து துள்ளி எழுந்த பிரேமதாசா அருகில் இருந்த ஜனாதிபதி ஜே.ஆரின் கையைப் பிடித்து இழுத்தார்.

இழுத்தபடியே ஒரு மேசைக்குப் பின்னால் ஜே.ஆரை அழுத்தி இருக்க வைத்துக்கொண்டு தானும் குனிந்து மறைந்துகொண்டார்.

அதேநேரம் ஜே.ஆரின் இருக்கை நோக்கி இரண்டாவது கைக்குண்டு வீசப்பட்டது. இம்முறை குறிதப்பவில்லை. ஆசனமருகே வெடித்துச் சிதறியது.

ஆசனத்தில் இருந்திருந்தால் ஜே.ஆர். தப்பியிருக்க சந்தர்ப்பமே இருந்திருக்காது.

பிரதமர் பிரேமதாசா அவரை இழுத்து மறைத்து துரிதமாகச் செயற்பட்டதால் ஜே.ஆர். உயிர்தப்பினார்.

ஜனாதிபதி ஜே.ஆரை பத்திரமாகப் பதுங்க வைத்துவிட்டு பிரேமதாசா பதுங்கிக்கொண்டதால் இரண்டாவது கைக்குண்டு வெடிப்பால் ஏற்பட்ட சிதறல்கள் பிரேமதாசாவின் உடலில் சிறு காயங்களை ஏற்படுத்தியது.

ஜே.ஆரின் உடலில் மட்டும் சிராய்ப்புக்காயங்கள்கூட ஏற்படவில்லை.

செய்வதறியாது தனது இருக்கையில் திகைத்திருந்த ஜே.ஆரை பிரதமர் பிரேமதாசா இழுத்து மறைத்திருக்காவிட்டால் 1987 ஆகஸ்ட் 18ம் திகதிதான் ஜே.ஆர். மறைந்த தினமாகியிருக்கும்.

## ஜே.ஆர். மறைவு

இந்த அரசியல் தொடரில் ஜே.ஆரைக் கொல்லத் தீட்டப்பட்ட சதி பற்றி சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தேன். பூரணமாக அதனை விபரிப்பதற்கு முன்னரே ஜே.ஆர். கடந்தவாரம் 1.11.96ல் மறைந்துவிட்ட செய்தி முந்திக்கொண்டு வந்துவிட்டது.

ஜே.ஆர். ஒரு தீர்க்கதரிசி. நேர்மையாளர். ஐக்கிய இலங்கை உருவாக அயராது உழைத்தவர். அவர் ஒரு சகாப்தம் என்றெல்லாம் துணிந்து பொய்சொல்லமாட்டேன்.

1977இனக்கலவர நேரத்தில் போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று நிராயுதபாணிகளான மக்களை நோக்கி அவர்விட்ட சவால் செவிகளில் இன்னமும் ஒலிக்கிறது.

ஒருவர் மறைந்துவிட்டால் அந்த மரணத்தோடு சேர்ந்து அவரது குறைகளையும் மறந்துவிடவேண்டும் என்பது சம்பிரதாயம்.

ஆனால் ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகக் காரணமாக இருந்தமையை மறந்துவிட முடியவில்லை. அதனால் அந்த சம்பிரதாயத்தோடு உடன்படமுடியவில்லை.

எனினும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்ற விடயத்தில் அதற்கான எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சாமல் ஜே.ஆர். செயற்பட்டதை பாராட்டலாம்.

எதிர்ப்புக்கள் எழுகின்றன என்று பூச்சாண்டி காட்டாது, அந்த எதிர்ப்புக்களை ஒடுக்கியது அரசியல் துணிச்சலுக்கு அடையாளம் எனலாம்.

## லலித் போராட்டம்

பாராளுமன்ற கட்டிட கைக்குண்டு வெடிப்பில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி படுகாயமடைந்தார்.

மாத்தளை மாவட்ட அமைச்சர் கீர்த்தி அபேவிக்கிரம கொல்லப்பட்டார். பாராளுமன்ற ஊழியர் செனதீர என்பவரும் பலியானார். பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் காயமடைந்தனர்.

படுகாயமடைந்த லலித் அத்துலத்முதலி மரணத்தோடு கடுமையாக போராடவேண்டியிருந்தது. டாக்டர்களின் தீவிர முயற்சி அவரது உயிரைக் காப்பாற்றியது.

கைக்குண்டு வீசியது ஜே.வி.பி என்றாலும், லலித் குண்டுவெடிப்பில் கொல்லப்படவில்லையே என்று தமிழ் அமைப்புக்களும் வருந்தவே செய்தன.

# ஐந்து நாட்களில் 2 ஆயிரம் வன்முறைச் சம்பவங்கள்

புலிகள் இயக்கத்தின் கொலைப்பட்டியலில் அப்போது முதலிடத்தில் இருந்தவர் லலித் அத்துலத்முதலி.

மருத்துவமனையில் படுக்கையில் இருந்துகொண்டு லலித் எழுதிய குறிப்பில் பின்வருமாறு கூறியிருக்கிறார்;

**"பாராளுமன்றத்திலிருந்து மருத்துவமனை நோக்கி மோட்டார் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. எனது எண்ணங்கள் விரிகின்றன. முடிவு தவிர்க்க முடியாதது. அது அண்மித்துக் கொண்டும் இருக்கலாம். விரைவாகவும் இருக்கலாம். நான் அதற்குத் தயாராக இருக்கவேண்டும்.**

**எனக்கு மிக நெருக்கமான மனைவி, குழந்தை, மருமகன், மருமகள், சகோதரன், சகோதரிகளைப் பற்றிய கவலை இருக்கிறது."**

தான் ஒருவேளை இறந்துவிடக்கூடும். என்று கருதியே லலித் அந்தக் குறிப்பை எழுதினார்.

ஆகஸ்ட் 18 இல் பாராளுமன்றக் கட்டிடத்தில் கைக்குண்டு வீசியபின்னர் ஜே.வி.பி. தனது நடவடிக்கைகளை துரிதமாக்கியது. ஆகஸ்ட் 19ம் திகதி களுத்துறை மாவட்டத்தில் உள்ள மொறகொல்ல மரக்கூட்டுத்தாபனத்தில் இருந்த வானொலித் தொலைத்தொடர்புக் கருவிகள் ஜே.வி.பியினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

ஆகஸ்ட் 28ம் திகதி ஜே.வி.பி.யினரின் செய்தி மடலான 'தேசப் பிரேமி' வெளியானது.

'தேசப்பிரேமி'யின் முதல்வெளியீட்டில் ஒருவருக்கு முதல் மரியாதை தெரிவிக்கப்பட்டிருந்தது.

**ராஜீவ் காந்தியைத் தாக்கியவரான ரோகன டி சில்வாவைத்தான் தேசப்பிரேமி பாராட்டி இருந்தது.**

இதேகாலத்தில் ரோகன டி சில்வாமீது விசாரணை நடைபெற்றது.

"ராஜீவ் காந்தியை ஏன் கொல்ல நினைத்தாய்?" என்று கேட்கப்பட்டபோது, ரோகனடி சில்வா சொன்ன பதில் இது;

**"இந்த ஒப்பந்தம் மூலமாக பிரபாகரன் வடக்கு-கிழக்கின் தலைவராகிவிடுவார். அப்படி நடந்தால் ராஜீவுக்கு அணிவகுப்பு மரியாதை கொடுக்கப்பட்டதுபோல, பிரபாகரனுக்கும் நான் மரியாதை செலுத்தவேண்டி இருக்கும்."**

## வன்முறைகள்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக 1987 ஜூலை 28முதல் ஆகஸ்ட் 2ம் திகதிவரை மட்டும் தென்பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள், வன்செயல்களின் எண்ணிக்கை 2527.

உத்தியோகபூர்வ தகவலின்படி 16 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் படுகாயமடைந்தனர். 529 அரசாங்க மற்றும் கூட்டுத்தாபனக் கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டன.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 500க்கும் மேற்பட்ட பஸ்வண்டிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. 187 தொலைத்தொடர்புக் கம்பங்கள் சேதமாக்கப்பட்டன.

331 துப்பாக்கிகள் கொள்ளையிடப்பட்டன. 561 கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றன.

ஜே.வி.பி. அசுர வளர்ச்சிபெறத் தொடங்கியது.

நாகொட பொலிஸ் பிரிவில் தங்கஸ்வலயில் ஒரு இராணுவ முகாம் இருந்தது.

அந்த இராணுவ முகாமுக்குள் இருந்து தகவல்களைத் திரட்டியது ஜே.வி.பி. இராணுவத்தில் ஜே.வி.பி. ஆதரவாளர்களும் இருந்தனர். இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல்களுக்கு ஜே.வி.பிக்கு சாதகமாக இருந்த பிரதான அம்சம் அதுதான்.

செப்டம்பர் 28ம் திகதி தங்கஸ்வல இராணுவ முகாமை ஆயுதம் தாங்கிய ஜே.வி.பி. உறுப்பினர்கள் 15 .பேர் வரை சுற்றிவளைத்தனர்.

கிடைத்த விபரங்கள் துல்லியமாக இருந்தன. அதனால் கச்சிதமாகத்திட்டமிட்டு முகாமை விழுத்திவிட்டார்கள்.

அதிகம் சண்டைபோடவேண்டியும் இருக்கவில்லை. ஒரு இராணுவவீரர் மட்டும் எதிர்ப்புக் காட்ட முற்பட்டார். அவர் கொல்லப்பட்டார்.

ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கைப்பற்றிக்கொண்டு சென்றுவிட்டனர்.

இந்த நடவடிக்கைகளால் ஜே.வி.பி.யின் வளர்ச்சி கிடு கிடுவென்று உயர்ந்தது. இளம் வயதினரான ஆண்களும் பெண்களும் ஜே.வி.பி. இயக்கத்தில் சேருவதில் ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

## கூட்டமைப்பு

சிறீலங்கா சுதந்திரக் கட்சி, தினேஷ் குணவர்தனாவின் தலைமையிலான மகாஜன எக்ஸத் பெரமுனை, ஆகிய கட்சிகளும் ஜே.வி.பியும் இணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கிக் கொண்டன.

அந்தக் கூட்டமைப்புக்கு 'மௌபிம சுரக்கீம வியாபாரய' என்று பெயர் சூட்டப்பட்டது. தமிழில் அதன் அர்த்தம்: "தாயகத்தைப் பாதுகாப்பதற்கான இயக்கம். ஆங்கிலத்தில் சுருக்கமாக எம்.எஸ்.வி." என்று அழைக்கப்பட்டது.

இக்கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு மூன்று பௌத்த குருமார்கள் வழிகாட்டினார்கள்.

ஒவ்வொரு சிங்களக் கிராமத்திலும் நூறு இளைஞர்களை திரட்டுவது என்று எம்.எஸ்.வி. தீர்மானித்தது.

**'ஊருக்கு நூறு பேர்' என்று திட்டம் மூலமாக திரட்டப்படும் உறுப்பினர்களை தன்னோடு சேர்த்துக்கொள்ளலாம் என்பதுதான் ஜே.வி.பியின் நோக்கம்.**

இந்த நோக்கத்தை அறிந்துகொண்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா 1987 நவம்பரில் எம்.எஸ்.விக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்றுவிட்டார்.

இந்திய அமைதிப் படை **I.P.K.F** என்று அழைக்கப்பட்டது.

அதனை வைத்து ஜே.வி.பி. சூட்டிய பெயர் இது **'INDIAN PEOPLE KILLING FORCE'** (மக்களைக் கொல்லும் இந்தியப் படை)

பாராளுமன்றக் கட்டிடத்துக்குள் கைக்குண்டு வீசப்பட்டதை அடுத்து இந்திய கடற்படைக் கப்பல் கொழும்பு கடற்பகுதியில் வந்து நங்கூரமிட்டு நின்றது.

ஜே.ஆருக்கு நம்பிக்கை கொடுப்பது போன்ற செயலே அதுவாகும்.

'யோசிக்க வேண்டாம். பிரச்சனை வந்தால் உதவ நாங்கள் இருக்கிறோம்' என்பது போன்ற சமிக்ஞை.

புதுடில்லியோடு நேரடியாக உடனடித் தொடர்புகொள்ளும் வசதியும் ஜே.ஆருக்கு ஏற்படுத்தித்தரப்பட்டது.

ஜே.வி.பியின் வளர்ச்சியும், நடவடிக்கைளும் ஒப்பந்தத்தை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டும். ஒப்பந்தத்தின் கதி அதோ கதியாகவேண்டும். மீண்டும் தமிழீழப் போர் மீண்டும் தொடங்க வேண்டும் என்று ஒருவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர்-பிரபாகரன்.

(தொடர்ந்து வரும்)

## ஸ்பொட் ரிப்போர்ட்

# திருமலைச் சிறை உள்ளே ஒரு நாடகம்

30.10.96 புதன்கிழமை நேரம் இரவு 11 மணி. திடீரென்று திருக்கோணமலை நகரெங்கும் வெடிச்சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன. ஒரு பொலிஸ்காரரின் துவக்கு தவறி வெடித்தாற்கூட எல்லா சென்றிகளிலிருந்தும் பதற்றத்துடன் வெடிகள் பறக்கும். இது சாதாரண நிகழ்வு என்றாலும் சற்று நேரத்தில் ஓய்ந்து விடும்.

ஆனால் அன்று வித்தியாசமாக இருந்தது. வாகனங்கள் ஓடித்திரிந்தன. வெடிகள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தன. மக்கள் மனதில் ஒரே திகில். வெளியே வந்து பார்க்கக் கூட முடியாத நிலை. தொலைபேசி வசதி உள்ளவர்கள் அங்குமிங்கும் தொடர்பு கொண்டு பார்த்தும் என்ன நடந்தது என்பதைச் சரியாக அறிய முடியவில்லை.

அதே வேளை திருக்கோணமலைச் சிறைச்சாலையில் ஒரு நாடகம் அரங்கேறி முடிந்துவிட்டிருந்தது. அது ஊராருக்குத் தெரிய நியாயமில்லைத்தான்.

திருமலைச் சிறைச்சாலை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றில் சிவில் கைதிகள் மற்றைய பிரிவில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான கைதிகள், முன்னைய பகுதி சிறைச்சாலைப் பாதுகாவலர்களின் நிர்வாகத்தில். பின்னையது இராணுவத்தின் கண்காணிப்பில்.

சுமார் 11 மணி இருக்கும். இராணுவப் பொறுப்பில் உள்ள பகுதியில் வீடியோவில் 'இந்தியன்' படம் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தடுப்புக்காவல் கைதிகள் இருபது பேர் அமர்ந்திருந்தார்கள். படம் சுவாரசியமாக இருந்ததால் கடமையிலிருந்த வீரர்களும் ரசித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென ஒரு இளைஞர் எழுந்தார். அவர் பெயர் சசி. யாரும் எதிர்பாரா விதத்தில் காவலுக்கு நின்ற வீரர் ஒருவரை மடக்கினார். அவரைத் தொடர்ந்து காத்திருந்தவர் போல் ஆனந்தகுமார் என்பவர் எழுந்தார். இவர் இன்னொரு வீரரை மடக்கி அவரது துவக்கைப் பறித்து வெடிவைத்தார். காவலுக்கு நின்ற இராணுவ வீரர் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். மற்றவர் குற்றுயிராகக் கிடந்து ஆஸ்பத்திரியில் பிற்பாடு சேர்க்கப்பட்டார். (அவரும் பின்னர் மரணமாகிவிட்டார்)

சிறைச்சாலை குழம்பிவிட்டது. எங்கும் அல்லோல கல்லோலம். இந்தப் பரபரப்புடனேயே நீண்ட ஏணியொன்று சிறைச்சாலைப் பின்புறச் சுவரில் சாத்தப்பட்டது. "எல்லோரும் ஏணியால் ஏறித் தப்புங்கடா" என்றொரு குரல். சிலர் ஏறினர். பலர் தயங்கினர். தயங்கியவர்கள் பயமுறுத்தப்பட்டனர். "நாங்கள் தப்பிய பிறகு அந்தக் கோபத்தில் உங்களைத்தாண்டா கொல்லுவாங்கள். எல்லோரும் ஏறித் தப்பியோடுங்கடா" என்ற கூற்று தயங்கியவர்களுக்கும் அந்தக் கணத்தில் நியாயமாகவே பட்டது.

ஏணி மூலமாக ஏறி அந்த உயரச் சுவரிலிருந்து வெளிப்புறமாகப் பாய்ந்தனர். பாதுகாப்புத்துறையின் கூற்றுப்படி 20 பேருமே பாய்ந்து தப்பிச் செல்ல முயன்றிருக்கின்றனர்.

இச்சிறை உடைப்பு சம்பவத்தின் பின்னர் ஐந்துபேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், ஆறு பேர் சரணடைந்தனர் என்றும் ஐந்துபேர் கைது செய்யப்பட்டனர் என்றும் படையினர் அறிவித்தனர். இதன்படி 20 பேரில் 4பேர் மட்டுமே தப்பிச் சென்றுள்ளனர்.

1.நல்லரத்தினம் சசி (இராணுவவீரரை முதலில் மடக்கியவர்), 2.தியாகராசா நாகரத்தினம், 3.அச்சுதன் ராஜசேகரன், 4.சண்முகம் புஸ்பாகரன், 5.கிருஷ்ணபிள்ளை மேகராஜா ஆகியோரே பலியாகியுள்ளனர்.

இவர்களின் மரணம் தொடர்பாக சந்தேகங்கள் எழுந்துள்ளன. சந்தேகம் எழுவதற்கு பின்வரும் காரணங்கள் அடிப்படையாக உள்ளன.

1.ஐந்து பேருக்கும் நெற்றியில்தான் சூடு விழுந்திருக்கிறது. தப்பியோடும் ஒரு நபரை நெற்றியில் சுடுவதற்கு வாய்ப்பேயில்லை. தப்பித் தவறித் தற்செயலாக அப்படி வெடி விழுந்தால் கூட ஐந்துபேருக்கும் ஒரேவிதமாக நெற்றியில் சூடு பட்டிருப்பது எப்படிச் சாத்தியம்?

2.சம்பவம் நடைபெற்றது இரவு நேரத்தில் என்பதால் குறிபார்த்து ஒரே வெடியில் அதுவும் நெற்றியில் சுட்டிருக்க முடியாது. குறிபார்த்து சுடுவதில் அதி விசேட திறமை உள்ளவரால்கூட செய்யமுடியாத காரியம் அது.

3.பலியானவர்களில் ஒருவரான அச்சுதன் ராஜசேகரன் என்பவர் எதிர்வரும் நவம்பர் 13ம் திகதி விடுதலையாக இருந்தவர். அவர் எதற்காக தப்பிச் செல்ல முயலவேண்டும்?

4.குறிபார்த்துச் சுடுவதில் வல்லமை உள்ளவர்கள் என்றால் மீதிப்பேர் தப்பிச்செல்லவதை ஏன் தடுக்க முடியவில்லை?

ஐந்துபேரில் சசி என்னும் இளைஞர் மட்டும் முதலில் வயிற்றில் சுடப்பட்டுள்ளார். அவர் கையில் துப்பாக்கி இருந்தமையால் சண்டையில் அவரது வயிற்றில் முதல் வெடி விழுந்திருக்க வேண்டும். அந்த வெடியோடு அவர் கீழே விழுந்த பின்னர் நெற்றியில் சுடப்பட்டிருக்கலாம்.

அதன்பின்னர் தப்பியோட முயலாமல் மாட்டுப்பட்ட ஏனைய நால்வரும் அருகில் வைத்து நெற்றியில் சுடப்பட்டனரா? என்பது நியாயமான சந்தேகமாகவே இருக்கிறது.

இதேவேளை தப்பிச்சென்ற நால்வரில் ஒருவர் புலிகளின் பிஸ்டல் குறூப்பைச் சேர்ந்தவர். அவர் பெயர்; ஆனந்தகுமார்.

தப்பிச்செல்ல முயலாமல் படையினரிடம் சரணடைந்தவர்களில் ஒருவர் கடற்புலியைச் சேர்ந்தவர். திருமலையில் கடற்புலிப் படகொன்று கடற்படையினரால் தாக்கப்பட்டது. அப்போது கடலில் விழுந்து உயிர்தப்பி கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர் அவர்.

பெரும் முன்னேற்பாட்டுடன் சிறை உடைப்பு நடந்ததாகத் தெரியவில்லை. சசியும், ஆனந்தகுமாரும் மட்டும்தான் இரகசியமாகத் திட்டம் போட்டு நல்ல தருணத்தை எதிர் பார்த்துப் பொறுமையாகக் காத்திருந்தார்கள். தருணம் கிடைத்த போது பயன்படுத்திக் கொண்டார்கள். பலியான சசியும் புலிகள் இயக்க உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தப்பியவர்கள் எப்படி வெளியேறினார்கள்? என்பதற்குப்பலவித ஊகங்கள் வழக்கம் போல சொல்லப்பட்டன. ஆனால் வெளியில் இருந்து உதவி கிடைத்திருக்க இயலாது. ஏனெனில் படம் காட்டும் நாள் எதுவென்று முன்னரே தெரிய வாய்ப்பில்லை. அதனால் முன்கூட்டியே நாள் குறித்து திட்டமிட்டு தாக்குதல் நடத்தியிருக்க முடியாது. எந்த நாளில் தாக்குதல் நடத்தப்படும் என்பது தெளிவாகத் தெரியாத நிலையில் வெளியேறுவோரை அழைத்துச் செல்ல யாரும் வந்து காத்திருந்திருக்கவும் முடியாது.

தப்பியவர்களில் ஒருவர் புலிகளின் பிஸ்டல் குறூப்பைச் சேர்ந்தவர் என்பதால் திருமலையில் பொலிஸ், இராணுவக் காவலரண்களுக்கு தண்ணி காட்டிவிட்டுச் செல்லும் வழிகள் அவருக்குத் தெரிந்திருக்கலாம். அவரது உதவியோடு ஏனைய மூவரும் தப்பிச் சென்றிருக்கலாம்.

இப்போது தேவையானது நேர்மையான விசாரணை. சிறை உடைப்புக்களின்போது தப்பிச் செல்பவர்களைவிட தப்பிச் செல்ல நினைக்காதவர்களுக்குத்தான் ஆபத்து என்ற நிலை உருவாகிவிடக்கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

# புலம் பெயர்ந்த தமிழர்கள் மீது அரசு தொடுக்கும் பிரசாரக்கணை!

## அலசுவது- இராஜதந்திரி



பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் மாநகரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் சர்வதேச நிதி சேகரிக்கும் பிரிவைச் சேர்ந்த கந்தையா பேரின்பநாதன்; மற்றையவர் எல்.ரி.ரி.ஈ. பத்திரிகையான 'ஈழமுரசி'ன் ஆசிரியர் கந்தையா கஜேந்திரன்.

இச்சம்பவம் தவிர சுவிற்ஸர்லாந்தில் எல்.ரி.ரி.ஈ. முக்கியஸ்தரான முரளிதரன் என்பவர் கைதாகிக் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் கடந்தவாரம் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

சர்வதேச ரீதியாக நோக்கும்போது இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் கனடா,. அவுஸ்திரேலியா ஆகிய தேசங்களிலும் வாழ்ந்துவருகின்றார்கள்.

கடந்த 13 வருடகால வடக்கு-கிழக்கு யுத்தம் ஏற்படுத்தியுள்ள கொடுமைகளையடுத்தே நிர்க்கதியான நிலையில் உலக நாடுகள் பலவற்றிலும் இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்கள்.

அரசியல் புகலிடம் பெற்றோர், குடியுரிமை பெற்றோர், அகதிகள் அந்தஸ்த்துப் பெற்றோர் எனப் பல்வேறு தரத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இருக்கின்றார்கள்.

வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இம்மக்களில் பெரும்பாலானவர்கள் தமது வீடுவாசல், உறவுகளைப் பறி கொடுத்தவர்களாகவும் இருக்கின்றார்கள்.

சர்வதேசரீதியாக அகதிகள் பிரச்சினையும் இன்று பூதாகரமானதாகவே இருந்து வருகின்றது. இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல; உலகில் மோதல்கள், யுத்தங்களால் அல்லற்படும் நாடுகளைச் சேர்ந்த மக்கள் பலரும் தமது பாதுகாப்பை முன்னிட்டும், ஜீவனோபாயத்தையிட்டும் அகதிகளாகப் புலம்பெயர்ந்துள்ளனர்.

புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, வடக்கு-கிழக்குப் பிரச்சினையிலிருந்தும் அவர்களை வேறாக்கிப்பார்க்க முடியாது.

வடக்கு-கிழக்கில் சூழ்ந்துள்ள கொடிய யுத்தமே அவர்களை புலம்பெயரவைத்தது. தமது பிறந்த மண்ணையும், உடன் பிறப்புக்களையும் விட்டுச் சென்ற அம்மக்கள் இலங்கையில் இடம்பெறும் அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் மிக உன்னிப்பாகக் கவனிக்கவே செய்வர். அத்துடன் என்றோ ஒருநாள் தாம் தாயகத்துக்குத் திரும்பும்போது கௌரவமான பிரஜைகளாக தலை நிமிர்ந்து- அனைத்து உரிமைகளையும் பெற்று வாழவேண்டுமென்றே எண்ணுவர்.

இவ்வாறு அவர்கள் எண்ணுவதற்கு புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் இருந்துவரும் நாடுகள் பலவற்றிலும் காணப்படும் உன்னதமான அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளும் முக்கிய காரணமாகவே இருக்கின்றது.

ஒப்பீட்டு ரீதியான கண்ணோட்டத்துடன் அரசியல் நிலவரங்களை நோக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள், ஓர் அரை குறைத்தீர்வை இலங்கை அரசு முன்வைப்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், என்றே கருத முடியும்.

ஏனெனில் அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயக அரசியல் அம்சங்கள், தனிமனித சுதந்திரம், பாதுகாப்பு என்பன கனகச்சிதமாகப் பேணப்படும் நாடுகளிலேயே புலம் பெயர்ந்த தமிழர்கள் பலரும் இருக்கின்றனர்.

அந்த நாடுகளின் நடைமுறைகள்,




விதிமுறைகள், அரசியல், பொருளாதாரச் செயற்பாடுகள் என்பவற்றோடு இலங்கையை ஒப்பிட்டால் ஒரு மலைச்சிகரத்துக்கும், அதளபாதாளத்துக்குமிடையே இருக்கின்ற வேறுபாட்டையே நோக்க முடியும்.

எனவே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு எட்டப்படுகின்ற அரசியல் தீர்வு புலம்பெயர்ந்த வடக்கு-கிழக்குத் தமிழர்களையும்

திருப்திப்படுத்தவேண்டியதாக இருக்கின்றது.

அவர்கள் புலம் பெயர்ந்தவர்களாக இருக்கிறார்களே தவிர, ஒரு நேர்த்தியான தீர்வுக்காக குரல் கொடுக்கும் உரிமை அவர்களுக்கும் இருக்கவே செய்கின்றது.

மேற்கத்தேய நாடுகளில் பரந்துவிரிந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் குறித்தும், அவ்வப்போது அவர்கள் இலங்கை அரசுக்கு எதிராக நடத்துகின்ற பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் என்பவை குறித்தும் இலங்கை ஆட்சியாளர்கள் விழிப்படைந்துள்ளார்கள்.

இதன்காரணமாகவே புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு எதிராகவும் அவதூறு கற்பிக்கும் முயற்சியில் அரசாங்க உறுப்பினர்கள் தற்போது இறங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

அண்மையில் இடம்பெற்ற ஐக்கியநாடுகள் ஸ்தாபன பொதுச்சபைக்கூட்டம், உட்பட அரச அமைச்சர்கள் பங்குபற்றும் அனைத்து சர்வதேச மகாநாடுகள், வைபவங்களிளெல்லாம் இலங்கை அரசு தனக்கு அனுதாபம் தேடிக்கொள்ளவே முனைகின்றது.

இலங்கைக்கான நிதி உதவி, பொருளாதார உதவி என்ற ரீதியில் பகிரங்கமாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படுகின்றன. ஆனால் மறுபுறத்தே பெருந்தொகைப்பணத்தில் மறைமுகமாக ஆயுத தளபாடங்களின் கொள்வனவையும் இலங்கையின் ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள்- அபிவிருத்தி, பொருளாதார நடவடிக்கைக்கென்று வழங்கும் நிதி உதவிகள், கடனுதவிகள் என்பவற்றில் பெருந்தொகையானவை எங்கே- ஏதற்குச் செலவிடப்படுகின்றன? என்ற கேள்வி எழும்பவே செய்கின்றது.

இலங்கை ஒரு செல்வந்த நாடல்ல; இந்நிலையில் வரவு செலவுத்திட்டத்தில் 4 ஆயிரத்து 300 கோடிக்கும் அதிகமான

தொகை இராணுவச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதி, கடனுதவி என்பவற்றின் மூலமாகவே சமாளிக்கவேண்டியிருக்கும்.

இந்நிலையில் இலங்கை அரசு கையேந்தி வெளிநாட்டு உதவிகளுக்காக அலைந்து கொண்டிருக்கையில், இலங்கை அரசுக்கு எதிரான புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலைப்பாடு, ஆட்சியாளர்களின் வயிற்றில் புளியைக் கரைப்பதாகவே இருக்கும்.

வடக்கு-கிழக்கில் இன்று பெருந்தொகையான மக்கள் இலட்சக்கணக்கில் அகதிகளாக இருந்து வருகின்றனர்.

இந்த மக்கள் எதிர்நோக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் எண்ணிலடங்காதவை.

இதன்மூலம் இலங்கையின் அகதி மக்களைச் சரிவர ஆட்சியாளர்களால் கையாள முடியாதென்பது தெளிவாகியுள்ளது.

எனவே சொந்த நாட்டில் அகதிகளாக இருந்து அவஸ்த்தைகளையும், உயிராபத்துக்களையும் எதிர்நோக்குவதைத் தவிர்க்கவே இலட்சக்கணக்கான வடக்கு-கிழக்குத் தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இந்த அகதி மக்களால் தமது அரசியல் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுமென்ற காரணத்தினாலேயே தற்போது புலம் பெயர்ந்த தமிழ்களின் மீது ஆட்சியாளர்களின் கவனம் திரும்பியுள்ளது.

கடந்தவாரம் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் கொழும்புத்திட்டத்தின் 36-வது ஆலோசனைக் கமிட்டிக்கூட்டம் இடம்பெற்றது. அக்கூட்டத்தை ஆரம்பித்துவைத்து ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றினார்.

அப்போது அவர் கொழும்புத் திட்டத்திற்கு உதவி வழங்கும் 24 நாடுகளின் பிரதிநிதிகள் முன்பாக உரை நிகழ்த்தியபோது, வெளிநாடுகளில் போலி அகதிகளுக்கு இடந்தரவேண்டாம், எல்.ரி.ரி.ஈ.யினருக்கு தஞ்சமளிக்க வேண்டாமென்றெல்லாம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இலங்கையின் விரிவான அபிவிருத்திக்காக வகுக்கப்பட்டதே

கொழும்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர் காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனா என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அபிவிருத்திக்காக வெளிநாடுகளின் உதவியுடன் திட்டங்கள் வகுக்கப்பட்ட போதிலும் அத்திட்டங்கள் வெற்றிபெறுவதற்கான அரசியல் சூழ்நிலைகளை உருவாக்குவதில் ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையார் எஸ். டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா, மற்றும் காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனா உட்பட ஆட்சிக்குவந்த அனைத்து இலங்கைத் தலைவர்களும் தவறியிருந்தனர்.

இதன்மூலம் இலங்கையில் எந்தவொரு நல்ல அபிவிருத்தித் திட்டமோ அல்லது பொருளாதார நடவடிக்கையோ தகுந்த அரசியல் சூழ்நிலைகளின்றி நன்கு தலையெடுக்க முடியாத நிலையிலிருக்கின்றது.

எனவே இலங்கையின் ஆட்சியாளர்கள் ஒரு தகுந்த அரசியல் தீர்வை முன்வைக்க முடியாது சங்கடப்படும் இத்தருணத்தில் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்கள் குறித்து கண்மூடித்தனமான பிரசாரங்களையும் முடுக்கிவிட்டுள்ளனர்.

அண்மையில் பாரிஸ் நகரில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவத்தில் இரு எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் கொலையுண்டமை, மற்றும் வெளிநாடுகளில் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களின் செயற்பாடுகள் என்பவற்றைச் சுட்டிக்காட்டி சர்வதேச அரங்கில் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு குறித்தும் புலம் பெயர்ந்த தமிழ் அகதிகள் பற்றியும் ஆட்சியாளர்கள் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

இப்பிரசாரங்கள் எல்.ரி.ரி.ஈ.ஒரு பயங்கரவாத அமைப்பெனவும், புலம்பெயர்ந்த தமிழர்கள் போலி அகதிகளே என்ற விதத்திலுமே அமைந்திருக்கின்றன.

எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்குறித்தும், புலம்பெயர்ந்த தமிழர்கள் குறித்தும் இலங்கையின் ஆட்சியாளர்கள் தமது மனம்போன போக்கில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

எது எப்படியிருந்தபோதிலும் புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் இலங்கை திரும்பி வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல; இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழமுடியாதென்பதே உண்மை.

இது தவிர எல்.ரி.ரி.ஈ. அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாக வெளிநாடுகளில் சித்தரிக்க முனையலாம். ஆயினும் இலங்கையில் முன்வைக்கப்படும் எந்தவொரு அரசியல் தீர்வுத்திட்டமும் எல்.ரி.ரி.ஈ.யுடன் கலந்தாலோசிக்கப்படவேண்டியதாகவே இருக்கின்றது.

இந்நிலையில் இலங்கை ஆட்சியாளர்களது பிரசாரங்கள் வெறுமனே அவர்களது வெறுமையையே பறை சாற்றி வெட்டிப் பேச்சாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

# ரூபவாஹினியில் ஒரு திருடனின் பேட்டி

புலிகளின் சிறையிலிருந்து தப்பிவந்ததாகக் கூறப்படும் நான்கு திருடர்களைப் பேட்டிகண்டு அசத்தியது ரூபவாஹினித் தொலைக்காட்சி.

31.10.96 அன்று மாலை 8.30 க்கு ரூபவாஹினி தொலைக்காட்சியில் அப்பேட்டியைக் கண்டும் கேட்டும் வயிறு குலுங்க சிரிக்காதவர்களே இல்லை எனலாம்.


பேட்டி கண்டவர் கேள்விகளை தொடுத்த விதம் கலாதியாக இருந்தது. செந்தமிழை அவர் உச்சரித்த பாணியும் நல்லதொரு நகைச் சுவை விருந்துதான்.

ரூபவாஹினியில் பணியாற்றும் தமிழ் பேசும் அறிவிப்பாளர்கள் திடீரென்று தலைமறைவாகி விட்டதால் தமிழ் பேசத் தெரிந்த ஒரு சிங்களச் சகோதரரிடம் பேட்டி எடுக்கும் பொறுப்பை ஒப்படைத்தார்களோ என்று பலத்த சந்தேகம் ஏற்பட்டது. எனினும் அதுகூட பேட்டியின் நகைச்சுவைத் தரத்தை உயர்த்தியதையும், நேயர்கள் குறிப்பிட்ட பேட்டியை 'சீரியசாக' நினைக்காதளவுக்கு கலகலப்பாக்கியதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

முதலில் மூன்றுபேரைப் பேட்டி கண்டார்கள். 'காதலுக்கு தடை போடுகிறார்கள்' என்ற வாசகத்தைக் திரையில் காட்டிவிட்டு பேட்டியை ஆரம்பித்தனர்.

தன்னைக் காதலித்து கைவிட்டு, வேறு பெண்ணைக் காதலிப்பதாக ஒரு பெண் புலிகளின் காவல்துறையில் புகார் செய்தாராம். புலிகளின் காவல்துறை தன்னைக் கைது செய்து சிறையில் வைத்திருந்ததாம், என்றார் பேட்டி கொடுத்த மூவரில் ஒருவர்.

உடனே கேள்வி கேட்டவருக்கு மனிதாபிமானம் பீறிட்டுக் கிளம்புகிறது. "இங்கே ஒரு கலியாணம் செய்யலாமா? உங்கடை பெட்டை



அங்கே இருக்கா?" என்றெல்லாம் கேட்டு சிரிப் பூட்டினார்.

காதலுக்கு தடைபோடுகிறார்கள் என்பது தான் பேட்டியின் சாராம்சம். ஆனால் பேட்டி கண்டவரும் காதல் ஒரு குற்றம்; ஆனால் சிறு குற்றம் என்றரீதியில் கேள்விகளைத் தொடுத்தது தான் அட்டகாசமான நகைச்சுவையாக அமைந்தது.

"நீங்கள் செய்த சிறு குற்றத்துக்கு பெரிய தண்டனை தந்துவிட்டார்கள் என்ன?" என்று பேட்டியாளர் கேட்க, "நாங்கள் குற்றம் செய்ய வில்லை" என்று அவர்கள் சொல்ல, 'சரி' என்றுவிட்டு, பின்னரும் ஒருதடவை சிறு குற்றத்துக்கு பெரும் தண்டனை என்று பேட்டி எடுத்தவர் வருத்தப்பட்டுக் கொண்டார்.

அது முடிய இரண்டாவது பேட்டி.. பேட்டி கொடுத்த இளைஞரை போராளிக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று அறிமுகம் செய்தார் பேட்டி கண்டவர்.

ஆனால் பேட்டியின் போது உண்மை வெளிப்பட்டுவிட்டது.

"போராளிக் குடும்பங்களுக்கும், மாவீரர் குடும்பங்களுக்கும் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. நம்மைப் போன்ற சாதாரண குடும்பங்களுக்கு எதுவும் கிடைப்பதில்லை" என்றார் அந்த இளைஞர்.

மாவீரர் குடும்பம், போராளிக் குடும்பங்களுக்கு புலிகள் முன்னுரிமை கொடுப்பது ஒன்றும் இரகசியமல்ல. மக்களிடம் அது தொடர்பான முணுமுணுப்புக்களும் இல்லாமலில்லை. ஆனால் அரசாங்கமும் படையினருக்கும், படையினரது குடும்பங்களுக்கும்தான் முன்னுரிமை கொடுக்க ஆரம்பித்துள்ளது.

அதுமட்டுமல்ல, அந்த இளைஞர் சொன்னதிலிருந்து அவரைப்பற்றி நமக்கு தெரிந்த தகவல்கள் பின்வருமாறு:

சிலகாலம் அவர் புலிகள் இயக்கத்தில் இருந்தார். பின்னர் விலக அனுமதி கேட்டார். அனுமதி கொடுக்கப்பட்டது. விலகியிருந்தபோது சைக்கிள் ஒன்றைத் திருடினார். புலிகளின் காவல்துறை அவரைப் பிடித்து வைத்திருந்தது. அவர் எப்படியோ தப்பி ஓடிவிட்டார். பின்னர் அவரைத்தேடிப் பிடித்து மீண்டும் சிறையில் வைத்திருந்தார்கள்.

அதில் என்ன தவறு என்று தெரியவில்லை. சைக்கிள் திருடர்களுக்கு எந்த நாட்டுப் பொலிசார்தான் சன்மானம் கொடுக்கிறார்கள்?

புலிகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய திருடர்கள்தான் கிடைத்தார்களா? புலிகள்மீது வெறுப்பை ஏற்படுத்த வேண்டுமானால் திருடர்களை நியாயவாதிகளாக சித்தரிக்க வேண்டுமா என்ன?

படையில் இருந்து தப்பியோடியவர்களுக்கு யாரும் வேலை கொடுக்கக்கூடாது என்பது அரச உத்தரவு.

ஆனால் புலிகளில் இருந்து விலகிய ஒருவருக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இருந்து ஏதாவதுவேலை செய்து பிழைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதை குறிப்பிட்ட பேட்டி மூலமே தெரிந்துகொள்ள முடிந்தது. பொல்லைக் கொடுத்து அடிவாங்குவது இதுதானாக்கும்.

படையில் இருந்து தப்பி ஓடியவர்கள் தென்னிலங்கையில் கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களைப் பிடிக்க முடியவில்லை. படையில் இருந்து தப்பியோடியோர் செய்யும் குற்றச் செயல்கள் பெருகி வருகின்றன. நமது அரசாங்கத்தால் அதைத் தடுக்க முடியவில்லை, புலிகளோ தம்மில் இருந்து விலகியோர் ஒரு சைக்கிள் திருடக்கூட விடுகிறார்கள் இல்லையே, என்று ரூபவாஹினி வருத்தப்படுகிறதோ தெரியவில்லை.

பாலியல் வதைகள், பொருளாதாரத் தடைகள், காணாமல் போவோர் என்று வாழ்தலுக்கே தடைபோடுகிறது போர் நிலவரம்! பாவம் ரூபவாஹினி 'காதலுக்கு தடைபோடுகிறார்களே,' என்று கவலைப்பட்டு நேரத்தையும், நிகழ்ச்சியையும் வீணடித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க அரசாங்கத்திற்கு எத்தனையோ வழிகள் இருந்தன; இருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டு விட்டு திருடர்களைக் கூட்டிவந்து கதாப் பிரசங்கம் நடத்தத்தான் வேண்டுமா?

ரூபவாஹினியில் தரமான நகைச்சுவை நாடகங்கள் தமிழில் ஒளிபரப்பாவதில்லையே என்ற குறையைப் போக்க விரும்பினால் இவ்வாறான நிகழ்ச்சிகளை மேலும் தொடரலாம். தயாரிப்புச் செலவும் அதிகமாகாது.



படிப்பகம்

www.padippakam.com

தருவது 17 ரசிகன்


பூலான

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

**கடந்தவாரம்**

தனது பெரியப்பாவின் மகனை கல்லால் அடித்துக் காயப்படுத்தியதாக பூலான்மீது வழக்குப் போடப்பட்டது. 20 ஆயிரம் ரூபா பிணை செலுத்தினால் பூலான் விடுதலையாகலாம் என்று நீதிபதி உத்தரவிடுகிறார். பூலானை சிறை அதிகாரி தப்பான எண்ணத்துடன் நெருங்குகிறார். பூலான் அவரிடமிருந்து தப்புகிறாள். பிணைத்தொகை கட்டியதால் பூலான் விடுதலையாகிறாள். பிணைப் பணம் கட்டியது யார்? என்று ஆச்சரியப்படுகிறாள்.

இனி...

சிறையிலிருந்து வெளியே செல்லும்போது, சிறையில் ஒப்படைத்த பொருட்களை திருப்பிக்கொடுப்பார்கள். நான்தான் எதையும் ஒப்படைக்கவில்லையே. கிழிந்த சேலையுடன்தான் சிறைக்கு வந்தேன்.

சிறையில் ஏதாவது துணிகள் தருவார்கள் என்றுதான் நினைத்தேன். தண்டனை பெற்ற கைதிகளுக்குத்தான் போட்டுக் கொள்ள தனியான உடை கொடுப்பார்களாம்.

என்மீது பரிதாபப்பட்டு ஒரு பெண் தனது சேலை ஒன்றைத் தந்தாள். அவளை விபச்சாரம் செய்த குற்றத்துக்காகச் சிறையில் வைத்திருந்தார்கள். என் காயங்களுக்கு அவள்தான் மருந்துபோட்டு விட்டாள்.

பாவம் வயிற்றுப்பசிக்காக தன் உடலை விலைபேசியிருக்கிறாள். அவளது பசிக்கு சோறுபோட முடியாத பாவிகளுக்கு ஒழுக்கத்தின்மீதுமட்டும் கண்டறியாத அக்கறை வந்துவிட்டது. பிடித்து வந்து உள்ளே போட்டுவிட்டார்கள்.

அவள் சிறைக்கு வந்தபின்னர் சிறை அதிகாரிக் கழுதை நாலுமுறை அவளைச் சாப்பிட்டிருக்கிறான். வெளியிலாவது அவள் உடலைச் சாப்பிட்டவர்கள் பணம் கொடுத்தார்கள். இங்கே அதுவும் இல்லை. எனக்கு அவள் கதையைக் கேட்க சிரிப்பாக இருந்தது.

'பெண்ணாய்ப் பிறப்பதே பாவமடி பூலான்' என்று சொல்லி என்மடியில் தலைவைத்துக்கொண்டு ஒருநாள் அழுதாள். அவள் தலையைத் தடவிக்கொடுத்தேன்.

நான் மட்டும்தான் அதிஷ்டம் கெட்டவள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவளைச் சந்தித்தபின்னர்தான் என்னைப்போல அதிஷ்டம் கெட்டவர்கள் பலர் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன்.

சிறையில் இருந்து வெளியே செல்லப் போகிறேன் என்று தெரிந்ததும் அவளது சேலையைக் கொடுப்பதற்காக என் கிழிந்த சேலையைக் கட்டிக்கொண்டேன். அவள் வாங்குவதற்கு மறுத்துவிட்டாள். தனது சேலையைக் கட்டிக்கொண்டுதான் நான் செல்லவேண்டும் என்று அடம்பிடித்தாள். கட்டிக்கொண்டேன். அவளையும் கட்டிக் கொண்டு அழுதேன்.

இனம் இனத்தோடு சேரும். அவளும் நானும் ஒரு இனம்தானே. அதிஷ்டம் கெட்ட இனம். இந்த சமூகத்தால் வஞ்சிக்கப்பட்ட இனம்.

"பூலான் உன்னை மாதிரி நல்ல பெண்கள் பொலிசிலோ, சிறையிலோ வந்து சிக்கிக்கொள்ளக்கூடாதம்மா. இவர்கள் யாருமே நல்லவர்களில்லையம்மா. கண்களாலேயே எம்மை உரிந்துவிடுவார்கள். இவர்களது கண்களில் படுவதே பாவம். இனிமேல் கவனமாக இருந்து கொள். வராதே பூலான் இனிமேல் இங்கேயெல்லாம் வராதே!" என்றாள்.

நான் பதில் சொல்லவில்லை. என் மனதில் இருப்பதையெல்லாம் அவளிடம் சொன்னால் பயந்துவிடுவாள். என் கிழிந்த சேலையைப் பறித்து வைத்துக் கொண்டாள். என் ஞாபகமாக இருக்குமாம்.

என் வாழ்க்கையில் நாய்களைச் சந்தித்திருக்கிறேன். மனிதப் பேய்களைச் சந்திருக்கிறேன். முதன் முதலாக ஒரு நல்ல மனுஷியைச் சந்தித்தது சந்தோசமாக இருந்தது.

சிறையில் இருந்து வெளியே செல்லும்போது தூரத்தில் இருந்து அந்த சிறை அதிகாரி மூதேவி என்னைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

பிடியில் இருந்து தப்பி ஓடும் எலியைப் பூனை பார்ப்பதுபோல பார்த்துக் கொண்டிருந்தான். காக்கிபோட்ட கள்ளப் பூனை.

யார் என்னைப் பிணையில் எடுத்தார்கள் என்ற கேள்வி மட்டும் மனதை அரித்துக்கொண்டிருந்தது.

வெளியே வந்ததும் அப்பாவைக் கண்டுவிட்டேன். கண்டதும்தான் ஆறுதலாக இருந்தது. அப்பா முன்பைவிட மெலிந்திருந்தார். தாடி வளர்ந்திருந்தது. அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"நாங்கள் யாருக்கப்பா தீங்கு செயதோம். யார் வாழ்க்கையைக் கெடுத்தோம்" என்று அப்பாவைக் கட்டிக்கொண்டு அழவேண்டும் போலிருந்தது.

அப்பாவுக்குப் பக்கத்தில் பூல்சிங் நின்றுகொண்டிருந்தார். அப்பா வேலை செய்யும் காணிக்குச் சொந்தக்காரர்.

நான் எப்போதாவது அப்பாவுடன் சென்றால் "மகளே" என்றுதான் வாஞ்சையுடன் கூப்பிடுவார்.

இப்போதும் என்னைப் பார்த்ததும் அப்பாவின் கண்களில் இருந்து கண்ணீர் பொலபொலவென்று கொட்டிக்கொண்டிருக்க, பூல்சிங்தான் "வா மகள். வீட்டில் அம்மா உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்." என்றார்.

பூல்சிங்தான் பணம் கட்டி என்னைப் பிணையில் எடுத்தார் என்று அப்பா சொன்னார்.

அவர் காலில் விழுந்து வணங்கினேன். "மகளே பூலான்! பிரச்சனைகளில் சிக்காமல் இருந்துகொள். வழக்குத் தவணைகளுக்கு ஒழுங்காகப் போய்வா. இல்லாவிட்டால் பணமும் திரும்பிவராது. அந்தப் பணம் எனக்குத் தேவையம்மா" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார் பூல்சிங்.

வீட்டில் அம்மா என்னை கட்டிப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

"என் ராசாத்தி! ஒருநாள்கூட உன்னை நான் அடித்தது இல்லையேடி. அந்தப் பாவிகள் உன்னை என்ன பாடுபடுத்தினார்களோ? அய்யோ! துர்க்கையம்மா, எங்களை மட்டும் ஏனம்மா இப்படிப்போட்டு ஆட்டுகிறாய். என் குஞ்சு! அடித்தார்களா அம்மா?"

"இல்லையம்மா. அடிக்கவில்லை. ஒன்றுமில்லை. நீ அழாதேயம்மா. நீ அழுதா நானும் அழுதுடுவேன். அ..அழாதே அம்மா. அதுதான் நான் வந்துவிட்டேனே. பசிக்குதம்மா. தம்பி நீ ஒழுங்காகப் பள்ளிக்குப் போறியாடா.? அக்கா எங்கேம்மா?"

என் சோகத்தையெல்லாம் உள்ளேயே பொத்திக்கொண்டேன். சாம்பல் மூடிய நெருப்புமாதிரி அது உள்ளேயே தகித்துக் கொண்டிருக்கட்டும். இவர்களுக்கு அந்தக் கொடுமை எதுவும் தெரியவேண்டாம். தாங்க மாட்டார்கள். அதிலும் அம்மா செத்தே போய்விடுவாள்.

அக்கா ருக்குமணி தன் கணவர் வீட்டுக்குப் போய்விட்டாள். எட்டாவா என்ற கிராமத்தில்தான் அத்தான் ராம்லாவின் வீடு இருந்தது.

"பூலான் இனிமேல் இந்தக் கிராமத்தில் இருக்கவேண்டாம். அங்கே என்னுடன் வந்திருக்கட்டும்" என்று சொல்லிவிட்டுத்தான் அக்கா போனாளாம். அத்தானும் "பூலானை அனுப்பிவையுங்கள். ருக்குமணிக்கும் உதவியாக இருக்கும்தானே" என்று சொன்னாராம்.

அப்பா அம்மாவுக்கும் என்னை அக்கா வீட்டுக்கு அனுப்புவதுதான் சரியாக இருக்கும் என்று தோன்றியது. இங்கே இருந்தால் மையாதீனும் விடமாட்டான். கிராம அதிகாரியும் தொல்லை தருவான் என்று பயந்தார்கள்.

அம்மா வகை வகையாகச் சமைத்துப் போட்டாள். "நாக்குக்கு ருசியாக சாப்பிட்டிருக்க மாட்டாய். நன்றாகச் சாப்பிடடியம்மா"

என்னைப் பொலிஸ்காரர்கள் பிடித்துச் சென்றதில் இருந்து அம்மாவும் ஒழுங்காகச் சாப்பிடவில்லை. எலும்பும் தோலுமாக மாறியிருந்தாள்.

இப்படியே கிடந்தால் அம்மா செத்துப் போய் விடுவாளோ என்று பயந்துதான் அப்பா பூல்சிங்கின் உதவியை நாடினார்.

அம்மாவும் அப்பாவும் பூல்சிங்கை வாய்க்கு வாய் ஓயாமல் புகழ்ந்தார்கள். "மகராசன். எங்களை நம்பி யாராடி பணம் தருவார்கள்? கூடப்பிறந்தவர்கள்கூட எங்கள் குடியைக் கெடுக்கும் கோடாலிகளாகி அலையும்போது, அந்த மகராசன் என் பிள்ளையைக் காப்பாற்றியிருக்கிறாரே! அந்த துர்க்கையம்மன்தான் அவர் உருவில் வந்திருக்க வேண்டும்."

நான் அக்கா வீட்டுக்குப் புறப்பட்டேன். வழிச் செலவுக்காக அப்பா 25 ரூபா தந்தார். தம்பி சிவநாராயணன் என் கையைப் பிடித்துக்கொண்டு, "எங்களை விட்டுப் போகப்போறியா அக்கா?" என்றான்.

அவன் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரை என் சேலைத்தலைப்பால் துடைத்துவிட்டேன்.

"இல்லையடா. அக்காவோடு கொஞ்ச நாள் இருந்துவிட்டு திரும்பிவந்துவிடுவேன். நீ நல்ல பிள்ளையாக, ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகவேண்டும் சரியா."

"எப்பக்கா வருவாய்?"

"ஒரு பத்துப் பதினைந்து நாளாகும்".

என்னை இனிமேல் இதே கோலத்தில் சந்திக்கப்போவதில்லை என்பது தெரியாமல் நான் பஸ் ஏறும்வரை பார்த்துக் கொண்டேயிருந்தான் தம்பி சிவநாரயணன்.

அம்மாவும், அப்பாவும் கண்கலங்கியபடி என்னை வழியனுப்பினார்கள்.

தங்கள் மகளை இப்படி வழியனுப்பி வைப்பது இதுதான் கடைசி என்பது தெரியாமல், "பத்திரமாகப் போய் வா பூலான்" என்றாள் அம்மா.

அக்கா வீட்டில் கல கலப்பாக இருந்தது.

அக்காவுக்கு ஒரே ஒரு ஆண் குழந்தை. மந்நார் பிரசாத் என்று பெயரிட்டிருந்தார்கள். நான்தானே அவனுக்கு சின்னம்மா. என்னோடு ஒட்டிக்கொண்டான். அத்தான் ராம்லாலும் நல்ல மனிதர்.

கண்நிறைந்த கணவன். ஆசைக்கு ஒரு குழந்தை என்று அக்கா சந்தோசமாக வாழ்வதைப் பார்க்க எனக்கு நிறைவாக இருந்தது. நான் பட்ட துன்பங்கள்கூட அந்த மகிழ்ச்சியில் தூசுபோலத்தான் தெரிந்தது.

வீடு ரொம்பவும் சிறியது என்பதால் எனக்குத்தான் சங்கடமாக இருந்தது. நான் இருப்பதால் அத்தானும் அக்காவும் சந்தோசமாக இருக்க முடியாமல் போகிறதே என்று கவலைப்பட்டேன்.

அதனால் நான் அவர்கள் தூங்க முன்னரே தூங்கிப்போய்விடுவேன். ஒருநாள் குழந்தை அழுதுகொண்டிருந்த சத்தம் கேட்டு முழித்துவிட்டேன். அத்தான் அருகில் இருந்து அக்கா தன் சேலையை சரிப்படுத்தியபடி அவசரமாக எழுந்துகொண்டிருந்தாள். நான் கண்களை மூடிக்கொண்டேன். அதன்பின்னர் குழந்தை அழுதாலும் நான் கண்களைத் திறந்து பார்ப்பது கிடையாது.

பாவம். என்னால்தானே அவர்கள் தம் இஷ்டம்போல சுதந்திரமாக இருக்கமுடியவில்லை. அதை நினைத்தால்தான் கவலை கவலையாக வந்தது.

என் வாழ்க்கைதான் இருண்டுபோய் விட்டது. பாவம் அக்கா என்றாலும் சந்தோசமாக இருக்கட்டும்: விரைவில் இங்கிருந்து போய்விடவேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

அக்காவிடம் சொல்லிப்பார்த்தேன். "அங்கே போய் பிரச்சனையை வாங்கப்போகிறாயா. பேசாதே. நீ இருப்பதால் நாங்கள் ஒன்றும் தேய்ந்துபோக மாட்டோம்." என்றாள் அக்கா.

அக்கா விடமறுத்தாலும் நான் என் கிராமத்துக்கு செல்ல வேண்டிய ஒரு செய்தி வந்து சேர்ந்தது. என்னைத் துரத்தும் துரதிஷ்டம் எங்கேயும் என்னை நிம்மதியாக இருக்க விடப்போவதில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

திடீரென்று ஒருநாள் அக்காவீட்டுக்கு ஒரு பொலிஸ்காரர் வந்தார்,

என்னைப் பிடிக்கத்தான் வருகிறானோ என்று பயந்துபோனேன். "சும்மாயிரடி. உன் அத்தானுக்கு தெரிந்தவர்தான்" என்றாள் அக்கா. பொலிஸ்காரர்களும் நண்பர்களாக இருப்பார்களா என்று ஆச்சரியமாகவும் இருந்தது. என்னைப் பிடிக்க வரவில்லை என்று தெரிந்ததும் ஆறுதலாகவும் இருந்தது.

ஆறுதலா? உனக்கா? பூலான் நீ நிம்மதியைத் தேடுவதா? என்று விதி சிரித்தது. அந்தச் சிரிப்பு கேட்காவிட்டாலும் பொலிஸ்காரர் என் அத்தானிடம் சொல்லிக்கொண்டிருந்த செய்திமட்டும் என் காதில் விழுந்தது.

"உங்கள் கொழுந்தியாள் பூலான் இங்கே எப்போது வந்து சேர்ந்தாள்?" என்று கேட்டார் பொலிஸ்காரர்.

அத்தான் நான் வந்துசேர்ந்த திகதியைச் சொன்னார். என் பெயர் அடிபட்டதால் நான் காதுகளை தீட்டிக்கொண்டு கேட்டேன்.

"அடடா.. அதேநாள் இரவுதான் மையாதீன் வீட்டுக்குள்ளும், கிராமத்திற்குள்ளும் கொள்ளைக்கோஷ்டி புகுந்திருக்கிறது. மையாதீன் வீட்டில் இருந்த பணம், நகைகள், பாத்திரங்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் வழித்து அள்ளிக்கொண்டு போய்விட்டார்கள். மையாதீனையும் நையப்புடைத்துவிட்டார்கள்."

"அ.. அப்படியா? சரி அதற்கும் நீங்கள் பூலானை விசாரிப்பதற்கும்.."

"சம்பந்தம் என்ன என்று கேட்கிறீரா. பூலான்தான் கொள்ளைக் கோஷ்டியை ஏவிவிட்டாளாம். மையாதீன் பொலிசில் புகார் செய்திருக்கிறான். பூலானை தேடிப் போனார்களாம். பூலான் அங்கே இல்லையென்றதும் பூலானின் அப்பாவையும் அம்மாவையும் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களாம்."

"என்ன?" என்றார் அதிர்ச்சியோடு அத்தான். என் தலையில் இடி இறங்கியது.

அங்கே எனக்காகக் காத்திருக்கும் விபரீதம் அறியாமல் என் கிராமத்திற்குச் செல்ல முடிவுசெய்தேன்.

(தொடர்ந்து வரும்)

# பெற்றோல் ராமர் பிடிபட்டார்

## மூலிகைப் பெற்றோல் பித்தலாட்டம்

சும்மா சொல்லக்கூடாது. எல்லோர் காதிலும் அமோகமாக பூவைத்துவிட்டார் பெற்றோல் ராமர். மூலிகையில் பெற்றோல் எடுப்பதாக ராமர் நடத்தியது போலி விளையாட்டு என்பது விஞ்ஞானிகளால் நிரூபிக்கப் பட்டுவிட்டது.

சாமியார்கள் சிலர் சிவலிங்கம், மணிக்கூடு என்றெல்லாம் எடுத்துத் தருவதுபோல ஒரு மாஜிக் விளையாட்டுத்தான் மூலிகைப் பெற்றோல் விவகாரமும். எப்படி என்று கேட்கிறீர்களா? இதைப் படியுங்கள் புரியும்.

செப்டம்பர் 25ம் திகதி சென்னையில் இந்திய தொழில் நுட்பக் கழகத்தில் பிரபல விஞ்ஞானிகள் ஒன்று கூடினார்கள்.

அவர்கள் முன்பாக மூலிகையில் பெற்றோல் செய்து காட்டவேண்டும். அப்போதுதான் ராமரின் கண்டுபிடிப்புக்கு அங்கீகாரம் வழங்கப்படும் என்று நிபந்தனை விதிக்கப் பட்டது.

மூலிகை இரகசியத்தை மட்டும் ராமர் சொல்லத் தேவையில்லை. ஆனால் மூலிகையில் இருந்து எப்படி பெற்றோல் தயாரிக்கிறார் என்பதை அவர் சொல்லவேண்டும். ராமர் சொல்லச் சொல்ல அதுபோல ஒரு விஞ்ஞானி செய்து பார்ப்பார். பெற்றோல் வந்துவிட்டால் ராமரின் கண்டுபிடிப்பு அங்கீகரிக்கப்படும்.

ராமரும் அதற்கு உடன்பட்டார். பெற்றோல் தயாரிப்பு ஆரம்பமானது. ஒவ்வொரு நடவடிக்கையும் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. குறிப்பெடுக்கப்பட்டது.

### பரிசோதனை

கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் தண்ணீர், இரகசிய மூலிகை, எலுமிச்சைச் சாறு, சாம்பல், கொஞ்சம் உப்பு, அதன் பின்னர் எட்டுச் சொட்டு இரகசிய திரவம் என்பவை விடப்பட்டன. பின்னர் கண்ணாடிப் பாத்திரம் மூடப்பட்டு அடுப்பில் வைத்து சூடாக்கப்பட்டது.

அரைமணிநேரமாகச் சூடாகியும் பெற்றோல் வந்தமாதிரித் தெரியவில்லை. ராமரின் முகத்தைப் பார்க்கிறார்கள் விஞ்ஞானிகள்.

கண்ணாடிப் பாத்திரத்தில் செய்தால் சரிப்பட்டுவராது. எவர்சில்வர் பாத்திரத்தில் மாற்றுங்கள் என்கிறார் ராமர். அப்படியே மாற்றுகிறார்கள் விஞ்ஞானிகள்.

"உலோகத்தடி மூலம் கலக்கினால்தான் பெற்றோல் தயாராகும். என்னிடம் உலோகத் தடி இருக்கிறது" என்று பையிலிருந்து எடுத்துக்கொடுத்தார் ராமர்.

அந்த உலோகத்தடியின் மேல் முனை மூடி சீல் செய்யப்பட்டிருக்கிறது. தயிர் கடையும் மத்துமாதிரி சில தகடுகளும் பொருத்தப்பட்டுள்ளன. மத்தின் கீழ்முனையைத் தடவிப்பார்க்கிறார் விஞ்ஞானி. அதில் தேன்மெழுகு தடவப்பட்டிருந்தது. இதில் ஏதோ தந்திரம் இருக்கிறது என்று விஞ்ஞானிக்கு புரிந்துவிட்டது. அந்த மத்து எடை போடப்பட்டது அதன் எடை 170.88 கிராம். விட்டுப்பிடிக்கலாம் என்று அந்த மத்தை உலோகப்பாத்திரத்தில் போட்டுக் கலக்கினார் விஞ்ஞானி.

"அப்படிக் கலக்கக்கூடாது." என்றுவிட்டு மத்தை வாங்கி தயிர்கடைவதைப்போல உருட்டுகிறார் ராமர். அப்போது உலோகப் பாத்திர வெப்பநிலை 60 டிகிரி. மத்தில் உள்ள மெழுகு உருகவேண்டுமானால் 74 டிகிரிக்கு உயரவேண்டும். என்ன நடக்கிறது பார்ப்போம் என்று விஞ்ஞானிகள் கவனிக்கிறார். வெப்பத்தை உயர்த்தச் சொல்கிறார் ராமர். 72 டிகிரிவரை வெப்பத்தை உயர்த்துகிறார் விஞ்ஞானி.

"போதாது இன்னும் கொஞ்சம் உயர்த்துங்கள்" என்கிறார் ராமர். 74 டிகிரிக்கு வெப்பம் உயர்த்தப்படுகிறது. அதுதான் சமயம் என்று விஞ்ஞானிகளில் ஒருவரான சுப்பிரமணியம் ராமரின் கையோடு சேர்த்து மத்தை வெளியே இழுக்கிறார். மத்திலிருந்து ஒரு திரவம் சொட்டுச் சொட்டாக விழுகிறது. மண்ணெண்ணெய்போல மணம் வீசுகிறது.

"என்ன விளையாட்டு இது?" என்கிறார் தலைமை விஞ்ஞானி.

"பெற்றோல் ஏற்கெனவே தயாராகி மத்துக்குள் போய்விட்டது" என்று சொல்கிறார் ராமர்.

உடனே மத்தை எடை போடுகிறார்கள். முன்னர் 170.88 கிராமாக இருந்தது இப்போது 142.20 கிராம்தான் இருக்கிறது.

ராமரின் பித்தலாட்டம் அம்பலமாகியது. மத்தில் இருந்த மெழுது உருகிய போது மத்துக்குள் இருந்த பெற்றோல் பாத்திரத்திற்குள் சென்றுவிடும். அடேங்கப்பா! என்னமாய் ஒரு பித்தலாட்டம்.

ராமரைப் பொலிசில் ஒப்படைக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் பலர் சத்தம் போட்டனர். போனால் போகட்டும் பிழைத்துப்போ என்று ராமரை விரட்டியனுப்பினார் தலைமை விஞ்ஞானி.



இந்த விபரங்கள் 'புரொன்ட்லைன்' சஞ்சிகையில் வெளியாகியுள்ளன.

இது ஒருபுறமிருக்க ராமருக்குப் போட்டியாக பலர் மூலிகையோடு புறப்பட்டிருக்கிறார்கள். அதில் ஒரு ஆசாமி தமிழ் நாட்டில் உள்ள கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். தமிழக சஞ்சிகை ஒன்று அவரை நம்பி ஏமாந்துவிட்டது. அவரது புகைப்படத்தையும் அட்டையில் போட்டு "இதோ இன்னொரு பெற்றோல் விஞ்ஞானி," என்று செய்தியும் வெளியிட்டது.

அதன் பின்னர் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் அந்த இளைஞர் பெற்றோல் செய்து காட்ட முன்வந்தார். ராமர் விஷயத்தில் சூடுகண்ட பத்திரிகை யாளர்கள் துருவித் துருவி கேள்வி கேட்டனர். தப்பினால் போதும் என்று ஓடிவிட்டார் அந்த ஆசாமி.

பிரேமானந்தா போன்ற சாமியார்களை யெல்லாம் ஏமாற்றுவித்தையில் தூக்கிச்சாப்பிட்டுவிட்டார் ராமர். கலைஞர் கருணாநிதிக்கே மூலிகைப் பெற்றோலில் மோட்டார் சைக்கிள் ஓட்டிக்காட்டி நம்ப வைத்தார் என்றால் சும்மாவா. கில்லாடி ராமர்.

விஞ்ஞானிகளால் உறுதிசெய்யப்படும் வரை மூலிகைப் பெற்றோல் புரளிகள் உட்பட இவ்வாறான புதுக் கண்டுபிடிப்புக் களை நம்பக்கூடாது.

# நிஜமான வில்லன்

திரைப்படங்களில் வில்லனாக நடிப்பவர்கள் கதாநாயகனாக மாறும் காலம் இது.

ஒரு திரைப்பட வில்லன் உண்மையாகவே வில் லனாக வாழ்ந்துகாட்டிவிட்டு அட்டகாசமாய் செத்துப் போயிருக்கிறான். அந்த வில்லனின் பெயர் கபிலன்.

அருண்பாண்டியன்-ஷோபனா நடித்த துறைமுகம் படத்தில் வில்லனாக நடித்தவர் கபிலன். குறிப்பிட்ட படத் தயாரிப்பாளருக்கும் கபிலனுக்கும் இடையில் பெண்கள் விவகாரத்தின் மூலமாக நல்ல நட்பு இருந்தது. அதனால்தான் கபிலனுக்கு தனது சொந்தப் படத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுத்தாராம்.

சென்னை பொலிஸ் கமிஷனர் அலுவலகம் அருகே இருந்த நீதிமன்றத்துக்குள் புகுந்து எதிர் கோஷ்டி ஆட்களை வெட்டிச் சாய்த்தது ஒரு கும்பல். சினிமா காட்சிகளையே தோற்கடிக்கும் அந்தக் கோரக் கொலைக்கு திட்டமிட்டுக் கொடுத்தவன் கபிலன்தான்.

தனது மூக்கருகிலேயே வித்தை காட்டிய கும்பலை எப்படியும் பிடித்துவிடத் திட்டமிட்டது பொலிஸ்.

கபிலனுக்கும் அவன் கூட்டத்திற்கும் பெரும் தொழிலதிபர்களை கடத்திப் பணம்பறிப்பதுதான் தொழில்.

கபிலனிடம் ஒரு வித்தியாசமான குணம், தொழிலதிபர்களைக் கடத்தினால் பணம் மட்டுமல்ல, இளம் பெண்களும் வேண்டும் என்று கேட்பான். கொடுத்தால்தான் விடுதலை.

கபிலனின் கூட்டத்தைச் சேர்ந்த முக்கிய புள்ளியான ஆசைத்தம்பி என்பவனையும் அவனுடன் சிலரையும் நடு வீதியில் வைத்து சுட்டுத் தள்ளினார்கள் சென்னை பொலிசார். மக்களும் வரவேற்றனர்.

கபிலன் மட்டும் தப்பிவிட்டான். பொலிசார் தேடினார்கள். கபிலன் தண்ணி காட்டிக் கொண்டு திரிந்தான்.

இறுதியில் சாஜன் என்னும் தொழிலதிபரை மிரட்டினான். "ஐந்து இலட்சம் பணம். 18 வயதுக்குள் 5 துணை நடிகைகள். இரண்டையும் உடனே ஏற்பாடுசெய்" என்று மிரட்டினான்.



சாஜன் பொலிசாரிடம் ஓட பொலிசார் வலைவிரித்தனர். சாஜன் மூலம் கபிலனை ஒரு இடத்திற்கு வரவழைத்தனர். கபிலன் காரில் வந்து இறங்கப் பொலிசார் சுட்டுத்தள்ளினார்கள். மலைசரிந்ததுபோல வீழ்ந்தான் கபிலன்.


ஒரு வில்லனை வீழ்த்திய பொலிசாருக்கு விருது கிடைத்திருக்கிறது. கடைசிவரை வில்லனாகவே வாழ்ந்து வில்லனாகவே செத்துப் போனான் கபிலன்.

ஆட்கடத்தல் மூலம் உழைத்த பணத்தில் பங்களா கட்டியிருந்தான் கபிலன். அங்கு சினிமா நடிகைகளை அழைத்துப் போய் ஜாலியாக இருப்பதுதான் கபிலனின் பொழுதுபோக்கு. பணம் மட்டும் தாராளமாய் கொடுப்பானாம்.

கபிலனிடம் ஒரு பழக்கம்; ஒரு முறை தொட்ட பெண்ணை மறுமுறை திரும்பியும் பார்க்கமாட்டான். கபிலன் மறைவால் துணை நடிகைகள் பலர் சோகத்தில் இருக்கிறார்கள்.

www.padippakam.com

# தேங்காயில் பொம்மைகள்



"தீயவற்றைப் பார்க்காதே, தீயவற்றைப் பேசாதே, தீயவற்றைக் கேட்காதே" என்பது காந்தியின் உபதேசம். அந்த உபதேசத்தை நினைவூட்டும் பொம்மைகளை காந்திப் பொம்மைகள் என்றும் அழைப்பர். படத்தில் காந்திப் பொம்மைகள் போன்றவையும், யானை, குரங்கு போன்றவையும் காணப்படுகின்றனவல்லவா.

எந்தப் பொம்மைகளிலும் இல்லாத ஒன்று இந்தப் பொம்மைகளில் இருக்கிறது. இவை எல்லாம் தேங்காய்களில் செய்யப்பட்டவை.

இந்தியாவில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த பிரதாபன் என்பவர்தான் இந்த அதிசயக் கலைப்படைப்புக்குச் சொந்தக்காரர். (படத்தில் இருப்பவர்)

முழுத் தேங்காயை எடுத்து உரித்தும், சீவியும் பொம்மைகளை தத்ருபமாக உருவாக்கி விடுகிறார். பிரதாபனுக்கு என்ன கவலையென்றால், அவரிடம் உள்ள இந்த அதிசயக் கலைத்திறமைக்கு இந்தியாவில் போதிய மரியாதை கிடைக்கவில்லையாம். கேரளாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள்தான் வியந்து வியந்து விலைகொடுத்து வாங்கிப்போகிறார்களாம். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். பிரதாபனுக்கு தேங்காயும் ஆயுதம். நாமெல்லாம் தேங்காய் உடைப்பாளிகள். இவரோ தேங்காயில் படைப்பாளி.

# தகவல் பெட்டி

## கோழிக் கள்ளன்

மலைப்பாம்பு பொல்லாதது என்று தெரியும். படத்தில் இருப்பது மலைப்பாம்புகளில் இளசு. பெரிசோ, இளசோ அகப்பட்டதை சுருட்டி விழுங்கு வதில் மலைப்பாம்புகள் கில்லாடிகள். இந்த மலைப்பாம்புக்கும் பசி வயிற்றைக் கிள்ளியிருக்கிறது. கண்ணில்பட்டது ஒரு கோழிக்கூடு. கூட்டுக்குள் இருந்த கோழியை லபக்கென்று பிடித்து விழுங்கத் தயாரானபோது வீட்டுக்காரர் கண்டுவிட்டனர். சத்தம் போட்டு அயலவர்களையும் அழைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் மலைப்பாம்பு மயங்கிப் போனது. கோழிமட்டும் பிணமாக மீட்கப்பட்டது.

மலைப்பாம்பு கோழியை விழுங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது எல்லோரும் கம்புகளாலும், தடிகளாலும் தாக்கிக்கொண்டிருக்க, ஒரு புகைப்படப்பிடிப்பாளர் மட்டும் கருமமே கண்ணாயிருந்து கமராவால் அடித்தார் ஒரு 'கிளிக்'. அந்தப் படம்தான் இது.



## தலையில் ஒரு கோபுரம்



கோயிலில்தான் கோபுரம் இருக்கும். இந்த அழகியின் தலையிலும் கோபுரம் இருக்கிறதே. கும்பிடவேண்டாம். கூர்ந்து பாருங்கள். அட... தொப்பி!

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்போதெல்லாம் மீண்டும் பழையன புகுதல்தால்தான் பாஷனாகிவருகிறது. இந்த அழகி இப்படித் தோன்றுவதும் ஒரு பாஷன் கண்காட்சியில்தான். இவர் அணிந்திருப்பது ஆபிரிக்க நாட்டு பழங்குடி மக்கள் அணியும் பாரம்பரியத் தொப்பி. ஒரே ஒரு தொப்பிதான். இந்தத் தொப்பியோடு நடந்து போனால் திருவிழாவில் சப்பரம் செல்வதுபோல இருக்கும். இந்தத் தொப்பியோடு தோன்றிய அழகிக்கு பலத்த வரவேற்பு. பாரிசில் சமீபத்தில் நடைபெற்ற பாஷன் கண்காட்சியில் முதல் பரிசும் இவருக்குத்தான். இந்த அழகியின் திருப்பெயர் அன்னா கொடானே. எதியோப்பியா நாட்டைச் சேர்ந்தவர். போகிற போக்கில் நம் ஊர் பனம்தொப்பிகள், தென்னோலைத் தொப்பிகளுக்கும் பயங்கர வரவேற்பு கிடைக்கும் போலிருக்கிறது.

## இடம்பெயர்வுக்கு எதிர்ப்பு

என்ன இது கரடிகளின் கண்டன ஊர்வலமோ? என்று நினைக்கிறீர்களா? மனிதர்கள்தான் இப்படிக் கரடி வேஷத்தோடு கலாட்டா செய்கிறார்கள்.

ஜப்பானில் ஒரு தொழில் நிறுவனம் காட்டுப் பகுதியை அழித்துத் தொழிற்சாலை கட்டியது. காடுகளில் இருந்த கரடிகள் இடம்பெயர்ந்து நகருக்குள் ஓடி வந்துவிட்டன. இதனைக் கண்ணுற்ற மக்களுக்கு கரடிகள் மீது கரிசனை ஏற்பட்டுவிட்டது. கரடிகள் நியாயம் கேட்க முடியாது என்பதால், தாமே கரடிகள் போல் வேஷமிட்டு "காடுகளை அழித்தால் எங்கள் கதி என்னாவது?" "காடுகளைக் காப்பாற்றுங்கள்." என்றெல்லாம் கோஷமிட்டபடி ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். கரடிகள் சார்பாக மனிதர்கள் நடத்திய ஊர்வலம்.

கரடிகள் இடம்பெயர்வதைக்கூட ஜப்பான் மக்களால் தாங்க முடியவில்லை. ஆனால் நம்நாட்டிலோ மனிதர் இடம்பெயர்ந்தால்கூட பலரது மனம் கல்லாகவே இருக்கிறது.





## சுழலும் அணைக்கட்டு

இலண்டனில் இருக்கிறது தேம்ஸ் நதி. அழகான நதியாக இருந்தாலும் ஆபத்தும் இருக்கிறது. அதன் நீர்மட்டம் திடீரென்று 40 அடிக்கு மேலே உயர்ந்தால் லண்டன் நகரின்மீது வெள்ளம் படையெடுப்பு நடத்திவிடும்.

நகர் அழிந்தால் என்னவென்று அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கவில்லை. நதியின் அழகுக்கும் பழுதில்லாமல், நகருக்கும் பாதிப்பு வராமல் ஒரு திட்டம் போட்டனர்.

உல்விச் என்னுமிடத்தில் தேம்ஸ் நதியின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டது. இந்த அணையில் உள்ள விசேஷம் என்ன தெரியுமா? இந்த அணை தேவையானபோது சுழலும். படத்தில் இருப்பதுதான் அந்த அணை. சாதாரண காலங்களில் இந்த அணையின் இடைவெளியூடாக சிறிய கப்பல்கள் புகுந்து போகலாம், வரலாம். கடல் கொந்தளிப்பு ஏற்படும் சமயங்களில் எலெக்ட்ரோனிக் முறையில் பொருத்தப்பட்டுள்ள ஒரு பொத்தானை அமுக்கிவிட வேண்டியதுதான். இந்த அணைக்கட்டு அரை வட்டமாகத் திரும்பி இடைவெளியை மூடிக்கொள்ளும். இந்த சுழலும் அணையை தேம்ஸ் நதியின் நீர் மட்டத்தில் இருந்து 60 அடிவரை உயர்த்தவும் முடியும்.



இந்த அணை இருப்பதால்தான் தன்னைத் தாக்கவரும் கடல் கொந்தளிப்புகளுக்கு இலண்டன் நகரம் டாட்டா காட்டிக்கொண்டிருக்கிறது. அங்கே ஒரு நகரைப் பாதுகாக்க எத்தனை ஏற்பாடு. நம்நாட்டில் சில நகரங்களைப் பார்க்க முடியவில்லை. போர் அலையில் காணாமல் போய்விட்டன.

## ஸ்டைலு, ஸ்டைலுதான் நாயும் ஸ்டைலுதான்



அழகிப்போட்டிகள் நடத்தலாமா, கூடாதா என்று சர்ச்சைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அழகிப் போட்டிகள், ஆணழகன் போட்டிகள் என்று நீங்க ஸ்டைல் பண்ணினால் நாங்க மட்டும் அக்கடா துக்கடா என்று ஸ்டைல் பண்ணக்கூடாதோ? என்று கேட்காமல் கேட்கத் தொடங்கிவிட்டன நாய்கள்.

அமெரிக்காவில் உள்ள டென்னிஸ் நகரில் சமீபத்தில் வல்லவன் அழகர்களும், அழகிகளும் கலந்துகொண்ட போட்டி நடைபெற்றது. அதாகப்பட்டது, நாய் அழகுப்போட்டி. கலந்து கொண்ட அழகு நாய்களில் நடுவர்களை அசத்தி முதல் இடத்தைப் பெற்ற நாய்தான் கீழே அமர்ந்திருக்கிறது. (பார்வையில் ஒரு கர்வம் தெரிகிறதாக்கும்)

மேலே கழுத்தில் ஒரு அட்டையுடன் காணப்படும் நாய் நடுவர் குழுவைச் சேர்ந்தது. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? நடுவர் குழுவில் இருப்பவர்கள் ஒவ்வொரு நாயாக மேடையில் தோன்றும்போதும் தமது குழுவில் உள்ள நாயைக் கவனிப்பார்கள். அது திருப்தியாக தலையசைத்தால் குறிப்பிட்ட அழகு நாய்க்கு கூடுதல் புள்ளி கிடைக்கும்.

முதல் பரிசை பெற்ற நாயின் பெயர்: பிரின்ஸ் ரெபக்கா. ரெபாக்காவைக் கண்டதும் நடுவர் குழுவினரின் நாய் பலமாக தலையாட்டியதாம். வினோதமாக இருக்கிறதல்லவா. பணக்காரர்களின் பொழுதுபோக்குகளில் இதைவிட வினோதமான விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com



## மம்மூட்டியுடன் ரம்பா- ரம்யா

மலையாள நடிகர் மம்முட்டி தமிழில் நடித்த 'மக்களாட்சி' படம் சூப்பர் ஹிட். அதனால் தொடர்ந்தும் தமிழில் நடிக்க விருப்பமாக இருக்கிறார்.

'மக்களாட்சி' படத்தை இயக்கிய செல்வமணியின் இயக்கத்தில் 'அரசியல்' என்னும் படத்தில் மம்முட்டி நடித்துவருகிறார். அதுதவிர 'புதையல்' படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

சரத்குமார் நடிக்கும் 'அரவிந்தன்' படத்தை தயாரித்துள்ள 'அம்மா கிரியேஷஸ்' படநிறுவனம் மம்முட்டி நடிக்கும் படம் ஒன்றையும் தமிழில் தயாரிக்கிறது. படத்திற்கு சூட்டியுள்ள பெயர் 'அகிம்சை'.

'அகிம்சை'யில் மம்முட்டி பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். கதாநாயகிகள் இரண்டுபேர். ஒருவர் ரம்பா. இன்னொருவர் ரம்யா. கவர்ச்சிப்போட்டி தூள் கிளம்பப்போகிறது.

பிரகாஷ்ராஜ், மணிவண்ணன், ஆனந்தராஜ், ராஜன் பி தேவ் ஆகியோரும் நடிக்கின்றனர்.

மலையாளத்தில் 'திகில்', 'மாபியா', நியூஸ் போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் ஷாஜி கைலாஸ். 'அகிம்சை' படத்திற்கு அவர்தான் இயக்குநர். இசை; வித்யாசாகர். சண்டைப் பயிற்சி; கனல் கண்ணன். டிசம்பர் மாதம் படப்பிடிப்பு ஆரம்பம்.

மம்முட்டி நடித்து மலையாளத்தில் வெற்றிபெற்ற படம் ஒன்று தமிழில் 'பிரதிநிதி' என்ற பெயரில் விரைவில் திரைக்கு வரவுள்ளது.

சுபாஸ்ரீ-ஜெகபதிபாபு-பிரேமா
படம்: என் பொண்டாட்டி கலெக்டர்

## அப்பாஸ்—இனிய 18

தமிழ் திரையுலகில் இளம் உள்ளங்களை சுண்டி இழுக்கும் இளம் ஹீரோக்களில் ஒருவர் அப்பாஸ். 'காதல் தேசம்' படத்தின் வெற்றியால் மளமளவென புதுப்படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.

இதோ அப்பாஸின் பயோடேட்டா.

**சொந்தப் பெயர்:-** மிர்சா அப்பாஸ் அ...

**சினிமாவில்:-** அப்பாஸ்.

**வயது:-** பதினெட்டு

**உயரம்:-** ஐந்தடி பத்தரை அங்கு...

**எடை:-** எண்பது கிலோ

**படிப்பு:-** மும்பாய் ஜெய்... கல்லூரியில் பி.காம் மூன்ற... ஆண்டு படித்துக் கொண்டி... கிறார்.

**சொந்த ஊர்:-** பெங்களூர்.

**முதல் படம்:-** காதல் தேசம்.

**சினிமாவில் சிநேகித-சிநேகிதி...** வினீத், தபு, குஷ்பு, குஷ்பு... தம்பி அப்துல்லா.

**காதல் அனுபவம்:-** இருக்கி... சொல்ல விரும்பவில்லை.

## லவ் 97

பிரபுதேவாவின் தம்பி நாகேந்திரபிரசாத் கதாநாயகனாக நடிக்கும் படம் 'லவ்97' கதாநாயகியாக ருஷிதா என்னும் புதுமுகம் அறிமுகமாகிறார். ருஷிதா லேசுப்பட்டவரல்ல. 'மிஸ் பெங்களூர்' பட்டத்தை அழகால் வென்றவர்.

பல படங்களுக்கு உதவி இயக்குநராகப் பணிபுரிந்த விஷ்வா 'லவ்97' மூலம் இயக்குநராகிறார்.

# சினி விசிட்

## துணிச்சலான சோனாலி

இந்தி நடிகை சோனாலி பந்ரே புருனே மன்னரின் அன்புக்கு அடிமை. ஒளிவு மறைவு என்றால் என்னவென்று தெரியாதவர். மும்பாய் பத்திரிகை ஒன்றுக்கு சோனாலி அளித்த சுருக் சுருக் பதில்களில் உதாரணத்திற்கு சில.

கேள்வி:- ஒருகோடி ருபாய் கொடுத்து உங்களை தப்பான காரியத்திற்கு அழைத்தால் இணங்குவீர்களா?

பதில்:- அப்படி அழைப்பவர் முதலில் என் நம்புக்கையைப் பெறவேண்டும்.

கே:- உங்களுக்கு கணவராக வரப்போகிறவரை இன்னொரு பெண்ணுடன் நெருக்கமாகக் காண நேர்ந்தால் என்ன செய்வீர்கள்?

பதில்:- நான் விலகிக்கொண்டு எனக்குப் பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்து கொள்வேன்.

"பொன்வண்டு...
பூந்தென்றல்...
விண்மேகம்...
கண்பட்டு வ...



## 'சிறகுகள் முறிவதில்லை'
### பாரதிராஜாவுடன் நெப்போலியன்

சீவலப்பேரி பாண்டி, முஸ்தபா போன்ற வெற்றிப் படங்கள் உட்பட கதாநாயகனாகவும், வில்லானாகவும் இதுவரை 49 படங்களில் நடித்துள்ளார் நெப்போலியன்.

'புதுநெல்லு புது நாத்து' படத்தின் மூலமாக நெப்போலியனை திரையுலகுக்கு கொண்டு வந்தவர் இயக்குநர் பாரதிராஜா. நெப்போலியனின் 50வது படத்தையும் பாரதிராஜா தான் இயக்கப்போகிறார்.

பாரதிராஜா திரைக்கதை அமைத்து இயக்க நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கப்போகும் படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'சிறகுகள் முறிவதில்லை'. நெப்போலியனின் ஜோடியாக ஹீரா நடிக்கிறார். மணிவண்ணன், அலெக்ஸ் ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்குநர் மணிவண்ணனை 'கொடி பறக்குது' படத்தில் வில்லனாக நடிக்கவைத்தவரும் பாரதிராஜாதான்.

நெப்போலியன்-ராதிகா
படம்: எட்டுப்பட்டி ராசா

## ஆச்சியின் புகழ்ச்சி

ரஜினியுடன் பகை விலகியதால் சந்தோசமாக இருக்கிறார் ஆச்சி மனோரமா. 'அருணாச்சலம்' படத்தில் மொட்டைத் தலை பாட்டியாக ஆச்சியை நடிக்க வைக்க ஆசைப்படுகிறாராம் இயக்குநர்.

ஆச்சியின் சகவாசமே வேண்டாம் என்று ஒதுங்கிப்போன தயாரிப்பாளர்கள் மீண்டும் திரும்பிவருகிறார்களாம்.

'மறுவாழ்வு தந்தான் மவராசன்' என்று ரஜினியை வாய் ஓயாமல் புகழ்கிறாராம் மனோரமா.

உடன்பிறவா சோதரிகளின் பெயரைச் சொன்னாலே பொங்கி எழுந்து வசைபாடுகிறார். அத்தனை வெறுப்பு இருக்காதே பின்னே.

## புதிய படம் 'பகைவன்'

சத்யராஜ், அஜித்குமார் இருவரும் இணைந்து நடிக்கும் படத்திற்கு 'பகைவன்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

'அதர்மம்' வெற்றிப்படத்தை இயக்கிய ரமேஷ் கிருஷ்ணன் 'பகைவனை' இயக்கப்போகிறார். 'அசுரன்' படத்தை இயக்கிய வேலு பிரபாகரன் ஒளிப்பதிவு செய்கிறார். இசை: தேவா. பாடல்கள்: பழனிபாரதி.

முன்னணி நடிகை ஒருவரும், மும்பாய் நடிகையும் கதாநாயகிகளாக நடிக்கவுள்ளனர். மணிவண்ணன் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளார்.

## பணம்தான் வாழ்க்கையா?

பணமில்லாமலும் சந்தோசமாக வாழலாம் என்ற குணமுடையவன் ரிஷி. 'பணமில்லாமல் வாழமுடியாது. பணமிருந்தால் யாரையும் விலைக்கு வாங்கிவிடலாம்' என்ற குணமுடையவன் மோகன். ரிஷியாக நடிக்கிறார் கார்த்திக். மோகனாக நடிப்பவர் கரண். நடிக்கும் படம் 'கோகுலத்தில் சீதை!

தீபாவளி வெளியீடாக வரும் 'கோகுலத்தில் சீதை' படத்தில் நடிப்புக்கு சுவலட்சுமி, கவர்ச்சிக்கு சுவர்ணா என்று தரமறிந்து பயன்படுத்தியிருக்கிறார் இயக்குநர் அகத்தியன். மணிவண்ணன், 'தலைவாசல்' விஜய் பாண்டு ஆகியோரும் நடிக்கின்றனர். 'காதல் கோட்டை' பட இயக்குநரின் படம் என்பதால் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.



கார்த்திக் முகப்பில் சுகன்யா~சங்கீதா

ரமேஷ் அரவிந்த்-சுருதி
படம்: கற்பூர பொம்மை

## அழகிகளை வைத்து வியாபாரம் நடிகை பானுப்பிரியா வீட்டில் வேட்டை

பானுப்பிரியா வீட்டில் ஒரு முன்னாள் அமைச்சர் பதுங்கியிருக்கிறார் என்று சந்தேகித்து பொலிசார் தேடுதல் நடத்தினார்கள். அச்செய்தி சென்றவார முரசில் வெளியாகியிருந்தது.

தேடுதல் நடத்தியபோது பானுப்பிரியாவின் வீட்டில் முன்னாள் அமைச்சரைக் காணவில்லை. ஆனாலும் பொலிசாரின் கழுகுக் கண்களில் பானுப்பிரியாவின் வீட்டில் இருந்த கட்டழகிகள் கண்ணில் பட்டிருக்கிறார்கள். கண்டும் காணாததுபோல சென்றுவிட்டார்கள் பொலிசார்.

அதன்பின்னர் பானுப்பிரியாவின் வீட்டில் என்ன நடக்கிறது என்று மோப்பம் பிடித்தார்களாம். பெரும் புள்ளிகளுக்கு வலைவிரித்து விபச்சாரம் ஓஹோவென்று நடப்பதை கண்டு பிடித்தனர் பொலிசார்.

பானுப்பிரியாவிடம் வருபவர்கள் அவர் பிஸியாக இருந்தால் அங்குள்ள கட்டழகிகளுடன் ஜாலியாக இருந்துவிட்டுப் போகலாம். வாடிக்கையாளர்கள் ஏமாறக்கூடாது என்பதால் அப்படியொரு சமயோசிதமான ஏற்பாடாம்.

திடீரென்று பானுப்பிரியா வீட்டை முற்றுகையிட்டனர் விபச்சார ஒழிப்புப் பிரிவுப் பொலிசார்.

வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கிக் கொண்டிருந்த அழகிகளும், பானுப்பிரியாவும் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர். பானுப்பிரியா துள்ளிக் குதித்து அடம்பிடித்தாராம். பொலிசார் மசியவில்லை. உடனே அழுது ஆர்ப்பாட்டம் பண்ணத் தொடங்கிவிட்டாராம்.

பானுப்பிரியாவின் தந்தை செல்வாக்குள்ள ஒரு பிரமுகரிடம் தொடர்பு கொண்டதையடுத்து பானுப்பிரியாவை மட்டும் விடுதலை செய்துவிட்டு, அழகிகள்மீது மட்டும் வழக்குத் தொடுத்துள்ளனர் பொலிசார்.

பானுப்பிரியாவின் தந்தையும் விபசாரத்தரகராக இருந்த குற்றத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். முன்னர் ஒரு தடவையும் அழகிகளை வைத்து வியாபாரம் செய்த குற்றத்திற்காக பானுப்பிரியாவின் தந்தை கைது செய்யப்பட்டவர்.

நடிகைகள் பலர் வீடுகளில் இப்படியான விவகாரங்கள் நடப்பது வழக்கம்தான். முன்னாள் அமைச்சர் ஒருவரோடு தொடர்பாக இருந்த காரணத்தால்தான் பானுப்பிரியா வீட்டில் பொலிசார் துணிச்சலாகப் புகுந்துவிட்டனர். ஆட்சி மாறியதால் ஏற்பட்ட வினை.



படிப்பகம்

www.padippakam.com




# வெறிபிடித்த ரசிகர்
## சுண்டுவிரலை நறுக்கினார்

நடிகர், நடிகைகள்மீது வெறித்தனமான அபிமானம் கொண்ட ரசிக, ரசிகைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தனது அபிமான நடிகருக்குத் தன் சுண்டுவிரலை வெட்டி அனுப்பிய ரசிகரும் இருக்கிறார் என்றால் நம்புவீர்களா? நம்பித்தான் ஆகவேண்டும்.

தமிழ்நாட்டில் மதுரையைச் சேர்ந்தவர் விஜய பாஸ்கரன். அவர் விஜய் ரசிகர். விஜய்க்கு அடிக்கடி கடிதம் போடுவார் பாஸ்கரன். விஜயும் அக்கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் போட்டுவிடுவார்.

சமீபத்தில் பாஸ்கரன் கடிதம் போட்டபோது விஜய் வெளியூர் படப்பிடிப்பில் இருந்தார். அதனால் பதில் போடத் தாமதமாகியது. விஜய் தன் அன்பைப் புரிந்து கொள்ளவில்லையோ என்று நினைத்தார் பாஸ்கரன்.

சட்டென்று தன் சுண்டுவிரலை வெட்டி அதை ஒரு போத்தலில் போட்டு பார்சல் செய்து அனுப்பிவைத்தார். பார்சலைப் பிரித்துப் பார்த்த விஜய் அதிர்ச்சி அடைந்தார். உடனே பாஸ்கரனுக்கு தந்தி அடித்து வீட்டுக்குக் கூப்பிட்டார். நீண்ட நேரம் பாஸ்கரனுக்கு அறிவுரை வழங்கி ஒரு நாள் முழுக்க தனது விருந்தாளியாக வைத்திருந்தார் விஜய்.

அப்போதும் திருந்தவில்லை அந்த ரசிகர். “இனிமேலும் நீங்கள் கடிதம் போடாவிட்டால் என்கையில் ஒன்பது விரலும் இருக்காது.” என்று அன்பாக மிரட்டிவிட்டுப் போனாராம். காலம் கெட்டுத்தான் போச்சு!

‘ஆசை’ நாயகனான நடிகரும் ஹீர நடிகையும் காதல் கோட்டைக்குள் சிக்கியிருப்பது தெரிந்த விடயம்தான். நாயகன் மறுப்பறிக்கை விட்டதெல்லாம் பொய்வேலை. ‘உல்லாச’மான படத்தில் நடிப்பதற்காக வெளிநாடு சென்ற நாயகன் திரும்பிவந்தார். விமான நிலையத்தில் அவரை ஆரத்தழுவி வரவேற்றாராம் ஹீர நடிகை. நாயகன் கையோடு கொண்டுவந்த அன்புப் பரிசைப் பார்த்ததும் புல்லரித்துப்போனாராம் நடிகை. பரிசாகக் கொடுக்கப்பட்டது ஒரு நாய்க்குட்டி.

ஹிந்தித் திரையுலகின் உயரமான பச்சனை தமிழ் நடிகைகள் சிலர் துரத்தோ துரத்தென்று துரத்துகிறார்களாம். நீண்டகாலத்திற்கு பின்னர் நடிக்கவந்துள்ள ‘பச்சன்’ பார்வை தம்மீது பட்டால் ஹிந்தியில் நடிப்பதோடு, தாராளமாகவும் சம்பாதிக்கலாமே என்ற ஆசைதான். பச்சனை துரத்தும் தமிழ் நடிகைகள் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் ‘மீன்’ நடிகை. சாமியார்களே ஏதேதோ செய்கிறார்கள். இந்த ‘பச்சன்’ மட்டும் உண்மையான சாமியார்போல அசையாமல் இருக்கிறாரே என்று நடிகைகள் சிலர் பெருமூச்சு விடுகிறார்களாம். பெரு மூச்சுக்கு காரணம், தந்திரமுயற்சியின் தோல்விதான்.

## காதோடு சொல்லுகிறோம்

‘கெள’ நடிகை கல்யாணம் செய்யப்போகிறார் என்பது தெரிந்த செய்திதான். தெரியாத செய்தி ஒன்றும் இருக்கிறது. தனது முன்னாள் காதலரான ஒளிப்பதிவாளருக்கு பிரியாவிடையாக ஒரு கார் வாங்கிக் கொடுத்திருக்கிறாராம் நடிகை.

‘ரம்ப’ நடிகையின் இன்றைய மார்க்கெட் நிலவரம் 50 லகரம். சூப்பர் ஸ்டாரின் படத்தில் மட்டும் ரேட்டை தளர்த்திக் கொண்டாராம். சூப்பர் ஸ்டாருக்கு படத்தில் இன்னொரு ஜோடியும் இருப்பதால் இயக்குநருக்கு அன்பு வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கிறாராம் ரம்ப நடிகை. மற்ற நடிகையைவிட தனக்குத்தான் முக்கியத்துவம் தர வேண்டும் என்பதுதான் வேண்டுகோள். வேண்டுதல் நிறைவேற தட்சணை கொடுக்கவும் நடிகை தயாராம். ‘பூ’ நடிகை அறிந்தால் பூகம்பம் ஆகிவிடும் என்பதால் நடிகையின் தட்சணையை ஏற்கத் தயங்குகிறார் சுந்தரமான இயக்குநர்.

மும்பாய் நடிகைகளை கண்டபடி இறக்குமதி செய்வதைக் கண்டித்துக் குரல் கொடுக்கப்போகிறாராம் ‘சங்க’ நடிகை. “நம்மிடம் இல்லாதது எது அவங்கிட்ட இருக்குண்ணு தயாரிப்பாளர்களை கேட்கணும்” என்று காட்டமாகப் புலம்பிக் கொண்டிருக்கிறாராம். பதில் சொல்வது ரொம்பக் கஷ்டம் தான்.


பிரபு-நக்மா
படம்: பெரிய தம்பி

## மினி சினி

* கார்த்திக்கிற்கு ஜோடியாக ‘சிஷ்யா’ படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார் நக்மாவின் தங்கை ரோஷினி. தமிழில் அறிமுகமாகு முன்னர் கன்னடப்படம் ஒன்றில் ‘மலைச்சாரல்’ ராம்குமாருக்கு ஜோடியாக நடித்திருக்கிறார் ரோஷினி.

* பின்னணிப் பாடகர்களில் அதிக சம்பளம் வாங்குபவர் யார் தெரியுமா? ‘டெலிபோன் மணிபோல்’ பாடலைப்பாடிய ஹரிஹரன் தான். இவர் ஒரு பாடலுக்கு இருபத்தையாயிரம் வரையில் வாங்குகிறார்.

* நெப்போலியன், பாண்டியராஜன், மணிவண்ணன் மூவரும் இணைந்து ஒரு படத்தில் நடிக்கிறார்கள். இப்படத்தில் மூவருக்கும் ஜோடிகள் இல்லாமல் கதை உருவாக்கப்பட்டுள்ளது.

* சிவாஜி-எம்.ஜி.ஆரின் பல படங்களில் வில்லனாக நடித்தவர் எஸ்.வி.ராமதாஸ். இவரது மகன் வேணு ‘ஆசை அலைகள்’ என்ற படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார். இவருக்கு ஜோடியாக பபிதா பௌர்ணமி புதுமுகம் நடிக்கிறார்.

* இந்தியில் அஜய் தேவகன், மதுபாலா, சோனாலி பந்ரே நடித்த ‘தில்ஜாலே’ படத்தின் வெற்றியினால் சோனாலி பந்ரேக்கு பல படவாய்ப்புக்கள் வந்திருக்கின்றன. ஆனால் மதுபாலாவுக்கு எந்தப் புதுப்பட வாய்ப்புக்களும் வரவில்லை.

* சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரித்த ‘அபிராமி’, ‘சின்னமேடம்’ ஆகிய படங்களை இயக்கிய திலீப்குமார், தனது மூன்றாவது படத்தையும் இதே நிறுவனத்திற்காக இயக்குகிறார். இப்படத்திற்கு ‘உளமார நேசிக்கிறேன்’ என்று பெயரிடப்பட்டுள்ளது.

* ‘காதல் கோட்டை’ படத்திற்காக ஒரு பாடலை எழுதிய இயக்குநர் அகத்தியன், தற்போது இயக்கி வரும் ‘கோகுலத்தில் சீதை’ படத்திற்கு பாடல்கள் அனைத்தையும் எழுதியுள்ளார்.

* பிரியதர்ஷன் இயக்கத்தில் இந்திப்படமொன்றில் நடித்துவரும் அரவிந்தசாமி, அடுத்து மகேஷ் பட் இயக்கும் இன்னொரு இந்திப்படத்திலும் நடிக்க இருக்கிறார். இதில் இவருக்கு ஜோடி ‘முன்னாள் உலக அழகி’ ஐஸ்வர்யாராய்.

* ‘சிறைப்பறவை’,‘மூடுமந்திரம்’,‘முற்றுகை’ உட்பட பல படங்களை இயக்கிய மனோபாலா கடைசியாக இயக்கிய படம் ‘கறுப்புவெள்ளை’. படவாய்ப்புக்கள் இல்லாமல் இருந்த இவர் தற்போது ஒரு தெலுங்குப் படத்தை இயக்கி வருகிறார்.

* ராமராஜன் இயக்கி நடிக்கும் ‘ராமர் படை’ படத்தில் கதாநாயகியாக சங்கீதா நடித்து வருகிறார். இப்படத்தில் சங்கீதாவின் தம்பி ராஜா சிறிய வேடமொன்றில் நடிக்கிறார்.

## ..பாலாவின் இரகசியம்

..டில்மேன் படத்தில் ஷங்கரின் இயக்கத்தில் நடித்தவர் மதுபாலா. ..பாது ஏற்பட்ட நெருக்கம் ‘பலமான நட்பாக’ மாறியதாக கிசு கிசுக்கள் ..ந்தன.

..டில்மேன் படத்தில் மதுபாலா எப்படி நடிக்கவேண்டும் என்று தனியாகவே சொல்லிக்கொடுத்தார் ஷங்கர். ஷங்கரின் அறையிலேயே ..ந்து படப்பிடிப்பில் கலந்து கொண்டார் மதுபாலா. இதெல்லாம் ..சய்திகள்.

..தில் மதுபாலாவுக்கும் அவரது தந்தைக்கும் இடையே சண்டை. ..தன் இஷ்டத்துக்கு நண்பர்களுடன் சுற்றுகிறார். கட்டுப்படுத்தவேண்டும் ..டியைத் தூக்கினார் தந்தைக் குலம். கோபித்துக்கொண்டு வீட்டை ..றப்பட்ட மதுபாலா நேராக ஷங்கரின் வீட்டுக்குச் சென்றுவிட்டார். ..சய்தி வெளியே தெரிந்ததும் மதுபாலாவையும் தந்தையையும் சமரசம் ..த்து மதுபாலாவை தந்தையுடன் அனுப்பி வைத்துவிட்டார் ஷங்கர். ..டி ஒரு சம்பவமே நடக்கவில்லை. ஷங்கர் வீட்டுக்கு நான் போகவே ..ன்று மும்பாய் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி கொடுத்திருக்கிறார் .. முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைக்கலாமோ?

..ய் பத்திரிகைப் பேட்டியில் மதுபாலா மேலும் சொல்லியுள்ள ..ளை கேளுங்கள்.

.. நண்பர்களுடன் வெளியே செல்வதுண்டு. எல்லோருமே யாராவது ..ன் வெளியே போய்வருகிறவர்கள்தான். என்பதை நாடறியும். நாம் மனிதப் பிறவிகள்தான்.

.. காதல் விவகாரத்தை நான் ஏன் வெளியே ..வண்டும். மறைப்பதில் ஒன்றும் தவறில்லை. ..ந்தசாமி என்னைக் கவர்ந்த ..வரிடம் கற்றுக்கொள்ள ..க்கிறது. அவர் ..தரர்.”

## அழகிப் போட்டியில் இளையராஜா

நவம்பர் 23ம் திகதி உலக அழகு ராணிப் போட்டி இந்தியாவில் பெங்களூரில் நடைபெறுகிறது.

பெண்கள் அமைப்புக்களின் மிரட்டல்களுக்கு பணியமறுத்துவிட்டார் அமிதாப்பச்சன். என்ன தடை வந்தாலும், மலையே என் எதிரே உருண்டு வந்தாலும், அழகுராணிப் போட்டியை நடத்தியே தீருவேன் என்கிறார் அமிதாப்பச்சன். நடிகரும் பிரபல தொழில் அதிபருமான அமிதாப்பச்சனின் நிறுவனம்தான் போட்டியை நடத்துகிறது.

உலக அழகு ராணிப் போட்டி நிகழ்ச்சிகளுக்கு இசை அமைக்கப் போகிறவர் யார் தெரியுமா? இளையராஜா.

அமிதாப்பச்சனுக்கு இளையராஜாவின் இசை என்றால் பிடிக்குமாம். அமிதாப்பச்சன் தயாரிப்பில் அஜித்குமார்-மகேஸ்வரி நடிக்கும் படம் உல்லாசம். அதற்கு இசையமைப்பது இளையராஜாவின் மகன் கார்த்திக்ராஜா.

ஏ.ஆர்.ரகுமான் பக்கம் அமிதாப்பச்சன் இன்னமும் திரும்பவில்லை. ஆனால் ஹிந்தி திரையுலகிலும் பிரபலமாகியுள்ள தமிழ் திரையுலக இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்தான்.


கார்த்திக்-சொர்ணா
படம்: கோகுலத்தில் சீதை

## நக்மாவுக்கு பிடித்த ஹீரோக்கள்

“உனக்கு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பரவாயில்லை. 98ல் நீ உச்சத்தில் இருக்கலாம். உற்சாகமாக இரு” என்று நக்மாவுக்கு சொல்லி இருக்கிறராம். யார் என்கிறீர்களா? சினிமா உலகில் பிரபலமான ஜோசியர் ஒருவர்தான் அப்படிச் சொல்லியிருக்கிறாராம்.

கார்த்திக், சரத்குமார் ஆகிய இரண்டு ஹீரோக்களுடன் மட்டும்தான் நக்மா நெருக்கம். அந்த இரண்டு ஹீரோக்களுடனும் நடிக்கும்போது இயக்குநர் விருப்பத்தைவிட மும்முடங்கு நெருக்கமாகவும் நடிப்பார் நக்மா. மேட்டுக்குடி படத்தில் கார்த்திக்குடன் ஒருநாள் மட்டும் செல்லமாகக் கோபித்தார். பின்னர் டபுள் ஓ.கே.

இப்போது ‘அரவிந்தன்’ படத்தில் சரத்குமாருடன் பாடல் காட்சிகளில் ஒரே கலக்கல்தான். ‘கம்’ போட்டு ஒட்டாத குறை.

‘பெரிய தம்பி’ படத்தில் பிரபுவுடன் நடித்தபோதுமட்டும் இயக்குநர் சொன்னபடி நடிப்பதோடு நிறுத்திக்கொண்டார். பிரபுவுக்கு முத்தம் கொடுக்கவும் மறுத்துவிட்டார். இப்போது அதற்கு பலரகமான காரணங்களைக் கூறிக்கொண்டிருக்கிறார்.

எப்படியிருந்தாலும் புதிதாக நாலு தமிழ் படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார் நக்மா. கார்த்திக் புண்ணியத்தில் தனது தங்கைக்கும் சான்ஸ் வாங்கிக்கொடுத்து விட்டார். 98ல் மேலும் ஒருபடி மேலே போய்விடலாம் என்ற நம்பிக்கையில் உற்சாகமாகவும் இருக்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

# உதடுகள் பேசுவதில் உள்ளம் தெரியுமா?

## பேச்சும் குணவீச்சும்

பல காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்குப்பேச்சு உதவுகிறது. இதிலே மிகவும் தேர்ந்தவர்களாகச் சிலர் இருக்கிறார்கள். சிலர் பேச்சு இனிமையாக இருக்கும். வேறு சிலருடையது கடுமையாக இருக்கும்.

நிதானமாக நிறுத்திப் பேசுகிறவர் சிந்தனைத்திறனும் அறிவாற்றலும் உள்ளவர். எப்போதும் செயற்படத் துடிக்கும் சிலர் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லக் கூடியவராக இருப்பர். அவருடைய கருத்துக்கள் அறிவுக்குப் பொருந்துவதாக இருக்கும். யாருடன் பேசினாலும் அவருடைய மகிழ்ச்சியைக் கூட்டுபவராகவே இவர் இருப்பார். எல்லாருடைய அன்பையும், நன்மதிப்பையும் பெற வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவராக இவர் இருப்பார்.

தயங்கித் தயங்கிப் பேசுவது ஒரு விதம். இவர்கள் சரியான வார்த்தையைத் தேடிக் கண்டுபிடிக்க கஷ்டப்படுவார்கள். இத்தகையவர்கள் கோழைகளாக இருப்பார்கள். தன்னம்பிக்கை இல்லாதவர்கள் எதைப் பற்றியும் தெளிவான கருத்து இல்லாதவர்கள். முடிவுகளை எல்லாம் பிறர் எடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள். எப்போதும் ஒதுங்கியே இருப்பார்கள்.



நாய் குரைப்பதைப்போல வார்த்தைகளை வெளிப்படுத்துகிறவர்கள் கடுமையான கட்டுப்பாட்டைப் பெரிதும் விரும்புகிறவர்கள். உறுதியாகச் செயல்படுவதுதான் இவருக்குப் பிடிக்கும். ஒரு அமைப்பைப் பின்பற்றினால் அதன் விதிகளை மீறாமல் நடந்து கொள்வார். எல்லாமே ஒழுங்காக அமைந்திருப்பதுதான் இவருக்குப் பிடிக்கும்.

சில பெண்கள் குழந்தைகளைப் போல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவார்கள். இவர்கள் எல்லோருடனும் அன்பு பாராட்டுகிறவர்கள். நடைமுறைகளைப் பற்றி அதிகமாகக் கவலைப்படாதவர்கள்; விசுவாசமாக இருப்பார்கள்: அளவுக்கு மீறிய அடக்கமோ, வெட்கமோ பார்க்கமாட்டார்கள். சோம்பேறிகளல்ல என்றாலும் நிறைய ஓய்வு நேரத்தை எடுத்துக்கொள்வார்கள்.

இன்னொருவர் பேசும்போதும் இடையிடையே குறுக்கிட்டுப் பேசுவது சிலர் வழக்கம். இத்தகையவர்கள் தம்மைப் பற்றியே பெரிதாக நினைத்துக் கொண்டு இருப்பவர்கள். தெளிவான சிந்தனை இல்லாத இவர்கள் பிறர் மீது தமது கருத்தைத் திணிக்க முற்படுவார்கள். அவைகள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அதற்காகக் கோபமடைவார்கள். பிடிவாதமும் நல்ல புத்தியும் கொண்டவர்கள். அவரிடம் சிறந்த கருத்துக்கள் இருந்தாலும் அவருடைய மனப்போக்கின் காரணமாக மற்றவர்களுடைய ஒத்துழைப்பு இவருக்குக் கிடைக்காது.

சலசலவென்று ஓயாமல் பேசுவது சிலர் வழக்கம். இவர்கள் உணர்வுக் கோளாறுக்கு உள்ளானவர்கள். இவர்களுடைய உடல் சுறுசுறுப்பாக இயங்கினாலும் உள்ளம் சோம்பிக் கிடக்கும். சில விஷயங்களைப் பற்றி ஓயாமல் பேசுவது இவருக்குப் பிடித்தமான ஒன்று. வேறு எதைப்பற்றிப்பேசும் போதும் பேச்சாக இந்தப் பக்கம் இழுத்துக்கொண்டு விடுவார்கள். தன்னையே பெரிதும் நேசிப்பார். பிறரிடம் பரிவு காட்டுவது போல் நடந்து கொள்வார். ஆனால் அது உண்மை அல்ல. பிறரைச் சம்மதிக்க வைத்து எப்படியோ தன்னுடைய அறிவாளித்தனத்தைச் சாதித்துக் கொண்டு விடுவார்.

மெதுவான குரலில் தெளிவில்லாமல் பேசுகிறவர்கள் கவனக்குறைவினர்கள்; அவசரக்காரர்கள். உணர்வுமிக்க இவர்கள் பலவிஷயங்களை இரகசியமாகப் பேணுவார்கள். பகல்கனவு காண்கின்றவர்கள். சாதுரியம் இல்லாத போதிலும் நாணயமானவர்கள். தனிமையை விரும்புகிற இவர்கள் பிறர் தொந்தரவு கொடுக்காமல் இருப்பதை விரும்புவார்கள்.

உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் இவர் பேசும்போது சத்தம்தான் வெளிவருமே தவிர வார்த்தைகள் தெளிவாக இராது. உதடுகள் வேகமாக அசைந்து படபடவென்று ஏதோ சப்தத்தை எழுப்பிக்கொண்டிருக்கும். நிலைகுலைய வைத்துவிடும். பிறர் தங்களை மதிக்கவேண்டும் அல்லது அஞ்சவேண்டும் என்று எண்ணுகின்ற இவர்கள், வெளியே காட்டிக்கொள்வது போல் உறுதியானவர்கள் அல்ல. நல்ல இயல்பு கொண்டவர்கள். ஆனால் அதை வெளியே காட்டிக்கொள்வதில்லை.

## இல்லத்தரசிகளுக்கு இதமான குறிப்புகள்



- ★ கண்களுக்கு மை அல்லது ஐலைனர் உபயோகிக்கும் பெண்கள் இரவு படுக்கப் போகும் முன் கண்டிப்பாகக் கண்களைக் கழுவிய பின்தான் தூங்க வேண்டும்.
- ★ இட்லிக்கு அரைத்த மாவு புளிக்கும் முன்னரே தோசை அல்லது இட்லி செய்ய நேரிட்டால் அதில் புளித்த தயிர் கலந்து செய்யலாம். மாவின் சுவை மாறாது.
- ★ சட்னி செய்யத் தேங்காய் இல்லையெனில் கவலை வேண்டாம். சிறிது பூண்டை எடுத்து, உரித்து நன்றாக அரைத்துக் கொண்டு சிறிது கடுகு போட்டுத் தாளித்து (நல்லெண்ணெய்) அதில் கொஞ்சம் மிளகாய்த்தூள் சேர்த்து உப்புடன் அரைத்த பூண்டையும் சேர்த்தால் 'பூண்டு- மிளகாய்ப் பொடி ரெடி'. இட்லி, தோசைக்குத் தொட்டுக்கொள்ள சுவையோ சுவை.
- ★ வாரம் ஒரு முறை சமையல் அறையில் உள்ள அடுக்குகளை நன்றாகத் துடைத்து புதுப் பேப்பர்களைப் போட்டு அதில் பாத்திரங்களை அடுக்கவும். உப்பு, சீனி போன்றவற்றை வைக்க ஒரே அளவுள்ள பிளாஸ்டிக் டப்பாக்கள் வாங்கி வைத்தால் அழகாக இருக்கும்.
- ★ வீட்டு வரவேற்பறை எல்லாரும் வரும் இடம். எனவே அது சுத்தமாக இருப்பது அவசியம். ஹோலில் பொருட்கள் சரியான இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தால் அழகாக இருக்கும்.
- ★ நாம் உபயோகப்படுத்தும் துணிகள் சில நேரம் தையல் விட்டுவிடும். அதை ஒரு நாள் எடுத்து எல்லாவற்றையும் தைத்து விட வேண்டும். வெளியே புறப்படும் நேரத்தில் ஊசி, நூல் தேடி அலைவது நல்லதல்ல.
- ★ நாம் உண்ணும் உணவின் அளவு முக்கியமல்ல; அதில் அடங்கியுள்ள சத்துக்களே முக்கியம். எனவே குறைந்த அளவே உணவு உண்டாலும் அதில் சத்துக்கள் அதிகமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.
- ★ வெயிலில் அலைந்துவிட்டு வந்த பிறகு ஐஸ் கட்டியைத் துணியில் வைத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டால் கண்கள் புத்துணர்ச்சி அடையும்.
- ★ லிப்ஸ்டிக் வெகுநேரம் அழியாமல் இருக்க மெலிதாக லிப்ஸ்டிக் போட்டுக்கொண்டு அதன் மேல் பவுடர் தடவி பின் மீண்டும் லிப்ஸ்டிக் போட்டால் அழியாமல் இருக்கும்.
- ★ காலில் போட்டிருக்கும் கொலுசுகளை மாதம் ஒரு முறையும், தோடுகள் போன்றவற்றை மாதம் இருமுறையும் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும்.
- ★ புருவம் அடர்த்தியாக வளர, இரவு படுக்கும் முன் சிறிது தேங்காய் எண்ணெய் தடவவும்.
- ★ கை நகங்களைப் பராமரிப்பது போலவே கால்நகங்களையும் பராமரிக்க வேண்டும். வாரம் ஒரு முறை சுடுநீரில் டெட்ரோல் கலந்து கால்களை அதில் வைத்துக் கழுவவும். நகத்தை வெட்டி நெயில் பொலிஷ் போட்டுச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும்.

## காலை உணவு கட்டாயம்



தினமும் முறையாகக் காலை உணவை உண்ணும் பெண்கள் அவற்றைத் தவிர்க்கும் பெண்களைவிட அதிக நாட்கள் உயிர் வாழ்வதாகத் தெரிவிக்கிறது கலிஃபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சி ஒன்று.

உடல் இளைக்கும் எண்ணத்தில் காலை உணவைத் தவிர்க்கும் பெண்கள், அதற்கடுத்த வேளை சாப்பாட்டின்போது, அவர்களை அறியாமல் அதிகம் உண்பதாகவும் தெரிகிறது.

மனச்சோர்வைத் தடுக்க 15 கிராம் புரதமும், உடல் ஆற்றலுக்கு கார்போஹைதரேட்டும், நார்ச்சத்தும் அடங்கிய உணவைத் தினமும் காலையில் உண்ண வேண்டியது அவசியமாகும்.

காலை உணவை உண்ண நேரமில்லாதவர்கள் இரண்டு கப் புளிப்பில்லாத சுத்தமான தயிர், ஒரு சிறிய கனிந்த வாழைப்பழம், ஒரு கப் அப்பிள் அல்லது தோடம்பழச்சாறு, இரண்டு தேக்கரண்டி பால்மாவு ஆகியவற்றை நன்றாகக் கலந்து, முதல்நாள் இரவே ஃபிரிட்ஜினுள் வைத்து அடுத்த நாள் குடிக்கலாம். என்கிறார் ஒரு ஆராய்ச்சியாளர்.

## லேடீஸ் ஸ்பெஷல்

## சமைப்போம் சுவைப்போம்

[தொகுத்துத் தருவது-சுகந்தினி]

### மிளகு ரசம்

தேவையானவை:

| | |
|---|---|
| மிளகுத்தூள்- | 1 தேக்கரண்டி |
| மஞ்சள் தூள்- | 1/2 தேக்கரண்டி |
| மல்லித்தூள்- | 1 தேக்கரண்டி |
| தேங்காய்ப்பூ- | 2 தேக்கரண்டி |
| சீரகம்- | 1/2 தேக்கரண்டி |
| கடுகு- | 1/2 தேக்கரண்டி |
| சின்ன வெங்காயம்-2 | |
| செத்தல் மிளகாய்-4 | |
| புளி- | சின்ன உருண்டை. |
| கறிவேப்பிலை- | கொஞ்சம். |
| உப்பு, எண்ணெய்- | அளவாக. |

செய்முறை:

தேங்காயையும் சீரகத்தையும் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ளவும். சிறிய வெங்காயத்தையும் அதனுடன் சேர்த்துத் தட்டிக் கொள்ளவும். பாத்திரத்தில் எண்ணெய் விட்டு, கொதித்ததும் கடுகைப் போடவும். கடுகு வெடித்ததும் மிளகாயைக் கிள்ளிப் போடவும். மிளகாய் சிவந்ததும், கறிவேப்பிலையைப் போடவும். அது வெடித்ததும் புளியைக் கரைத்து ஊற்றி மிளகுத்தூள், மல்லித்தூள், அரைத்த விழுது, மஞ்சள்தூள், உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும்.

நன்றாகக் கொதித்ததும் இறக்கிவிடவும். தாளிக்கும் போது மோர் மிளகாய் இருந்தால் போடலாம்.

## வயதும் மாற்றமும்

பெண்களின் சூற்பையில் 1000 அண்ட அணுக்கள் இருக்கின்றன. பெண்ணவள் பூப்படைந்தால், அண்ட வீழ்ச்சி அல்லது மாதவிடாய் சுமார் 30 ஆண்டுகள் வரை இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

குளிர்மிக்க மேற்கத்திய நாடுகளில் 18 வயதிற்குட்பட்ட பெண்களை விட 25 வயதுக்கு மேல்தான் பூப்பெய்துகின்றனர். வெப்ப நாடுகளில் 14 வயதுக்கு மேல் என்பதைவிட 14 வயதுக்குக் கீழ்தான் அதிகம் பூப்பெய்தும் வாய்ப்பு உள்ளது.

பெண்களுக்கு 13 வயதில் சூற்பைகள் மிகச்சாதாரணமாக முதிர்ச்சி அடைகின்றன. அப்போது பெண்களின் உடல் நிலையில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன.

தோற்றத்தில் காண்போரைக் கவரும் கவர்ச்சி ஏற்படுகிறது. இடுப்பு எலும்பு பின்புறம் அகன்று, பெரிதாக மாறும். திரட்சியான மார்புகள் கொண்டிருப்பார்கள். முகத்தில் சின்ன உரோம் உதிர்ந்து செழுமையை காண்பிக்கும். ஆண்களைக் கண்டதும் வெட்கப்படும் சுரப்பிகள் சுரக்கும். சில உறுப்புகளில் உரோமங்களின் வளர்ச்சி தென்படும்.

மனிதனின் வளர்ச்சி பரிமாணங்கள் வரையறுக்கப்பட்ட பரிணாமங்களாலேயே அமைகிறது.

## பெங்களூர்- அழகிப்போட்டி 'இந்தியப் புலிகள்' வெடிவீச்சு!

"தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படும்; தீக்குளிப்பு நடத்துவோம்." என்றெல்லாம் பெண்கள் அமைப்புக்கள் மிரட்டிக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் பெங்களூரில் நடக்கப் போகும் அழகிப் போட்டிக்குத்தான் இந்த மிரட்டல்கள்.

இந்தி திரையுலகின் சூப்பர் ஸ்டாரும், பிரபல தொழிலதிபருமான அமிதாப்பச்சனின் நிறுவனம்தான் உலக அழகிப் போட்டியைப் பெங்களூரில் நடத்தப்போகிறது.

நவம்பர் 23ம் திகதி அழகிப்போட்டியை அமர்க்களமாக நடத்தியே தீருவது என்று ஒற்றைக்காலில் நிற்கிறார் அமிதாப்பச்சன்.

"வெற்று மிரட்டல்களுக்கு பணியமாட்டேன்" என்று அமிதாப்பச்சன் சொல்லிக் கொண்டிருக்க, கடந்த முதலாம் திகதி ஒரு சம்பவம் நடந்துள்ளது. அழகிப் போட்டி நடைபெறவிருக்கும் கர்நாடக மாநில கிரிக்கெட் மைதானத்தில் படபடவென்று வெடி முழக்கம் கேட்டது.

சக்திவாய்ந்த வெடிகளைக் கொளுத்தி மைதானத்தின் உள்ளே போட்டுவிட்டனர். மைதானத்தில் இருந்த ஓர் அறையின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கி விட்டன.

"இது யாருடைய வேலை?" என்று பெங்களூர் பொலிசார் விசாரணை நடத்திக் கொண்டிருக்க, "நாங்கள்தான் பொறுப்பு" என்று ஒரு குழு உரிமை கோரியிருக்கிறது.

தம்மை 'இந்தியப் புலிகள்' என்று அக் குழுவினர் அறிமுகம் செய்துள்ளனர்.

இத்தனை பரபரப்புக்களாலும் உலக அழகிப் போட்டிக்கு பாதிப்பு ஏற்படுவதை விட அமோகமான விளம்பரம் கிடைத்திருக்கிறது.

அழகிப் போட்டிக்கான அனுமதிச் சீட்டுக்கள் மட்டும் ரூபாய் 2 ஆயிரம் முதல் 25 ஆயிரம் ரூபா வரையான கட்டணங்களில் விற்பனையாகின்றன. கிட்டத்தட்ட 18 ஆயிரம் பேர் போட்டியைக் கண்டுகளிக்கப்போகின்றனர். பெங்களூரில் 1500 ஹோட்டல் அறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



நூறு நாடுகளைச் சேர்ந்த அழகிகள் போட்டியில் தோன்றி அழகு காட்டப்போகின்றனர். இந்தியாவில் இருந்து ராணி ஜெயராஜ் என்னும் அழகி பங்குகொள்கிறார். ராணி ஜெயராஜ் தமிழ் பெண் அல்ல. கர்நாடகத்தைச்சேர்ந்தவர். ஆனால் நன்றாகத் தமிழ் பேசுவார். வயது 21. இந்திய அழகிப் போட்டியில் முதல் இடத்தைப் பிடித்தவர் ராணி ஜெயராஜ்.

பார்வையாளர்களுக்கு ஒரே ஒரு கவலை தான் மனதைக் குடைகிறதாம். நீச்சல் உடையில் அழகிகள் தோன்றும் காட்சியை மட்டும் பெங்களூரில் கண்ணாரக் காணமுடியாது. பெண்கள் அமைப்புக்களின் கண்டனத்தால் நீச்சல் உடை அணிவகுப்பு மட்டும் சீஷெல் தீவில் இடம்பெறுகிறது. அடுத்த போட்டிகளில் அதுவும் இங்கே நடத்தப் படும் என்ற ஆறுதலான செய்தியை அறிவித்து புண்ணியம் சேர்த்துள்ளார் அமிதாப்பச்சன்.

அழகிப் போட்டி மூலம் கிடைக்கும் லாபம் முழுக்க சமூக சேவை நிறுவனம் ஒன்றுக்குத் தரப்படப்போகிறது. இந்த நல்ல காரியத்தைக் கெடுக்கப் பார்க்கிறார்களே என்று அமிதாப்பச்சனின் நிறுவனம் கவலைப்பட்டுள்ளது.

பண்பாட்டைக் கெடுக்கும் செயல் என்று பெண்கள் அமைப்புக்கள் குரல் கொடுத்துள்ளன. ஆனால் இந்தியாவில் கல்லூரி மாணவிகள் மத்தியில் நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவு ஆச்சரியம் தருகிறது.

70வீதமான மாணவிகள் அழகிப் போட்டியை அமோகமாக ஆதரித்துள்ளனர். "அழகாக இருப்பது ஒரு கலைதான். இதனால் ஒன்றும் பண்பாடு பாழாய்ப் போய்விடாது." என்று ஆதரவாகப் பேசுகின்றனர் இளம் மாணவிகள்.

'மிஸ் வேர்ல்ட்' எனப்படும் அழகிப் போட்டி கடந்த 45 வருடங்களாக நடந்து வருகிறது. 1951ம் ஆண்டு இங்கிலாந்துக்காரரான மோர்லே என்பவர்தான் கலா ரசனையோடு இதனை ஆரம்பித்துவைத்தாராம்.

கடந்த 45 ஆண்டுகளில் மொத்தம் 750 கோடி ரூபாய்கள் திரட்டப்பட்டு சமூகசேவை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

பெங்களூரில் உலக அழகிப்போட்டியை நடத்துவதை பெண்கள் அமைப்புக்கள் சில கண்டிக்கின்றன. ஆனால் இந்தியாவில் சமீபகாலமாக ஆடை அலங்காரப் போட்டிகள், உள்ளூர் அழகிப்போட்டிகள் என்பவை நடந்துவருகின்றன. அப்படியிருக்க இதனை மட்டும் ஏன் கண்டிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள் போட்டியை நடத்துவோர்.

எதிர்ப்பு மேலும் அதிகமானால்கூட அழகிப்போட்டி நடந்தே தீரும். வேண்டுமானால் வேறு நகரத்தில் நடத்தலாம் என்று தீர்மானித்துள்ளனராம்.

எப்படியோ என்னதான் எதிர்ப்பு இருந்தாலும் அழகிகளைக் காண்பதற்கு ஆயிரம் ஆயிரமாய் கொட்டி ரிக்கெற் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அழகிப்போட்டி நிகழ்ச்சிகளை ஸ்டார் பிளஸ் தொலைக்காட்சி அலைவரிசையிலும் காண்பிக்கபோகிறார்கள்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AP

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-11-1996

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | சீனத் அரூஸா இஸ்மாயில் 10, தேசிய வீடமைப்புத் திட்டம், மாளிகாவத்தை, கொழும்பு-10. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


படிப்பகம்

www.padippakam.com

## ஆசைகளும்.... கனவுகளும்!

எந்த வானம்
சிவப்பு?
என் கிராமத்திற்கு
மேலாலுள்ளதா?
எரியும்
வைக்கோல் போரென
அர்த்தம்
தொனிக்கும்
தின நிகழ்வுகளா?
***
கற்பூரச்சட்டி
கொழுந்து
விடுவதாய்
தினம் தினம்
கேள்விப்படுவதெல்லாம்
வேதனை...!
***
சிறு கிராமம்.....
குதூகலமாய் இருந்தது;
அன்றைக் கெல்லாம்
ஒரு மகாவித்தியாலயம்,
ஒரு விவசாயக்கந்தோர்,
ஓர் ஆஸ்பத்திரி,
குறுக்காய் நெளியும்
கிறவல் பாதைகள்,
ஒரு குளமும்
அதன் உயர்ந்த கட்டுகளும்....
எல்லாம்
அணில் கொறித்துப்
போட்ட
மாம்பழம் போலவாய்
ஆனதே!
***
இப்பொழுது
நினைப்பதற்காவது
ஏதாவது
எஞ்சியிருந்தால்
புண்ணியம் தான்!
***
பஸ் நின்றதும்
ஓடிப் போய்
முறிகண்டியில்
கச்சான் சுடச்சுடத்
தின்றதும்,
கற்பூரம் கொளுத்தி
வான் நோக்கி
கை கூப்பியதும்..
எல்லாமே
நினைக்க மட்டும்....!
***
உலை வாய்
இரும்பாய்– தீப்பிழம்பாய்
எல்லாம் அழிந்து–
எல்லாம் அழிந்து
இனி எக்கணம்
சீர் வரும்?
***
எந்தக் கப்பல்
என்னைக் கொண்டுபோய்
அங்கு சேர்க்கும்?
மீண்டு மொரு முறை
என் தேசத்து
மண்ணை முத்தமிடுவதும்
ஆசையாய் வாழ்வதும்....?

மானுடபுத்ரன்

## காதல் மடி தேடு

யார் நீ...
துயர நெஞ்சை
துடைக்க வந்தவளா?
துயரத்துக்குள்
தூக்கி வைக்க வந்தவளா?

இருட்டு இதயங்களை
எப்படி உணர்வது?

வர நதிகளில்
காதல்
வரப்பிரசாதம் கேட்டு
சிட்டக் கூரையாய்..
சொட்டுகின்ற வேளையில்,
கார்காலத் தென்றலாய்
என்
சுவாசப்பையில்
நுழைந்து கொண்டாய்!

சிநேகிதி!
ஆறடி நிலம்
அவதானித்துக் கொண்டிருக்கிறது
நிர்வாணப்படுத்தும்
இகலோகம்
வறுமையில்
எம்மை
திசைதிருப்பிக் கொண்டும்
இருக்கிறது!

நீ...
யார்?

விழித்தெழும்போது
விரசம் கொண்டு
எனை நீ
எண்ணாதே!

சிநேகிதி!
அலைமோதும் நேசம்
எனக்கு
சொல்லித் தந்த பாடம்!

பிரவேச வேதனையை
சொல்லி யழ
ஒரு காதல் மடிதேடு!

சந்திப்பதற்கு
சந்தர்ப்பம் கிடைத்த போதும்
ஒன்றும் பேசாமல்
உறங்கிப் போனது
உள்ளம்!

ஏ.எல்.காலித்ன்–
பள்ளிக்குடியிருப்பு.

## புரியுமா..?

இந்த அமைதியை
குலைத்தது யார்?
நீயா?
**
எவ்வளவு அமைதியாக
சத்தமற்று இருந்தது–
எப்படி?
**
பாதுகாப்பிற்காய்
வீழ்ந்து படுக்கையில்
முதுகில்
வீழ்ந்து வெடித்த
குண்டின் ஓசையாலா?
**
இதயத்தின்
மையப் பகுதியில்
துளைத்து அதிர்ந்த
துப்பாக்கி குண்டின்
சத்தத்தாலா?
**
"இல்லை...!
இல்லவே இல்லை!"
**
எப்போது...?
**
அனாதைக் குழந்தை
ஷெல்லின் ஓலிகேட்டு
மெல்ல....
அழுதபோதா?
**
இல்லை...!
எழுந்து நின்று
கண்ணீரைத் துடைத்தபடி,
ஷெல் வந்த திசையை
நிமிர்ந்து
பார்க்கையில்...
அமைதி
கு லை
ந்தது!
**

சுபா வரன்–
கண்டி.

## தேன் கிண்ணம்

### ஏன் இருந்தும் எரிச்சலும்

இருட்டிற்குள் நின்று,
இருமிப் பார்ப்பவர்களுக்கு
வெளிச்சம் பிடிக்கப்போய்,
இருந்த வெளிச்சத்தையும்
தொலைத்திருக்க வேண்டியதில்லை!

●

சுருட்டிக் கொள்பவர்களுக்கு
ஒத்துழைக்க மறுத்து,
வெறுப்பை வாங்கியிருக்கத் தேவையில்லை!

●

நான் சம்பந்தப்படாமல் செய்த
ஒரே தப்பு–
நான் மனிதப் பிறவி எடுத்ததுதான்!
சின்னஞ்சிறு
சிட்டுக்குருவியாகவேனும் பிறந்திருந்தால்,
இந்த மனிதர்களின்
சிரசுகளின்மீது
எச்சமிட்டு எச்சமிட்டு,
கோபத்தைத் தணித்திருக்கலாம்!

●

அல்லது ஒரு
கட்டெறும்பாகவேனும்,
பிறந்திருந்தால்,
மிதிக்கும் பாதங்களை
கடித்துவிட்டு உயிர்விட்டிருக்கலாம்!

●

நான் சம்பந்தப்படாமல் செய்த
ஒரே தப்பு–
நான் மனிதப் பிறவி எடுத்ததுதான்!

சம்மாந்துறை–மஷூறா.

## செல்..., விழு..., வா!

இரத்தம் குடிக்க
நுளம்பிடமும்,
பிணம் தின்னக்
கழுகிடமுமா
கற்றுக்கொள்வது?
...
விஞ்ஞானம்
ஏறுவரிசையிலும்
'மனிதம்'
இறங்கு வரிசையிலுமா
இயங்குகிறது?
...
மிருகத்தனங்கள்
கற்பதற்காகவா
விண்கலப்
பரிசோதனைகள்?
...
பூலோகத்தையன்றிப்
புதை குழிகளையா
வெற்றி கொள்வது?
...
இரைப்பைகளில்
இறப்புக்கள்தானா
சமிபாடடைவது?
...
உன் வெறி,
ஆவேசம்,
திமிர்
அடங்கும் வரை
கொல்,...!
பின் செல்
இன்னும்
செல்...,(வாங்கிவர)!!
...

மாரிமுத்து யோகராஜன்–
அக்கரைப்பற்று–08

## பயங்கரவாதி



'நான்'
கறுப்புத்தோல்
தாய்க்குப் பிறந்ததால்
கறுப்பனாகவே இருந்தேன்!
*
'என்'
பள்ளி வாழ்க்கையில்
பல நூறு தடவை
முட்டுக்கால் வாசியானதால்
முழங்கால் காய்த்து விட்டது.
*
'நான்'
கண்ணையாவின்
கரும்புத்தோப்பில்
கரும்பு திருடியபோது
அதன் இலை கிழித்து
முகத்தில் வடு.
*
'என்'
பல்கலைக்கழக வாழ்வில்
பகிடி வதையாக
முழங்கையால் தவழ்ந்தபோது
முழங்கையில் பெரிய காயம்.
*
'நான்'
யாழ்ப்பாணத்திலிருந்து
அகதியாக வந்தபோது
ஆடையாக இருந்தது
ஒரு கறுப்பு சேர்ட்
*
இவ்வடையாளங்கள்
இன்று எனக்கு
சூட்டிய பட்டம்....
'பயங்கரவாதி'
*

கல்முனை–நிஷாத் ஷரீ.:.ப்.

## அந்த நாள் ஞாபகம்

நடனமாடத் தயார் நிலையில் உள்ள இந்த இளைஞரைத் தெரிகிறதா. நடனப்புயல் பிரபுதேவா தான். இப்போது பாருங்கள்; முகத்தில் கும்மென்று தசை போட்டு விட்டது.









➜ கலைஞரின் கையால் பரிசு வாங்கும் குட்டி இளைஞர் யார் தெரியுமா? இன்றைய சென்னை மேயர் ஸ்டாலின்தான். எதற்குப் பரிசு? தந்தை கலைஞர் போலவே கறுப்புக் கண்ணாடி அணிந்து நாடகத்தில் வேஷம் போட்டார் ஸ்டாலின். அதற்குத்தான் பரிசு கொடுக்கிறார் கலைஞர்.



↓ 'சிக்'கென்ற தோற்றத்துடன் நடுவில் சிரிப்பவர்தான் ஜெயலலிதா. அருகே நிற்பவர் ஜெயலலிதாவின் தாயார் சந்தியா. மற்றவர் இயக்குநர் ஸ்ரீதர். அந்த நாளில் அம்மு அழகுதான்.



## இந்த வாரம் உங்கள் பலன்

(10.11.96 தொடக்கம் 16.11.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன். |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி. (வக்கரகம்) |
| மீனம் | - கேது. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - வெள்ளி. இராகு. |

சந்திரன்- துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வீண் கலக்கம், மனமாற்றம். | பி.ப. 1 | மணி |
| திங்கள்- புதிய உயர்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், உறவினர் உதவி. | பி.ப. 3 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, காரியானுகூலம். | பகல் 12 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | பகல் 11 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. 2 | மணி |
| புதன்- வீண் முயற்சி, மனஸ்தாபம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | மு.ப. 10 | மணி |
| வெள்ளி- பொருள் சிறப்பு, வெளியிடப் பயணம். | பி.ப. 2 | மணி |
| சனி- பலவித பேறு, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தனலாபம், மறைமுக எதிர்ப்பு. | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், மனக் கலக்கம். | பகல் 12 | மணி |
| புதன்- புதிய முயற்சி, கவலை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 3 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பணக் கஷ்டம். | பகல் 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், காரியத்தடை. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பெரியோர் பகை. | பகல் 12 | மணி |
| வியாழன்- காரியசித்தி, துயர் நீங்கும். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. 3 | மணி |
| சனி- செலவு மிகுதி, மன மகிழ்ச்சி. | பி.ப. 4 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் இலாபம், உயர்ந்த நிலை. | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, மனக்குறை நீங்கும். | பகல் 12 | மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் சிறப்பு. | பி.ப. 3 | மணி |
| வியாழன்- இனசன விரோதம், வீண் கலக்கம். | பகல் 12 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- பலவித பேறு, முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பண வரவு. | பி.ப. 3 | மணி |
| புதன்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 4 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- முயற்சியில் தடை, பணக் கஷ்டம். | மு.ப. 10 | மணி |
| சனி- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பணச் செலவு. | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, பலவித பேறு. | மு.ப. 10 | மணி |
| புதன் - இனசன விரோதம், மனக் கலக்கம். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- பெரியோர் பகை, காரியக் கேடு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- தொழில் இலாபம், மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| சனி- புதிய முயற்சி, பண வரவு | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் பகை. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கஷ்டம். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பி.ப. 3 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| சனி- துயர் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 | மணி |
| திங்கள்- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 3 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, தொழில் உயர்ச்சி. | பகல் 12 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | மு.ப. 10 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 3 | மணி |
| புதன்- துன்பம் நீங்கும், தேகசுக நன்மை. | பகல் 12 | மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, தொழில் சிறப்பு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 3 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, பணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, காரியச் சிறப்பு. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. 1 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. 1 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, மனக் கஷ்டம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 4 | மணி |
| திங்கள்- பலவித பேறு, காரியானுகூலம். | பி.ப. 3 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, பணவரவு. | மு.ப. 10 | மணி |
| புதன்- பெரியோர் பகை, தொழில் விருத்தி. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, பயனுள்ள செயல். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 4 | மணி |
| சனி- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6


படிப்பகம்

www.padippakam.com





## இனிதே பிறந்தது தீபாவளி


தீபங்கள் எரிந்து ஒளிவிடவே
தீமைகள் எல்லாம் பறந்திடவே
திறமைகள் எங்கும் ஓங்கிடவே
திருநாள் பிறந்தது தீபாவளி!
***
புதிய ஆடைகள் புனைந்திடவே
புது மணம் எங்கும் பரப்பிடவே
புன்னகை எங்கும் பொங்கிடவே
புத்தொளியாய் பிறந்தது தீபாவளி!
***
வான வெடிகள் முழங்கிடவே
வாழ்வில் வசந்தம் மலர்ந்திடவே/
வளரும் கலைகள் துளிர்த்திடவே
வந்தே பிறந்தது தீபாவளி!
***
பட்சண வகைகள் புசித்திடவே
பலருக்கும் கொடுத்து பகிர்ந்திடவே
பக்கத்து நண்பர்கள் கூடிடவே
பகட்டாய்ப் பிறந்தது தீபாவளி!
***

மிருதுபாஷினி-பதுளை.

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்-அதில்
மானுடர் வேற்றுமை யில்லை;
எண்ணங்கள் செய்கை யெல்லாம்-இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

—சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை



# 'ஆ!', 'ஐயோ!'

ஓர் ஊரில் கார்த்திகேயன் என்ற பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனிடம் செல்வம் குவிந்து கிடந்தது. ஆனால் அவனுக்கு போதுமென்ற மனம் கிடையாது.

தன்னுடைய செல்வத்தைப் பெருக்குவதற்காக தனது வேலையாட்களை வருத்தி வேலை வாங்குவான். நிறைய வேலை வாங்கிக்கொண்டு குறைவாகவே சம்பளத்தைக் கொடுப்பான்.

ஒருநாள் பக்கத்து ஊரில் இருந்து பதினைந்து பேர் கார்த்திகேயனிடம் வேலை கேட்டு வந்தனர். அவன் வேலை தருவதாகக் கூறினான். ஆனால் சம்பளத்தை மாதமுடிவிலேயே தருவேன் என்று சொன்னான்.

அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். மாதம் முழுவதும் அவர்களைக் கொண்டு வேலை வாங்கிவிட்டு, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் இருக்க அவன் ஒரு தந்திரம் செய்தான்.

மாதக் கடைசி நாளன்று வேலையாட்கள் பதினைந்து பேரும் கார்த்திகேயனிடம் சம்பளம் வாங்குவதற்காக வந்தனர். அவர்களைப் பார்த்த கார்த்திகேயன்,

"என்ன இன்று சம்பளம் வாங்குவதற்காக வந்திருக்கிறீர்களோ?" என்று கேட்டான்.

"ஆம் ஐயா" என்றனர் வேலையாட்கள்.

"இவ்வளவு நாளும் நான் சொன்ன எல்லா வேலைகளையும் மறுக்காமல் செய்தீர்கள். அதே போல் இன்று நான் சொல்லும் இந்த வேலையையும் செய்தால்தான் உங்களுக்குச் சம்பளம் தருவேன்," என்றான் கார்த்திகேயன்.

"என்ன வேலை ஐயா?" என்று கேட்டார்கள் வேலையாட்கள்.

"பெரிய வேலை ஒன்றுமில்லை... கடைக்குப் போய் நான் சொல்லும் ஒரு பொருளை வாங்கி வரவேண்டும்; அவ்வளவுதான்," என்று அவர்களிடம் ஒவ்வொரு சிறிய பைகளைக் கொடுத்தான்.

"என்ன பொருள் வாங்க வேண்டும்?" என்று ஆவலாகக் கேட்டார்கள்.

"கடைக்குப் போய் 'ஆ!', 'ஐயோ!' வாங்கி வாருங்கள்," என்றான்.

வேலையாட்கள் ஏழைகள் என்றபடியால் 'ஆ!', 'ஐயோ!' என்ற பொருட்கள் தாங்கள் அறிந்திராத பொருட்கள் என்று எண்ணிக்கொண்டு கடைக்குப் போனார்கள். எல்லா இடமும் அலைந்து விட்டு வெறுங்கையுடன் திரும்பி வந்தார்கள்.

"முதலாளி 'ஆ','ஐயோ!' ஒரு கடையிலும் கிடைக்கவில்லை," என்றார்கள்.

அவர்களிடமிருந்து பைகளையும், காசையும் பறித்துக் கொண்டு,

"'ஆ', 'ஐயோ!' வாங்கி வந்தால்தான் உங்களுக்குச் சம்பளம் தருவேன்" என்று கூறி அனுப்பிவிட்டான் கார்த்திகேயன்.

பக்கத்து ஊரிலிருந்து வந்த வேலையாட்கள் தம் ஊருக்குச் சென்று தமது நண்பர்களிடம் தமக்கு நடந்த அநியாயத்தைக் கூறினார்கள். இதைக் கேட்ட அவர்களின் நண்பர்களில் ஒருவனான முத்து என்பவன்,

"எல்லோரும் என்னுடன் வாருங்கள், நான் உங்களுடைய சம்பளத்தை அந்தக் கார்த்தியேயனிடமிருந்து வாங்கித் தருகிறேன்," என்று அவர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

புறப்படும்போது பை ஒன்றை எடுத்து ஒரு தேளை அதற்குள் விட்டு பையை மூடிக்கொண்டான்.

முத்துவும் வேலையாட்களும், கார்த்திகேயனின் வீட்டிற்கு வந்தார்கள். முத்து, கார்த்திகேயனிடம் சென்று,

"ஐயா, நான் எனது நண்பர்கள் சார்பாக நீங்கள் சொன்ன 'ஆ!', 'ஐயோ!' ஆகிய பொருட்களை வாங்கி வந்துள்ளேன். நீங்கள் இப்போது அவர்களுக்குச் சம்பளத்தைக் கொடுப்பீர்களா?" என்று கேட்டான்.

"நான் வாங்கி வரச்சொன்ன 'ஆ!', 'ஐயோ!' இருந்தால் அவர்களுடைய சம்பளத்தை இப்போதே கொடுக்கிறேன்!" என்றான் ஏளனமாக.

உடனே முத்துவும் "இதற்குள் இருக்கிறது கையை விட்டுப் பாருங்கள்," என்று அந்தப் பையை நீட்டினான்.

கார்த்திகேயன் கையைப், பையில் விட்டுப் பார்த்தபோது, அதற்குள் இருந்த தேள் கடித்தது. உடனே கார்த்திகேயன்,

"ஆ!, ஐயோ!" என்று சத்தமிட்டான்.

"பையில் 'ஆ!', 'ஐயோ!' இருக்கிறதல்லவா? இப்போது இவர்களின் சம்பளத்தைக் கொடுங்கள்" என்றான் முத்து. கார்த்திகேயனும் வேறு வழியில்லாமல் அவர்களின் சம்பளத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தான்.

தமது நண்பன் முத்துவின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டிய வேலையாட்கள் அவனுக்கு நன்றி தெரிவித்தார்கள். ●

## வாரம் ஒரு நாடு

### சிரியா



தலைநகர் – டமஸ்கஸ்
பரப்பு – 1,85,180 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை – 1.47 கோடி
மொழி – அரபி, குர்திஷ், அர்மீனியன்
எழுத்தறிவு – 65%
சமயம் – இஸ்லாம்
நாணயம் – சிரியன் பவுன்ஸ்
தனிநபர் வருமானம் – 1160 டொலர்.

**அமைவிடம்:**

மத்தியகிழக்கில் துருக்கி, ஈராக், ஜோர்டான், பாலஸ்தீனம், லெபனான் ஆகிய நாடுகளுக்கு நடுவே சிரியா அமைந்துள்ளது. இதற்கு மேற்கே மத்திய தரைக்கடல் அமைந்துள்ளது. ஆரன்டெஸ், யூப்பிரட்டீஸ் ஆறுகள் சிரியாவின் வழியே பாய்கின்றன.

**வரலாறு:**

முந்தைய துருக்கியின் சில பகுதிகளையும் இணைத்து 1920ல் சிரியா உருவாக்கப்பட்டது. ஃபிரான்ஸ்–லீக் ஒவ் நேஷன்ஸ் ஒப்பந்தப்படி ஃபிரான்ஸ் இதை ஆட்சி செய்தது. 1941ல் ஃபிரான்ஸ் இதைக்குடியரசாக அறிவித்தது. 1944ல் சுதந்திரமடைந்தது. 1958ல் எகிப்துடன் சேர்ந்து ஒன்றுபட்ட அரபுக் குடியரசு உருவாக்கப்பட்டது. 1961ல் மீண்டும் சுதந்திரம் பெற்றது.

**பொருளாதாரம்:**

விவசாயம், கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில். கோதுமை, பருத்தி, ஒலிவ் எண்ணெய் முக்கிய விளைபொருட்கள். மிகுந்த எண்ணெய் வளம் கொண்ட நாடு.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.11.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 166
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 164

பரிசுக்குரியவர்:
லஸாந் வித்தியாதரன்,
திரித்துவக் கல்லூரி, கண்டி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| இஹ்தியாஸ் எம். ஆதிப், பாத்திமா மகளிர் மத்திய ம.வித்., புத்தளம். | எஸ். ஜெறோம், புனித. மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| செல்வி எஸ். எம். சியாதா, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்,பதுளை. | பி. தனுசியா கோட்டைமுனை கனிஷ்ட வித்., மட்டக்களப்பு. |
| ஜி. ஷம்ரீன் அஸன், சென் ஜோசப் மகளிர் கல்லூரி, கொழும்பு. | செல்வன் இப்திகார் இஸ்மாயில், மடவளை பஸார், மடவளை. |
| சிவநேசராசா-வியூகரன், மட்/சிவானந்த வித்தியாலயம்,கல்லடி, உப்போடை. | எம். முஸ்பிக், சாஹிரா தேசிய பாடசாலை, புத்தளம். |
| செல்வி பி. ஜெயமதி, இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-06. | ஹாஷினி நாகேந்திரன், பாக்கியா மகா வித்தியாலயம், மாத்தளை. |

## சிலந்திகள்

♦ **எல்லாச் சிலந்திகளும் வலை பின்னித்தான் இரைகளைப் பிடிக்கின்றனவா?**

இல்லை. ஒநாய்ச் சிலந்தி போன்ற ஒரு வகைச் சிலந்திகள் இரையின்மீது பிசுபிசுப்பான எச்சிலைத் துப்பி, அதில் இரை மாட்டிக்கொண்டதும் அதை விழுங்கிவிடும்.

♦ **எல்லாச் சிலந்திகளும் விஷம் உடையனவா?**



ஆமாம். சிலந்திகள், பிடிக்கும் இரையில் தன் விஷத்தைச் செலுத்தி அதைத் தப்பமுடியாமல் முடங்கச் செய்து பின் விழுங்கும்.

♦ **மனிதர்களையும் அந்த விஷம் தாக்குமா?**

பெரும்பாலான சிலந்திகளின் விஷம் மனிதர்களை ஒன்றும் செய்யாது. ஆனால் கறுப்பு விதவை போன்ற சிலவகைச் சிலந்திகள் மட்டும் மனிதர்களைக் கொல்லும் அளவு விஷமுடையவை.

♦ **சிலந்திகளால் நாம் அடையும் பயன் என்ன?**

சிறு சிறு பூச்சிகளைச் சிலந்திகள் தின்னும். அதனால் மனித இனத்திற்கு பூச்சிகளின் தொல்லைகள் குறையும்.

♦ **சிலந்திகளை உண்ணலாமா?**

நியூகினியா தீவில் வாழும் பெரிய இராட்சத சிலந்திகளை, அத்தீவில் வாழும் பழங்குடி இன மக்கள் வறுத்து உண்பார்கள். அதன் பெயர்-நெபிலா மேஸ் குலேடா.

## டூகான்



மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் டூகான் என்ற பறவை உள்ளது. இதில் 40 இனங்கள் உள்ளன. இதன் உருவத்தைவிடப் பெரிதாக அலகுகள் அமையப்பெற்றிருப்பதால் விலங்கியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. மிகப்பெரிய, பலமான, அழகான வண்ணமான– ஆனால் லேசான இதன் அலகுகளுக்கிடையில் இடைவெளி மிகச் சிறியதாகக் காணப்படுகிறது.

வெறும் பழங்களை மட்டும் உணவாகக் கொள்ளும் டூகான் பறவைக்கு இவ்வளவு பெரிய பலவண்ண அலகு எதற்குப் பயன்படுகிறது என்பது அறிவியலாளர்களுக்குப் புதிராக உள்ளதாம்.

## சேர் ஐசக் நியூட்டன்

உலகின் தலை சிறந்த விஞ்ஞானிகளுள் ஒருவர் சேர் ஐசக் நியூட்டன். இவர் கணிதத்திலும், வானவியலிலும் அறிஞர். இங்கிலாந்தைச் சேர்ந்த இவரது ஆராய்ச்சிகளும், கண்டுபிடிப்புக்களும் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பேருதவியாக உள்ளன.

மரத்திலிருந்து அப்பிள் பழம் கீழே விழுந்ததைக் கண்டு, 'அது ஏன் கீழ்நோக்கி விழவேண்டும்?' என்று நியூட்டன் சிந்தித்தார். இதன் காரணமாக புவியீர்ப்பு பற்றிய உண்மைகளைக் கண்டறிந்தார்.

நட்சத்திரங்கள், சூரியன், கிரகங்கள் இவற்றின் இயக்கங்களையும், இவற்றிடையே உள்ள விசைகளையும் இவர் விரிவாக ஆராய்ந்து ஈர்ப்புக்கள் பற்றிய சில முக்கியமான விதிகளை வகுத்தார். இயக்கவியல், நிலையியல் என்னும் பௌதீகப் பிரிவுகள் தோன்றுவதற்கு இவரின் ஆராய்ச்சிகளே காரணம்.

பொருட்களின் இயக்கத்தைப்பற்றி நியூட்டன் ஆராய்ச்சி செய்து மூன்று விதிகளை வகுத்தார். இவை 'நியூட்டனின் இயக்க விதிகள்' என்று கூறப்படுகின்றன.

வெண்மை நிறமுள்ள ஒளி உண்மையில் சிவப்பு, செம்மஞ்சள், பச்சை, மஞ்சள், நீலம், ஊதா, வெள்ளை ஆகிய நிறங்களின் கலவையாகும் என்று கண்டறிந்தவரும் இவரே.

வெகுதொலையில் இருக்கும் பொருட்களை மிக அருகில் காட்டும் தொலைநோக்கிகள் பலவகை உண்டு. இவற்றில் 'பிதிபலிக்கும் தொலைநோக்கி' (REFLECTING TELESCOPE) என்னும் ஒரு வகைத் தொலைநோக்கியை முதன்முதலில் அமைத்தவர் நியூட்டன்.



பாடசாலையில் படிக்கும்போதே நியூட்டன் பலவிதமான எந்திர சாதனங்களை உருவாக்குவதில் அதிக ஆர்வம் காட்டினார். பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது கணிதத்தில் இவருடைய திறமை நன்கு வெளிப்பட்டது. பட்டம் பெற்ற நான்கு ஆண்டுகளிலேயே நியூட்டன் கணிதத்துறையில் பேராசிரியர் ஆனார்.

1672ம் ஆண்டு ரோயல் கழகத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1704ல் நிறங்களைப் பற்றியும், ஒளியைப் பற்றியும் ஆராய்ந்து ஒரு நூலினை வெளியிட்டார். இதற்கு அடுத்த ஆண்டு இவருக்கு 'சேர்' பட்டம் வழங்கப்பட்டது.

விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே தம் காலத்தைக் கழித்த நியூட்டன் திருமணம் செய்து கொள்ளவில்லை. ●

## சிறுத்தையின் வேகம்



மிகவேகமாக ஓடும் விலங்கு சிறுத்தை என்பது எல்லாருக்கும் தெரியும். அது மணிக்கு எவ்வளவு வேகத்தில் செல்கிறது தெரியுமா? மணிக்கு 112 கிலோமீட்டர் வேகம்.


படிப்பகம்

www.padippakam.com

# மறுபடி தா!

09

**இதுவரை** மதன்—கீதா காதலர்கள். கடற்கரையில் சந்திக்கின்றனர். அதே நாளில் கடற்கரையில் மரியகீதா என்னும் பெண் கொலை செய்யப்பட்டு பிணமாகக் கிடக்கிறாள். கொலைப்பழி மதன் மீது விழுகிறது.

காதலி கீதா சாட்சி சொன்னால் மதன் விடுதலையாகிவிடலாம். கீதாவோ தந்தைக்குப் பயந்து காதலை மறைக்கிறாள்.

சட்டத்தரணியின் திறமையால் மதன் விடுதலையாகிறான். அதே கடற்கரையில் காதலி கீதாவை அழைத்து கொலைசெய்கிறான். பொலிஸில் சரணடைகிறான்.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. சட்டத்தரணியின் புத்திசாலித்தனமான வாதங்கள் மூலமாக மதன் விடுதலையாகிறான்.

மதனுக்கு மனச்சாட்சி உறுத்துகிறது. காதலி கீதா கொலைக்கு மரியகீதாவின் கொலைதான் மூலகாரணம். அந்தக் கொலைகாரனைக் கண்டுபிடித்தால் மட்டுமே மன நிம்மதி கிடைக்கும் எனக்கூறும் மதன் துப்பறியும் நிறுவனம் ஒன்றின் உதவியை நாடுகிறான். தனியார் துப்பறியும் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள்— பரத்—சுசிலா— அவர்கள் இருவரும் மரியகீதாவைக் கொலைசெய்தது யார் என்பதை கண்டுபிடிக்க விசாரணைகளில் குதிக்கின்றனர்.

**இனி....**

**மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**



"முப்பிறவியா?"

"ஆமாம். ரெண்டு தடவை கோர்ட்ல மரண தண்டனையிலேர்ந்து தப்பிச்ச ஆளாச்சே. சொல்லுங்க. என்ன டெவலப்மெண்ட்?"

"......................................... அதனால, ராஜசேகரை சந்தேகப்படறேன்."

"பரவால்லையே....ரொம்பத்தான் வொர்க் பண்ணியிருக்கிங்க. வர்றிங்களா, இப்பவே எல்லோருமா நேரா போகலாம். ஒரு தடாலடி காரியம் பண்ணலாம். சமயத்திலே பலன் தர்றதுண்டு. வாங்க, ஜீப்புலயே போய்டலாம்."

"வீட்ல, யாருங்க, கொஞ்சம் கதவைத்திறக்கறிங்களா?"

"என்ன வேணும்? சார், நீங்களா? என்ன இத்தனை பேர் வந்திருக்கிங்க. வாங்க, உள்ளே வாங்க."

"ராஜசேகர் இருக்காரா?"

"குளிச்சிட்டிருக்கார். உக்காருங்க. மறுபடி விசாரணையா?"

"இதான் கடைசி விசாரணை. வாங்க. மிஸ்டர் ராஜசேகர். அவசர மில்லை. போய் சட்டை போட்டுக்கிட்டே வாங்க."

"என்ன சார் விஷயம்?"

"ராஜசேகர் வந்துடட்டுமே...."

"என்ன இன்ஸ்பெக்டர்?"

"உக்காருங்க ராஜசேகர். ஒண்ணு மில்லை உங்களை அரெஸ்ட் பண்ணி அழைச்சுட்டுப் போகலாம்னு வந்தோம்."

"என்னது, அரெஸ்ட்டா? எதுக்கு?"

"பெரிசா ஒண்ணுமில்லை. மரிய கீதாவை கொலை செஞ்சதுக்கு."

"இன்ஸ்பெக்டர், எதுக்காக என் புருஷன் மேல இப்படி அபாண்டமா பழி சுமத்தறிங்க? இவர் ஏன் கொலை செய்யணும்?"

"அவரை கேளுங்க மேடம். முதல்ல மாம்பலத்திலே, பரோடா தெருவில ஒரு மாடி போர்ஷனை வாடகைக்கு எடுத்தது எதுக்குன்னு கேளுங்க. அப்புறம்.... ஒவ் வொண்ணா கேளுங்க."

"என்ன சொல்றிங்க சார்?"

"இப்ப பதில் சொல்வார் பாருங்க. சொல்லுங்க ராஜசேகர், மாம்பலத்திலே வீடு பிடிச்சது எதுக்கு? சீக்கிரம். எங்களுக்கு நேரமாகுது."

"அது....அது.....வந்து...."

"இனிமே நீங்க எதையும் மறைக்கப் பார்க்கிறதிலே அர்த்தமில்லை. எல்லாத் துக்கும் சாட்சி இருக்கு. ஆதாரமும் இருக்கு."

"இன்ஸ்பெக்டர், ஆனா சத்தியமா நான் கொலை செய்யலை."

"அப்படியா? சரி, வேற என்னென்ன செஞ்சிங்க?"

"அது....அது..."

"உங்க வைஃப்பை வேணும்னா காதை மூடிக்கச் சொல்லலாமா? சொல்லுங்க ராஜசேகர். எங்க மரியாதை இறங்கறதுக்கு முன்னாடி சொல்லிடுங்க."

"ரோஸி, என்னை மன்னிச்சிடு."

"என்னங்க இது, அவங்க என்னமோ சொல்றாங்க. நீங்க என்னமோ சொல் றிங்க. எதுக்காக மன்னிக்கணும்? எனக்கு எதுவும் புரியலையே....."

"அவங்களுக்குப் புரியற மாதிரி சொல் லுங்க ராஜசேகர்."

"வந்து...... மரியகீதாவும் நானும் ரோஸிக்கு துரோகம் செஞ்சிட்டோம்."

"ராஜ்! என்ன சொல்றிங்க?"

"ரோஸி, ப்ளீஸ்.... என்னை மன்னிச் சிடு. ஏதோ சபலம். நான் தடுமாற முக்கால்வாசி காரணம் மரியகீதாதான். லேசான சில்மிஷத்திலே ஆரம்பிச்சது. ரொம்ப தீவிரமாய்டுச்சி. தப்பு பண்றதுக்காகவே மாம்பலத்திலே வீடு பிடிச்சேன். ரகசியமாக சந்திச்சுக்கிட்டோம்."

"அப்புறம்....? மேலே சொல்லுங்க."

"மரியகீதா கர்ப்பமானா. கலைச்சிட றேன்னு சொன்னா."

"ஆனாலும் நீங்க அவளை தீர்த்துக் கட்டத் தீர்மானிச்சிங்க."

"அய்யோ இன்ஸ்பெக்டர்! ஜீஸஸ் மேல ஆணையிட்டு சொல்றேன். அப்படி நான் நினைக்கலை. செய்யலை. நாங்க ரெண்டு பேரும் தப்பு செஞ்சது உண்மை. ஆனா, இந்த கொலைக்கும் எனக்கும் சம்மந்தமே இல்லை."

"பார்த்திங்களா, மக்கர் பண்றிங்களே.... இதுவரைக்கும் ஒழுங்கா சொன்னமாதிரி அதையும் சொல்லிடுங்களேன்."

"உண்மையிலே நான் அப்போ கும்ப கோணத்திலேதான் இருந்தேன். தந்தி வந்தது. அதப் பார்த்துட்டு ஷாக் ஆய்ட்டேன். கும்ப கோணத்திலே நீங்க விசாரிச்சுப் பாருங்க."

"பார்த்தாச்சு. நீங்க திறமையா அலிபி செட்டப் பண்ணியிருக்கிறதையும் கண்டு பிடிச்சாச்சு. கொலை செஞ்ச விவரத்தை மட்டும் லாக்கப்ல சகல மரியாதைகளோட சொல்றிங்க. அப்படித்தானே....? வாங்க, போலாம்."

"ஒரு நிமிஷம் இன்ஸ்பெக்டர்."

"என்ன மதன்...?"

"ராஜசேகர் கிட்டே நான் ஒரே ஒரு வார்த்தை பேசிடறேன்."

"பேசுங்களேன்."

"டேய்! பாவி! நீ செஞ்ச கொலைதாண்டா எல்லாத்துக்கும் ஆரம்பம். உன்னால தான் நான் என்னோட காதலியையே இழந்தேன். உன்னை சும்மா விடமாட்டேன். உன்னை....."

"மதன்....என்ன இது...கத்தியை கீழே போடுங்க முதல்ல.... அவரை விடுங்க!"

"முடியாது இன்ஸ்பெக்டர். சட்டத்திலே உள்ள ஓட்டையிலே இவன் தப்பிச்சுடுவான். இவனைக் குத்திக் கொண்ணாதான் என் மனசு சமாதானமாகும். யாரும் கிட்டே வராதிங்க. குத்திட்டு ஓடமாட்டேன். ஏற்கனவே நீதி தேவதை கிட்டே தண்டனையை தான்னு கேட்டவன்தான். இப்ப மறுபடி தான்னு கேக்க தயாரா இருக்கேன். உங்க இத்தனை பேரையும் சாட்சியா வச்சிக்கிட்டுத் தான் இந்த கொலையை செய்யப்போறேன். தண்டனைக்கு தயாரா இருக்கேன்."

"நோ. நோ. மதன், சொல்றதை கேளுங்க.... பரத், சொல்லுங்க."

"மதன், இதென்ன கிறுக்குத்தனம்? சட்டப் படி தண்டனை அடையட்டும். விடுங்க!"

"அய்யோ! நான் இந்த கொலையை செய்யலை இன்ஸ்பெக்டர்."

"தம்பி மதன், என் புருஷனை குத்தற துக்கு முன்னாடி ஒரு நிமிஷம் நான் சொல்றதைக்கேளு. உனக்கு என் புருஷ னைக் குத்தணும்னு ஆசையா, இல்லை, மரியகீதாவை கொலை செஞ்சவங்களைக் குத்துணும்னு அசையா?"

"கொலைகாரனைத்தான் குத்தணும். இவன்தான்."

"இல்லைப்பா. அவரை விட்டுடு.... வா. என்னை வந்து கொலை பண்ணு. என் தங்கையை நான்தான் கொலை செஞ்சேன்."

"என்னது?"

"ரோஸ்லின், நீ என்னசொல்றே?"

"ஆமாம் எல்லாத்தையும் ஒப்புக்கறேன். என் தங்கையும், இவரும் இங்கே வீட்ல லேசு பாசா தொட்டு விளையாடிக்கிறதை ஒருநாள் நான் பார்த்துட்டேன். டூர் போனதா சொன்ன தினத்துக்கு மறுநாள், உங்க புருஷனை பாரிஸ் கார்னர்ல பார்த்தேனே... மாம்பலத்திலே பார்த்தனேன்னு சில பேர் சொல்லுவாங்க. எனக்கு சந்தேகமாச்சு. மரியகீதாவும் அந்த தினங்கள்ல ராத்திரி முழுக்க வீடு திரும்பமாட்டா. என்னமோ தப்பு நடக்குதுன்னு புரிஞ்சிபோச்சு. ஒரு தடவை அவர் டூர் போறேன்னு புறப்பட்டு போனதும், இவளும் வெளில போறேன்னு கிளம்பினா. மரியகீதாவுக்குத் தெரியாம அவளை ஃபாலோ செஞ்சேன். மாம்பலத் திலே நீங்க சொன்ன வீட்ல ரெண்டு பேரும் நுழைஞ்சாங்க. கிட்டேபோய் ஒட்டுக் கேட்டேன். தான் கர்ப்பம் ஆனதை சொன்னா. ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கச் சொன்னா. இவர் மழுப்பினார். கலைச்சிடச் சொன்னார். என் மனசு கொதிச்சது. யோசிச் சுப் பார்த்ததிலே தப்புபூரா மரியகீதா மேலேன்னு புரிஞ்சுது. இவரை மடக்கிப் போட்டது அவதான். அடைக்கலம் கொடுத்த அக்காவுக்கே சக்களத்தியா வரத் துடிக் கிறாளேன்னு மனசு ஆத்திரப்பட்டுச்சி. வீட்டைவிட்டு வெளியே போகச் சொல்றது, மறுத்தா தீர்த்துடறதுன்னு வேகம் வந்திச்சி. இவர் கும்பகோணம் போயிருந்தப்போ, உன்கிட்டே மனம் விட்டுப் பேசணும், வான்னு அஷ்டலக்ஷ்மி கோவில் அழைச் சுட்டுப் போனேன். கடற்கரையிலே உட் கார்ந்து பேசினோம். எனக்கு எல்லாம் தெரியும்னேன். திடுக்கிட்டா. அப்புறம் சமாளிச்சுக்கிட்டு ரெண்டு பேரும் அத்தான் கூட வாழலாம்னு சொன்னா. நான் முடியா துன்னேன். அவளை வீட்டை விட்டுப் போய்டுன்னேன். அத்தானை சொல்லச் சொல்லு, போய்டறேன்னா, ஆத்திரம் தாங் கலை எனக்கு. எடுத்துட்டுப் போன கத்தியால வெறித்தனமா குத்திட்டு. ஆட்டோ பிடிச்சி வீட்டுக்கு வந்துட்டேன். இதான் உண்மை. என் புருஷன் எனக்கு துரோகம் பண்ணி னார். ஆனாலும் அவரை நான் நேசிக்கிறேன். செய்யாத கொலைக்கு அவர் பலியாகறதை நான்விரும்பலை. வாப்பா மதன். வந்து என்னை கொலை செய்!"

"இல்லைங்க. என்னை மன்னிச் சுடுங்க. இன்ஸ்பெக்டர், நான் உணர்ச்சி வசப்பட்டுட்டேன். எந்த பெண்ணும் புருஷனை பங்கு போட விரும்பமாட்டாங்க. அவங்க செஞ்சது எனக்கு நியாயமா படுது. இப்பகூட இவங்க உண்மையை சொல்லாம மௌனமா இருந்து தனக்குத் துரோகம் செஞ்ச புருஷனை பழிவாங்கி யிருக்கலாம். செய்யலை. ஷி ஈஸ் எ நோபிள் லேடி."

"நீங்க ரெண்டு பேருமே என்கூட வரணும். ஸ்டேட்மெண்ட்ஸ் தரணும். பரத், நீங்க....."

"நீங்க ஜீப்புல போங்க சார். நான் சுசி, மதன் ஆட்டோல போய்க்கிறோம். வாங்க மதன், போலாம், கொஞ்சம் விட்டிருந்தா ராஜசேகரை முட்டைக்கோஸ் மாதிரி வெட்டிப் பீஸ் பீஸ் ஆக்கியிருப் பீங்களே.... தயாரா கத்தி!"

"என் மனசிலே அந்த அளவுக்கு பாரம்ங்க பரத்."

"இப்ப எறங்கிடுச்சா?"

"ஓரளவு!"

"மிஸ்டர் மதன், என்னடா வயசில சின்னவ நமக்கு அட்வைஸ் பண்றா ளேன்னு நினைக்காதிங்க. முதல் காரியமா தாடியை எடுத்துடுங்க. அப்புறம்.... முள்ளை முள்ளாலதான் எடுக்கணும். காதல்ல ரணப்பட்ட மனசை காதலால தான் தேற்றணும். லவ் எகைய்ன். பஸ் ஸ்டாப், பீச்னு போனா ஒரு தினத்துக்கு நாலு பேரை ஷிப்ட் போட்டு காதல் செய்யலாம். தட்ஸ் சிம்பிள். அப்படி யாரும் அமையலைன்னா சொல்லுங்க..... பரத் கிட்டே பர்மிஷன், கேட்டுட்டு...."

"சுசி! உனக்கு நேரங்காலமே கிடை யாதா? ஷட் அப்!"

**(முற்றும்)**


அடுத்த முரசில்

உங்களைத் திகைக்க வைக்க வருகிறாள்

அனிதா இளம் மனைவி

நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன்


சுஜாதாவின் அசத்தல் தொடர்

இனிமை- இளமை- புதுமை


முதல் வாரமே ஜெட்வேகம்




## பேனா நண்பர் அரங்கம்





பெயர்: எம். பீர்தெளஸ்.
வயது: 19
முகவரி: 412, மல்கம, மல்வானை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். பாலகிருஷ்ணன்.
வயது: 21
முகவரி: 107, ஆமர் வீதி, கொழும்பு-12.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: எஸ். முஜாகிர்.
வயது: 21
முகவரி: 132, பிரதான வீதி, கல்பிட்டி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனா நட்பு.

பெயர்: எஸ். தயாளன்.
வயது: 22
முகவரி: SCHRAVELEN-14, 47626-KEVELER, GERMANY.
பொழுதுபோக்கு: ரீ.வி., புத்தகம்.

பெயர்: எஸ். பத்மநாதன்.
வயது: 26
முகவரி: 17, தவசிக்குளம், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். நிஸாம்.
வயது: 25
முகவரி: 337/1, பெலிகம்மன, மாவனல்லை.
பொழுது போக்கு: வானொலி, பத்தரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: ஜனுதீன் முகமட்.
வயது: 22
முகவரி: P.O.BOX-50153, UMM SAID, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எல். ரிபாத்.
வயது: 18
முகவரி: 24/1, ரினோகா மன்ஸில், எஸ்.கே. லேன், காத்தான்குடி-6.
பொழுதுபோக்கு: ரீ.வி., ரேடியோ.

பெயர்: எஸ். சிகிபாலன்.
வயது: 33
முகவரி: P.O.BOX-666, POSTAL CODE-111., MUSCAT, SULTANAE OF OMAN.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி. .

பெயர்: எஸ். தியாகராஜன்.
வயது: 17
முகவரி: 10, ஒழுங்கு இல 5, 5ம் குறுக்குத் தெரு, புத்தளம்.
பொழுது போக்கு: புத்தகம், ஓவியம் வரைதல்.

பெயர்: ரி. நிரோஷன்.
வயது: 18
முகவரி: 26, 33வது ஒழுங்கை, வெள்ளவத்தை.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை.

பெயர்: எம். ஸியாட்.
வயது: 22
முகவரி: P.O.BOX-10164, AL-JUBAIL IND. CITY, K.S.A. 31961.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

ஹிட்லரின் நாஜிப் படைகளை எதிர்த்துப் போராடிய போராளிகளின் புரட்சிகரத் தலைவர் ஜூலியஸ் பூசிக். சாவின் விளிம்பில்-
சிறைக்குள் இருந்து எழுதிய சாவில்லாத குறிப்புக்கள் இவை.
சிறைக்காவலர் ஒருவரின் உதவியுடன் வெளியே கடத்தப்பட்ட குறிப்புக்களை திசைக்கொன்றாய் ஒளித்துவைத்தனர். ஹிட்லர் வீழ்ந்த பின் வெளியிட்டனர். பல நாடுகளில் இந்தக் குறிப்புக்களை வெளியிட கடும் தடைபோடப்பட்டது. தடைக்கான காரணம் என்ன?
எங்கிருந்து இதைப்படித்தாலும் அங்கு நடக்கும் கொடுமைகளுடன் ஒப்பிடக்கூடிய அனுபவங்கள் இவை. உயிரோட்டமும், உணர்ச்சி வேகமும் கலந்த குறிப்புக்கள்!

# தூக்கு மேடைக் குறிப்பு – 1

ஜூலியஸ் பூசிக்

பத்து அடிக்க ஐந்து நிமிஷம். 1942 ஏப்ரல், 24. இதமான-ரம்யமான-வசந்த மாலை.

நொண்டிக் கிழம் போல் வேஷம், தள்ளாடும் பாவனை. இந்த நடிப்புடனே முடிந்தவரை வேகமாக விரைகிறேன். பத்து அடிக்கும்போது ஊர் அடங்க வேண்டும் என்பது நாஜி உத்தரவு. அப்போது ஜிலினிக் தம்பதிகளின் வீடும் தாழிடப்படும். அதற்குள் நான் அங்கு போய்ச் சேர்ந்தாக வேண்டும்.

என்னைச் சந்திக்கும் பொருட்டு என் 'துணைவன்' மிரேக் அங்கு காத்திருக்கிறான். அவன் எனக்குத் தெரிவிக்கவோ, நான் அவனுக்குத் தெரிவிக்கவோ, முக்கியமான தகவல் இந்தத் தடவை எதுவும் இல்லை என்பது எனக்குத் தெரியும். எனினும், ஏற்பாட்டின்படி சந்திக்காமல் இருப்பது தவறு. அது அவசியமற்ற பீதியை உண்டுபண்ணும்.

எங்கள் சந்திப்புக்கு வசதி செய்து கொடுத்திருக்கும் அந்தத் தம்பதிகள், நான் போகாவிட்டால் என்னவோ, ஏதோ என்று கலக்கமடைவர். ஏற்கனவே அவர்களுக்கு இருக்கும் கவலைகள் போதாதா? நான் புதிய கவலைகளை வேறு அவர்களுக்கு- அந்த அருமையான உள்ளங்களுக்கு- உண்டு பண்ண வேண்டுமா? சே, அதை நான் வெறுக்கிறேன்.

அவர்கள் என்னை வரவேற்கிறார்கள். ஒருகோப்பை தேநீர் கொடுத்து உபசரிக்கிறார்கள்.

மிரேக் வந்திருக்கிறான். அவன்கூட, பிரைடு தம்பதிகளும் வந்திருக்கிறார்கள்.

அவர்கள் அங்கு வர அவசியம் இல்லை. இப்போது ஒரு கூட்டம் ஆகிவிடவில்லையா?

இது சந்தேகத்துக்கு இடம் அளிக்கும். துணிந்து இருக்க வேண்டும்தான். ஆனால், அவசியமில்லாதபோது அது எதற்கு? அவர்களிடம் நான் சொல்லுகிறேன்:

"தோழர்களே! உங்களைப் பார்க்க எனக்கு விருப்பம்தான். ஆனால் இப்படிச் சேர்ந்தாற்போல் அல்ல. ஒரு அறையில் ஒரே சமயத்தில் இத்தனை பேர் கூடியிருப்பதைவிட, சிறைக்குப் போக- தூக்கில் தொங்க வேறு சிறந்த மார்க்கம் இல்லை. இரகசிய வேலைகளில் ஈடுபடுவது என்றால் அவற்றிற்கான விதிகளின் பிரகாரம் நடக்க வேண்டும். இல்லையேல் எங்களை விட்டு விலகிவிட வேண்டும். விதிகளை அனுசரிக்காததால் நீங்கள் உங்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் ஆபத்தை விலைக்கு வாங்குகிறீர்கள். என்ன, புரிகிறதா?"

"புரிகிறது."

"சரி, இருக்கட்டும். இப்போது எனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்? "

"ரெட் றைட்ஸ் (Red Rights) மேதின பத்திரிகையின் நகல்."

"ரொம்ப நல்லது....மிரேக்! நீ...?"

"புதிதாய் ஒன்றும் விசேஷமில்லை. வேலை சரியாக நடக்கிறது....."

"சரிதான். என்னிடமும் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நீ இப்போது போகலாம். மே தினத்துக்குப் பிறகு சந்திக்கிறேன். நானே சொல்லி அனுப்புகிறேன். "

"இன்னும் கொஞ்சம் 'டீ' குடியுங்கள்!"

"ஊஹும். திருமதி ஜிலினிக்! வேண்டாம். இங்கு எத்தனை பேர் இருக்கிறோம் என்று பார்த்தீர்களா? நானே குடித்து விட்டால்......"

"பரவாயில்லை. ஒரே ஒரு கோப்பை மட்டும்...."

கோப்பையில் ஊற்றிய சூடான தேநீரிலிருந்து ஆவி கிளம்புகிறது.

தெருக் கதவை யாரோ தட்டுகிறார்கள்.

இரவு இவ்வளவு நாழிக்குப் பிறகா?.... யார் அது?

தட்டுகிறவர்களுக்குப் பொறுமையில்லை, என்ன அவசரம்! அவர்கள் இடிக்கிறார்கள்!

"திற! திற! பொலிஸ்!"

வந்தது ஆபத்து! மலைக்காதே! ஓடு! எங்கே ஜன்னல்? அதோ! தாண்டு! தப்பிப் பிழை! கையில் துப்பாக்கியுண்டு; ஒரு கை பார்க்கலாம்....முடியாது, நேரமில்லை; அவகாசமில்லை. ஜன்னலுக்கு நேரே தெருவில் கெஸ்டோபோ. அண்ணாந்து ஜன்னலைக் குறி வைத்தவாறு துப்பாக்கியுடன் நிற்கிறார்கள்.

அதற்குள் தெருக்கதவை உடைத்துத் தள்ளி, ஆசாமிகள் உள்ளே புகுந்து விட்டனர். சமையல்கட்டு வழியாகப் பலர் திமுதிமுவென்று அறைக்குள் பிரவேசித்தனர். ஒன்று, இரண்டு, மூன்று- ஒன்பது பேர்!

அவர்கள் வந்த கதவின் பின்புறம் நான் பதுங்குகிறேன். நல்லவேளை! அவர்கள் என்னைப் பார்க்கவில்லை. அவர்களை நான் முதுகில் சுட்டுவிடலாம். ரொம்ப சுலபம்!.... ஆனால்.... விபரீதம்; அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் ஒரு துப்பாக்கி.

அத்தனையும் அந்த இரண்டு யுவதிகளையும் மூன்று வாலிபர்களையும் குறி பார்க்கின்றன.

என் துப்பாக்கியிலிருந்து மறு வேட்டுக் கிளம்புவதற்குள், என் ஐந்து தோழர்களும் சுடப்பட்டு வீழ்வார்கள்.... என்னையே நான் சுட்டுக் கொண்டால்....?

அப்படியானாலும், என் வேட்டுச் சத்தம் கேட்டவுடன் அவர்களும் சுடுவர். எதிரே நிற்கும் ஐவரும் மடிவர்.... நான் சுடாவிட்டால்....?

ஆறு மாதமோ, ஒரு வருடமோ அவர்கள் சிறையில் அவதிப்படுவர். புரட்சி அவர்களை விடுதலை செய்யும் உயிரோடே... மிரேக்கும் நானும் மட்டுமே உயிரோடு மீள மாட்டோம். எங்கள் இருவரையும் அவர்கள் சித்திரவதை செய்வார்கள்.

என்னிடமிருந்து இம்மிகூடக் கறக்க முடியாது. ஆனால் மிரேக்கிடமிருந்தோ....? அவன் சாமான்யமானவன் அல்ல. ஸ்பெயின் போரில் சண்டை போட்டவன். ஃபிரான்ஸில் மந்தைவெளிச் சிறையில் இரண்டு ஆண்டுகள் அவதிப்பட்டு, உறுதி குலையாமல் தப்பியவன். யுத்த நடுவில், ஃபிரான்ஸிலிருந்து தலைமறைவாய் பிரேக் நகருக்குத் தப்பி வந்தவன். இல்லை, அவன் ஒன்றையும் சொல்லிவிட மாட்டான்.... சுடவா? வேண்டாமா? முடிவு செய்ய இரண்டே வினாடிகள்-இல்லை மூன்று வினாடிகளா?

சுட்டால் என்னைத் தவிர வேறு யாருக்கும் நன்மை இல்லை. சித்திரவதைக்கு ஆளாகாமல் என்னைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர, வேறு யாரையும் நான் காப்பாற்றவில்லை. ஆனால் ஐந்து தோழர்களைப் பலியிடுகிறேன். இது உண்மைதானே? ஆமாம்; தீர்மானித்துவிட்டேன். பதுங்கியிருந்த மூலையிலிருந்து வெளியே வருகிறேன்.



"ஏய்! இதோ இன்னும் ஒருவன் இருக்கிறான்."

என் முகத்தில் முதல் குத்து. ஒருவனைக் கீழே உருட்ட அது ஒன்றே போதும்.

"கைகளைத் தூக்கு!"

இன்னொரு குத்து; மீண்டும் ஒன்று.

மேலும் பல அடிகள்; உதைகள்.

"நட"

என்னை லாரிக்குத் தள்ளிப்போகிறார்கள். எனக்கு எதிரே கைத் துப்பாக்கிகள் நீட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய விசாரணை, லாரியிலேயே ஆரம்பித்துவிட்டது.

"யாரடா நீ?"

"பேராசிரியன் ஹொராக்."

"புளுகுகிறாய்!"

தோளை உயர்த்தித் தாழ்த்துகிறேன்.


"அசையாதே! சுட்டுக் கொன்று விடுவோம்!"

சுடவில்லை; குத்துகிறார்கள்.

எதிரே ஒரு கார் எங்களைத் தாண்டிச் செல்கிறது. அது வெண்மையாகத் தோன்றுகிறது. கல்யாணக்காரா அது? இந்த அகாலத்திலா கல்யாணக்கார் போகும்?... ஊஹும்... எனக்கு ஜன்னி கண்டிருக்க வேண்டும்.

பெட்செக் கட்டிடம்; கெஸ்டோபோ தலைமைக் காரியாலயம்.

உயிரோடு இங்கு காலடி வைப்பேன் என்று கனவிலும் கருதவில்லை. நாலாவது மாடி வரை என்னைத் தள்ளிப் போகிறார்கள். நாலாவது மாடி! இதுதானா அந்த இடம்? பெயர் பெற்ற இடம்! புரட்சிக்காரர்களைக் கருவறுக்கும் வேலைகளைக் கவனிப்பதற்காகப் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இலாகா! என் கண்கள் ஆர்வத்தினால் அநேகமாக ஒவ்வொன்றையும் துருவித் துருவிப் பார்க்கின்றன!



என்னைப் பிடிக்க வந்தவர்களில் ஒருவனான நெட்டை அதிகாரி, கைத்துப்பாக்கியைப் பைக்குள் போட்டுக் கொண்டு, தன் காரியாலய அறைக்குள் என்னை அழைத்துப் போகிறான். சிகரெட் பிடிக்க நெருப்பு உதவுகிறான்.

"யார் நீ?"

"பேராசிரியன் ஹொராக்."

"பொய்!"

அவன் கைக்கடிகாரத்தில் மணி பதினொன்று.

வந்தது ஆபத்து! மலைக்காதே! ஓடு! எங்கே ஜன்னல்? அதோ! தாண்டு! தப்பிப்பிழை! கையில் துப்பாக்கி உண்டு ஒரு கை பார்க்கலாம்... முடியாது.

"இவனைச் சோதனை போடுங்கள்!"

அவர்கள் என் ஆடைகளைக் களைந்து சோதனை செய்கிறார்கள்.

"இவனிடம் ஒரு அறிமுக அடையாளச் சீட்டு இருக்கிறது?"

"பெயர்?"

"பேராசிரியர் ஹொராக்."

"சரிபார்த்துச் சொல்!"

அவர்கள் யாருடனோ டெலிபோனில் பேசுகிறார்கள்.

"அப்படி ஒரு பெயரும் பதிவு ஆகவில்லை. இது கள்ளச் சீட்டு."

"இதை உனக்குக் கொடுத்தது யார் ?"

"பொலிஸ் தலைமைக் காரியாலயம்."

முதல் லத்தி அடி: இரண்டு, மூன்று.. எத்தனை அடிகள்? அதை நான் எண்ண வேண்டுமா? யாருக்காக? இந்தப் புள்ளி விபரத்தைச் சமர்ப்பிக்க ஒரு இடமும் இல்லை அப்பனே!

"உன் பெயர்? சொல்லு? விலாசம்? பதில்! உனக்கும் யாருக்கும் தொடர்பு? பேசு? அவர்களுடைய விலாசம்? பேசு பேசு! பேசு, இல்லையேல், தோல் உரிந்து விடும்!"

எத்தனை அடிகள் ஒருவனால் தாங்க முடியும்?

நடுநிசி என்று அறிவிக்கிறது ரேடியோ. காப்பிக் கடைகள் மூடப்படும். கடைசிவரை இருந்து குடித்துக்களித்தவர்களும் வீட்டுக்கு நடையைக் கட்டுவர். பிரிய மனம் இல்லாமல்-வீட்டுக்கு முன் வீதியில் நின்று, காதலர்கள் விடைபெற முயற்சிப்பர். நெட்டை அதிகாரி குதூகலத்துடன் அறைக்குள் நுழைகிறான்.

"பத்திரிகை ஆசிரியரே! சௌக்கியம் தானே?"

பத்திரிகை ஆசிரியர்! அதை அவர்களுக்குச் சொன்னது யார்? ஜிலினிக் தம்பதிகளா? பிரைடு தம்பதிகளா? இருக்க முடியாதே! அவர்களுக்கு என் பெயர் கூடத் தெரியாதே!

"பார்த்தாயா? எங்களுக்கு எல்லாம் தெரியும். பேசு; நியாயமாக நடந்து கொள்!"

அவர்களுடைய அகராதியே தனி. அதில் 'நியாயமாக நடப்பது' என்றால், 'காட்டிக் கொடுத்தல்' என்று அர்த்தம்.

நான் அவர்கள் கூறுகிறபடி 'நியாயமாக நடக்க' மாட்டேன்.

"கட்டிப்போட்டு இன்னும் கொஞ்சம் கொடுங்கள்!"

மணி ஒன்று, இன்னும் ஓய்ந்து கிடக்கப்போகாத கார்கள் எல்லாம், இருப்பிடம் நோக்கி ஓடுகின்றன. தெருவெல்லாம் 'வெறிச்'சென்று இருக்கும், இம்மியும் ஐயமின்றி விசுவாசத்துடன் செவிசாய்த்துத் தன் பிரச்சாரத்தைக் கேட்டு வரும் தன் நேயர்களுக்கு ரேடியோ? "குட்நைட்" (நிம்மதியாகத் தூங்கும்படி பிரார்த்தித்து) கூறுகிறது.

"உன்னைத் தவிர மத்திய கமிட்டி உறுப்பினர்கள் யார் யார்? ஒலிபரப்பும் கருவிகளை எங்கே ஒளித்து வைத்திருக்கிறீர்கள்? உங்களுடைய இரகசிய அச்சுக்கூடம் எங்கே இருக்கிறது? பேசு! பேசு! பேசு!"

மீண்டும் அடிகள். உதட்டைக் கடிப்பதால் உண்டாகும் வலியைத் தவிர, வேறு எங்கும் உணர்ச்சி இல்லை.

"பூட்ஸ்களைக் கழற்றுங்கள்!"

உண்மைதான். இன்னும் என் அடிப்பாதங்கள் புடைக்கவில்லை. அவற்றில் இன்னும் சொரணை இருக்கிறது. இல்லாவிட்டால் வலிக்குமா? ஐந்து, ஆறு, ஏழு ஒவ்வொரு பிரம்பு அடியும் நேரே மூளையில் விழுவது போல் இருக்கிறது.

மணி இரண்டு. பிரேக் உறக்கத்தில் ஆழ்ந்துள்ளது. எங்கோ ஒரு குழந்தை அழும்; மனைவியின் இடுப்பில் தட்டுவான் கணவன்.

"பேசு! பேசு!"

இரத்தம் கசியும் ஈறுகளை என் நாக்குத் தடவிப் பார்க்கிறது. எத்தனை பற்கள் உடைந்தன? ஹும்! எண்ண முடியாது. இயலவில்லை. பன்னிரண்டா? பதினைந்தா? பதினேழா? இல்லை. அது 'விசாரணை' செய்யும் அதிகாரிகளின் எண்ணிக்கை. அவர்களில் சிலர், நிரம்பக் களைத்து விட்டார்கள். ஆனால் சாவு இன்னும் வரமாட்டேனென்கிறது.

மணி மூன்று, சுற்றுப்புறங்களிலிருந்து வைகறை நகருக்குள் நுழைகிறது. தோட்டக்காரர்கள் காய்கறிகளை வண்டியில் ஏற்றி மார்க்கெட்டுக்கு வருகிறார்கள். நகரசுத்தித் தொழிலாளர்கள் தம் பணி புரியப் போகிறார்கள். பொழுது விடிவதை இன்னும் ஒரு தடவை பார்க்க வாய்ப்பு கிடைக்கும் போலிருக்கிறது.

அவர்கள் என் மனைவியை அழைத்து வந்து என் முன் நிறுத்துகிறார்கள்.

என்ன சொல்லப் போகிறாள்? இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

(தொடர்ந்து வரும்)

# கொடுத்துவைத்தவன்

அமீர்கான் கே.முஹம்மட்

விலைவாசிபோல உயர்ந்த ஊர்வாசிகளின் பயத்தால் பஸ்நிலையம் அகதியானது.

பத்தளம் போவதற்காக புறப்பட்டு வந்த சலீம் பஸ் வரும்வரை பஸ் நிலையத்தில் தரித்து நின்றான். மனதுக்குள் சாமரம் வீசிய தென்றலின் தழுவலில் தன்னை மறந்து அதிகாலைக் காட்சிகளை கண்களால் வாசித்தான்.

பின்புறம் மீன் மார்க்கற், முன் பக்கம் மரக்கறிச் சந்தை, இரண்டுக்குமிடையில் உயர்ந்து நிற்கும் மணிக்கூட்டுக் கோபுரம். இவற்றுக்கிடையில்தான் எத்தனை நிகழ்வுகள்! சந்தைக்கு விரையும் சனக்கூட்டம், படைகளின் அணிவகுப்பை நினைவூட்டும் ஆட்டோக்களின் எதிரும் புதிருமான ஓட்டம்.

வாகனங்களின் இடைவெளிக்குள் வெள்ளாடை மயில்களாக நடைபோடும் கல்லூரிச் சிட்டுக்கள், வேலைக்குச் செல்லும் பயணிகளின் பழுவைத் தாங்க முடியாமல் அசையும் வேன்கள், மனிதர்களின் நடமாட்டத்தை நோட்டமிட்ட வண்ணம் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையிலிருந்து இறங்கி வரும் புள்ளிமான் கூட்டம்! 'ஆ.ஹா.., இத்தனை அழகுகளையும் அள்ளிவைத்துக் கொள்ள என் இதயக் கூட்டுக்குள் இடமில்லை....யே'! கற்பனையில் மிதந்து கொண்டிருந்த சலீமின் விழிகள் இடது புறம் திரும்புகின்றன.

அங்கே ஒரு பைத்தியம்-அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களின் சைலன்ஸருக்குள் கையைவிட்டு கரியை உடம்பு முழுவதிலும் பூசிக்கொள்வதில் சந்தோசத்தின் எல்லையைத் தொட்டுக்கொண்டிருந்தான். அரைகுறை ஆடை, கரிபூசப்பட்ட மேனி, தோள் பட்டைகளில் கரிய 'ஒயில்' வடிந்து கொண்டிருந்தது. அதுவரையும் அழகில் ஆக்கிரமிப்படைந்தவனின் மனம் இப்போது அருவருப்படைந்ததில் ஆச்சரியமில்லை. 'சீ... என்னடா இது....! ஆண்டவன் இவ்வளவு கொடுமைக்காரனா..?' மனதுக்குள் இறைவனை நிந்தித்துக் கொண்டான். மணிக்கூட்டுக்கோபுரம் "கணீர்.. கணீர்..." என ஒன்பது தடவைகள் அலாரித்து ஓய்ந்தது. இன்னும் பஸ் வராததால் பொறுமை இழந்து கொண்டிருந்தான் சலீம்.

அவனைப் போலவே பஸ்ஸுக்காக காத்துக்கொண்டிருந்த மக்களின் முகங்களில் திடீரென ஒருவித பீதி படரத் தொடங்கியதை அவதானித்தான். எல்லா வாகனங்களும் திருவிழாவுக்கு விரைவதுபோல், நான் முந்தி... நீ முந்தி என இடத்தைக் காலிபண்ணிக் கொண்டிருந்தன. சந்தைக்கு வந்த சனங்களின் நடையிலும் இனம்புரியாத அவசரம். சலீமுக்கு எதுவும் புரியவில்லை.

"குல்லா வாடிப்பக்கம் ஏதோ குழப்பமாம்... எல்லாக் கடைகளும் பூட்டிட்டாங்கள்" இறக்கக்கண்டியிலிருந்து வந்த மீன் வியாபாரி கூறிவிட்டு கிண்ணியாப் பக்கம் ஓடுறான்... "இல்ல..... சென்ரல் றோட் சென்றி பொயின்றில் சின்னப் பிரச்சனயாம்"!- மரக்கறி வாங்க வந்த கிழவி... வார்த்தைகள் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தான் சலீம்; ஏவரையும் காணவில்லை.



விலைவாசியை விட வேகமாய் உயர்ந்த ஊர்வாசிகளின் பயத்தால் அகதியாகிக் கொண்டிருந்தது திருமலை பஸ் நிலையம்.

யாழ்ப்பாணத்திலிருந்து 90ஆம் ஆண்டு வெளியேறி புத்தளத்தில் தஞ்சம் புகுந்து உத்தியோக நிமித்தம் திருமலையில் தங்கியிருக்கும் அவனுக்கு இது ஒன்றும் புதிதல்ல. என்றாலும் திருமலைக்கு வந்து ஆறு மாதங்களில் இன்றுதான் முதன்முதலாக இப்படியொரு நிலைமைக்கு முகம் கொடுக்கின்றான். டயரிக்குள்ளிருந்த அடையாள அட்டையை முன்பக்கற்றில் வைத்தபடி மெதுவாக நடந்து ஒற்றைக் கதவுமட்டும் திறக்கப்பட்டிருந்த தேனீர்க் கடைக்குள் புகுந்துகொண்டான்.

"முதலாளி ஒரு ரீ போடுங்க...." ஓடர் செய்துவிட்டு யன்னலினூடாக வீதியை அளந்தான். அவன் சற்றுமுன்னர் கண்டு களித்த எந்த காட்சிகளும் அங்கில்லை. அவை இருந்ததற்கான தடயங்களுமில்லை. அங்கங்கே படையினரின் வண்டிகளும்.... இடையிடையே வெடிச்சத்தங்களும் மட்டுமே அவனது பார்வைக்கும் செவிகளுக்கும் தீ மூட்டின. தூரத்தில் ஒரு கறுப்பு உருவம் மெல்ல மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தது. அவன் பார்வையைக் கூர்மையாக்கினான். அது வேறுயாருமல்ல.. சற்றுமுன்னர் அவன் கண்டு அருவருப்படைந்த அதே 'பைத்தியம்'தான். முகத்தில் எதுவித சலனமுமின்றி.. அங்குள்ள நிலையை பொருட்படுத்தாமல் நடந்து வந்து கொண்டிருந்தான்.

'இறைவா... உனது படைப்பில் எல்லாருமே பைத்தியங்களாக இருந்து விட்டால்.... குழப்பம், சண்டை, இனப் பிரச்சினை... எனும் பேச்சுக்கே இடமிருக்காதே... அதோ... சிரித்தபடி வருகிறானே! முகத்தில் பயத்தின் ரேகைகளைக்கூட காணவில்லையே....!' சில வேளை அவனுடைய பார்வையில் நாங்கள்தான் பைத்தியங்களாகத் தெரிகின்றோமோ.; அதோ... அதோ வாய்விட்டுச் சிரிக்கின்றானே! 'இறைவா... நீ உண்மையில் அற்புதமானவன்தான்!' முன்னர் இறைவனை நிந்தித்த சலீம் இப்போது புகழ்ந்து கொண்டிருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

**"யாழி! நீயும் கனடாவுக்கு வந்திடன்.... இங்கேயே இருந்து சாகப்போறியே? இந்த நரகத்தில் என்னால இருக்கமுடியா........"**



# அம்மா....

## கரீமா ராஹில்

"அம்மா...ம்....மா....ஓ....டியாங்....கோ!" யாழினி குரலால் பீதி எழுப்பினாள்.

"ச்....சே....அம்மாவுக்கு....ஓடமுடியாதே..."

அவளாகவே அம்மாவை இழுத்துக் கொண்டு குசினிக்குக் கீழ் இருக்கும் அறைக்குள் நுழைந்தாள்.

"அ.....ப்.....ப்....பா...டா!"

அவளின் மனம் ஆறுதல் அடைந்தது.

"உப்புடிக் கஷ்டத்துல இருக்கிறதப்பாக் கேக்க செத்துடலாம் போல கிடக்கு...."

அம்மாவின் வார்த்தைகள் விரக்தி சுமந்து வந்து உமிழ்ந்தன- விழுந்தன.

யாழினி இதயத்தால் நொந்தாள்; எண்ணங்களால் வெந்தாள்.

ஆகாயத்தை போர்விமானம் குத்தகைக்கு எடுத்திருந்தது. அது தாகத்தோடு வட்டமடித்துக் கொண்டிருந்தது.

"என்....ன....புள்...ள என்னால உனக்கும் பெரும் துன்பமாப் போச்சு...அத நெனச்சாத்தான் நெஞ்சு வெடிக்கும் போல கிடக்கு......"

"அம்மா! அப்படியெல்லாம் பேசாதீங்கோவன்.....நாம சாகிறண்டாலும் ஒண்டாகவே சாவோம்......"

யாழினி தன் பாசத்தை வார்த்தைகளால் வரைந்தாள். இதயம் துன்பத்தால் நிறைந்து கிடந்தது. உணர்வுகள் அறுந்து கிடந்தன. அவர்களின் சந்தோசம் இறந்து கிடந்தது.

"ஸ்....ஸ்....டும்டும்...ம்.....ம்....ஸ்....டும்....டும்...ம்."

வீடு அதிர்ந்தது. இதயக்கூடு அறுந்தது. செவிப்பறை வெடிக்கும் முழக்கம்.

"அ....அ...ம்..மா...மா....அ.....ம்...ம்....மா....மா"

"ஏ புள்ள, பயந்துட்டியே...? வழக்கமானதுதானே!"

"ஓமம்மா.....நானும் பயந்துட்டன்....எங்கட வீட்லதான் குண்டு விழுகுதோ எண்டு...; எங்க போட்டானுகளோ?...எத்தன பேரோ.....? கடவுளே!....என்ன பாவம் பண்ணினம்...?" யாழினி வார்த்தைகளால் அழுதாள். மேனியெங்கும் வியர்வை. பயம் ஒரு புறம். காற்றோட்டம் போதாமை இன்னுமொரு புறம்.

அவளின் அக்கா, அண்ணன் இருவருக்கும் கனடா அடைக்கலம் கொடுத்திருந்தது.

"யாழினி...நீயும் கனடாவுக்கு வந்திடன்.... இங்கேயே இருந்து சாகப் போறியே? இந்த நரகத்தில என்னால இன்னமும் இருக்க முடியா...."

அண்ணன் கனடாவுக்குச் செல்லும் போது சொன்னவைகள் இன்னும் அவள் இதயத்தில்!

"யாழி! அண்ணாவின்ர பேச்ச....கேளு! நீயும் எங்ககூட வந்துட்டா எங்களுக்கும் நிம்மதியா இருக்கும்....."

அக்காவின் இறந்தகாலத்து வார்த்தைகள். உயிரில்லாத வார்த்தைகளாகத்தான் யாழினிக்குப் பட்டது.

'ச்....சே.... இவங்களும் மனுசர்களே.....?'

அவள் மனதுக்குள் தீர்மானம் நிறைவேற்றினாள். 'இது பாலை வனமாக இருந்தாலும் இந்தத் தென்றல் இதைவிட்டுச் செல்லாது.'

'இந்தப்பூ இங்குதான் மலரும்..... கருகும்.....உதிரும்....' அவளாக அவளுக்குள் உரையாடினாள்- உறவாடினாள்.

"எ....ன்.....ன விசர்க் கதை கதைக்கிறியள்? அம்மாவ விட்டுட்டா...?..."

"அவவ கொழும்புல விடலாம்..... அம்மாவ அழைச்சிட்டுப் போக முடியுமே....?"

'கொழும்பில் அம்மாவை தனியாகத்தங்க வைப்பதா? ஈன்றவளைத் தனிமரமாகத் தவிக்க வைப்பதா?' யாழினி சிறுமியாக இருக்கும் போதே அப்பா இவ்வுலகத் தொடர்பை துண்டித்துக் கொண்டார். அதன்பிறகு அப்பாவாகவும் அவள் அம்மாவைத்தான் பார்த்தாள்- பூத்தாள்.

அம்மாவுக்கும் அறுபதைத் தாண்டிய வயது. சீனி வியாதியும் உண்டு. இந்த நிலையில்: தான் மட்டும் சுவாசிப்பதை- கடல் கடந்து வசிப்பதை முற்றாக வெறுத்தாள். அவர்களுடன் கூட வரமறுத்தாள்; அவர்களின் அழைப்பை இதயத்தால் எரித்தாள். உடன் பிறப்புக்களாக அவர்கள் யாழினியின் விழிகளுக்குத் தெரியவில்லை. சுயநலம் சவாரி செய்யும் குதிரைகளாகப் பட்டனர்.

'ஓ'வென்று அழ வேண்டும் போலிருக்கும். 'மாதராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா...' என்ற பாரதி கவிதையோடு அவள் பழகியிருக்கிறாள்.

அந்தக் கவிதையைப் படிக்கும்போது அவளின் இதயம் பெருமையால் இளகும். இளமை இன்னும் பெருகுவது போல் உணர்வு பொங்கும். இப்போது- பெண்ணாய்ப் பிறத்தல் பாவம். அதிலும் யுத்த தேசத்தில் பிறத்தல் பெரும் பாவம். உறவுகள் பிரிந்து தனித்து இன்னும் ஒன்றுக்காக வாழ்வது மாபெருங்கொடுமை. இவற்றைத் தான் யாழினி அனுபவித்தாள்- துன்பத்தை வாழ்வில் அனுமதித்தாள்.

இப்போதும் அவளின் இதயத்தில் செதுக்கியதுபோல் ஞாபகம் இருக்கிறது.

"இந்தக் கிழடு இன்னுமிருந்து கொண்டு..... எங்கட உயிர எடுக்குது..... மண்டையப் போட்டா எல்லாம் சரிப்பட்டிடும்...."

அவளின் அக்கா அரங்கேற்றிய தீ இது. இந்த வார்த்தைகளை மேயும் போதெல்லாம் இதயம் குருதிக்குள் தோயும்.

"அம்மா! சத்தங்கேட்கிறாப்ல கிடக்கு.... கொஞ்சம் இருங்கோவன்....நான் போட்டுப் பாத்திட்டு வாறன்...."

"யா....ழி...?"

"எனக்கு ஒண்டுமாகா.... பயப்புடாதீங்கோ....."

விமானச் சத்தம் தேய்ந்து ஓய்ந்திருந்தது. அந்த நிலா முற்றத்துக்கு வந்தது. வீதியில் ஆட்கள் பரபரப்புடன் ஓடிக்கொண்டிருந்தார்கள். ஏதோ ஒன்று நடக்கிறது. மனதில் குறித்துக் கொண்டாள். அல்லது நடக்கப் போகின்றது என்பதை உணர்ந்தாள்.

"அண்ணே.... என்ன... நடந்து போட்டுது...?"

அடுத்த தெருவில் பத்து வீடுகள் சேதமாம் என்பதை அறிந்தாள். அவளின் உயிர் நின்று இயங்கியது.

"பத்து வீடுகளெண்டால்..... ஆட்கள்....?.. குமார்...?"

அவளின் இன்னுமொரு ஜீவன், அவளின் எதிர்காலத் துணைவன்; அவனின் வீடும் அந்தத் தெருவில்தான். போய்ப் பார்க்க வேண்டும் போல் இதயம் கூவியது. குமாரில் இதயம் தாவிக்கிடந்தது.

"அம்மா....! வெளியே வாங்கோ!"

மெதுவாக அம்மா வந்தாள்.

"என்னவாம்...?"

அவள் விசயத்தை அம்மாவில் விதைத்தாள்.

"அடப்பாவ...மே...? இப்படி செத்துச் செத்து எத்தன நாளைக்குத்தான் பிழைக்கிறது....புள்ள, குமார்வீடும் அந்தப் பக்கந்தானே...?"

"ஓமம்மா....நான் போட்டு பார்த்திட்டு வாறன்....நீங்க இருங்கோவன்....."

அவள் சென்று பார்த்தாள். இதயம் இலகுவானது. சோகத்துள்ளும் துள்ளியது ஒரு சுகம். அந்த விமானம் வீடுகளில் மட்டும் கவிதை எழுதிச்சென்றிருந்தது. உயிர்கள் எல்லாம் முன்னரே மண்ணுக்குள் தற்காலிகமாக இறந்திருந்ததனால் உயிர்ச்சேதம் இடம்பெறவில்லை. எதிர்காலத் தென்றலை சந்தித்துப் பேசிவிட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தது அந்தச் சோலை.

அக்கா கனடாக்காரன் ஒருவனோடு தொடர்பாகி அவனைத்திருமணம் செய்தது; அண்ணன் தனக்குரிய துணையை அங்கேயே தெரிவுசெய்து கொண்டது எல்லாமே அவளின் மனதில் படமாக விரிந்தன.

"யாழி! அம்மா சௌக்கியமே....? உன்னப்பத்தியும் அம்மாவப்பத்தியும்தான் எனக்கு வருத்தம்......" இறுதியாகக் கிடைத்த கடிதம் தந்த அறுவடை இவை. அந்த வரிகள் யாழினியின் மனதில் மிதந்து அமிழ்ந்தன.

"அம்மா!..நெனச்ச மாதிரி ஒண்டும் நடக்கேல்ல...வீடுகள் தான் சேதமாகிக் கிடக்கு....."

யாழினி வார்த்தைகளைத் தூவிக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள்.

"அம்....மா...அம்...ம்...மா....!"

குசினிக்குள் சென்றாள். குண்டு விழுந்த அதிர்ச்சியில் சுவர் உடைந்து விழுந்திருந்தது. அதற்குள் நசுங்கி சுவாசம் தொலைத்துக் கிடந்தாள் அம்மா.

---

# விபச்சாரம்

## ரூபராணி

**காய்கறி வெட்ட அடுக்களைக்குச் சென்றாள் றெஜீனா. அவளது சிந்தனை அமெரிக்காவுக்கு இறக்கைகட்டிப் பறந்தது.**

அலாரம் செல்லமாகச் சிணுங்கி மணி ஆறைக் காட்டியது. றெஜீனா விழித்துக் கொண்டாள், அவள் கணவன் வியாபார விஷயமாகக் கொழும்புக்குச் சென்றதை நினைத்துக் கொண்டாள். தன்னை மூடியிருந்த போர்வையைக் காலால் உதைத்துத் தள்ளினாள். எழுந்து சென்றவள் திரைச் சீலையை இழுத்து யன்னலைத் திறந்தாள்.

வானத்திலிருந்து லேசான மழைத்தூறல் பூமியை நோக்கி விழுந்து கொண்டிருந்தது.



அந்த விடியற் காலையில் சிலுசிலு என்ற காற்று றெஜீனாவின் மேனியைத் தடவிச் சென்றது. பார்வையைத் தூர மேயவிட்டாள் றெஜீனா. செடி கொடிகள் பூத்துக் குலுங்கின, தான் எப்போதோ ஆசையாக வைத்த செடியில் பட்டுரோஜா ஒன்று தலையசைத்துக் கொண்டிருந்தது. வசந்த காலத் தடயங்கள் வழிநெடுகிலும் அடி பதித்திருப்பதைக்காண றெஜீனாவுக்குத் தனது வாழ்விலும் வசந்தத்தை எதிர்பார்த்ததை எண்ணிப் பார்த்தாள்.

றெஜீனாவை அழகி என்று சொல்லாவிட்டாலுங்கூட பார்ப்பதற்கு இலட்சணமாய்- கவர்ச்சியாய் இருந்தாள். அவளுடைய கணவன் றொபட் பிரபல்யம் வாய்ந்த ஒரு நகைக்கடை உரிமையாளன். பெனான்டஸ் முதலாளியைத் தெரியாதவர்கள் இல்லை என்று சொல்லலாம் அவரின் ஒரே வாரிசு றெஜீனா. அவளை உத்தியோகம் பார்க்கும் ஒருவனுக்கே கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாயிருந்தார். ஆனால் சமயம், சாதகம், வயது என்று வரும்போது பெனான்டஸ் விரும்பியோ விரும்பாமலோ றொபட்டை மருமகன் ஆக்கிக்கொண்டார்.

றெஜீனா குழந்தைச் சுபாவம் கொண்டவள். சுறுசுறுப்பும் படபடப்பும் அவளோடு கூடப் பிறந்தவை. கலகலப்பின்றி அமைதியாக, ஆனால் கண்ணியமாக இருப்பவன் தான் றொபட், வறுமையின் பிடியில் பிறந்த றொபட். படிப்படியாக முன்னேறியதற்கு அவனுடைய விடாமுயற்சியும் தன்நம்பிக்கையுந்தான் காரணம். காலையில் தொழிலுக்குச் சென்றால் மாலையில்தான் வீடு திரும்புவான். றெஜீனாவுக்கு எந்தக் குறையும் வைக்காமல் கவனித்துக் கொள்வான். றெஜீனா வீட்டு வேலைகளையும் சமையலையும் கச்சிதமாகச் செய்வதில் கை தேர்ந்தவள். இதற்கு உதவியாக இருப்பவள்தான் முனியம்மா. அவள் அடிக்கடி வெற்றிலை போட்டு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் தன் பற்களைக் காவியாக்குவதில் பலே கெட்டிக்காரி, இந்த வர்ணப் பற்களைப் பார்த்து வெளிப்படையாகவே சிரித்துக் கொள்வாள் றெஜீனா.

அன்று வழமைக்கு மாறாக றொபட் மதிய வேளையில் வீடு வந்ததைப் பார்த்த றெஜீனாவுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. றொபட்டின் தம்பி அமெரிக்காவில் இருந்து இங்கு வந்து மூன்று வாரங்கள் தங்கப் போகும் செய்தியைச் சொன்னான்.

றெஜீனா அவசர அவசரமாக வீட்டை அழகுபடுத்துவதில் முனைந்தாள். றொபட்டின், தம்பி ஜோணுக்காகப் பிரத்தியேக அறை ஒன்றையும் தயார் செய்து வைத்தாள்.

ஜோண் வந்து சேர்ந்தான். பார்ப்பதற்கு அழகாய் ,இளமையாய் இருந்தான், அவனுடைய கலகலப்பு வீட்டை நிறைத்தது. அவனுடைய அரையுங்குறையுமான தமிழ், சரளமான ஆங்கிலம் றெஜீனாவை வியப்பிலாழ்த்தியது. அவன் "அண்ணி அண்ணி", என்று றெஜீனாவை வளைய வந்தான். அமெரிக்கப் பெண்களைப்பற்றிக் கதை கதையாய்ச் சொல்லி அவளை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தான், றெஜீனாவுக்குப் பொழுது போவதே தெரியாது? அவளுக்கு ஜோணை மிகவும் பிடித்திருந்தது. றொபட்டுடன் ஜோணை ஒப்புநோக்கிப் பார்த்தாள், றொபட் ஜோணைப்போல் இல்லையே, என்று ஏங்குவாள், சுபாவ முரண்பாடுகள் அடிக்கடி றெஜீனாவைப் பிறாண்டின. மூன்று வாரங்கள் அவளுக்கு மூன்று நிமிஷங்களாகப் பறந்தது.

ஜோண் அமெரிக்கா சென்று ஒரு வாரமாகிவிட்டது. றெஜீனாவுக்கு வீடு வெறிச்சோடியதுபோல் தெரிந்தது. சூனியம் அவளைச் சுற்றி வளைத்தது. துள்ளித் திரிந்தவள் துவண்டு போனாள்.

"ஏம்மா உங்களுக்கு என்னாச்சு? சொகமில்லையா"? முனியம்மாகேட்டாள்.

அதே கேள்வியைத் தனக்குத் தானே கேட்டாள் றெஜீனா. பதில் கேள்விக் குறிதான். றொபட் அமைதியாய் இருந்தாலும் இதை அவதானிக்கத் தவறவில்லை.

காய்கறி வெட்ட அடுக்களைக்குச் சென்றாள் றெஜீனா, அரிவாளில் கத்தரிக்காய் நறுக்கியவளின் கற்பனை அமெரிக்காவுக்கு ஒரு கணம் இறக்கை கட்டிப் பறந்தது, அவளையறியாமலே அவள் இதயத்தில் ஜோண் இன்ப ராகத்தை மீட்டினான், றெஜீனா அவனுடன் கைகோர்த்து அமெரிக்காவில் சுற்றுலா சென்றாள். அவனைக் கட்டியணைத்தாள். அவன் மடிமீது விளையாடினாள். அவள் கைகளில் அவன் முகத்தை ஏந்தி முத்தமிட்டாள்.

அரிவாள் அவள் விரலைச் 'சுருக்'என்று வெட்டிவிட்டது. றெஜீனா சிலிர்த்துக்கொண்டாள், "ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும் ஏற்கனவே தன்னுள்ளத்தில் விபச்சாரம் செய்தாயிற்று" என்ற வேதாகம வாக்கியம் அவள் நினைவுக்கு வந்தது. விபச்சாரத்துக்கு இயேசு சொன்ன அர்த்தம் அவளைச் சுட்டது,

றெஜீனாவின் விரலில் மட்டுமல்ல இதயத்திலும் இருந்து இரத்தம் வடிந்தது.

---

# தீபாவளி?

## எம். கரேஷ்



வவுனியாவில் தவம் கிடந்து கொழும்புக்கு வருவதற்கான அனுமதியைப் பெற்ற கவிதாவிற்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது. 'ச்சே! என்ன ஒரு மோசமான வாழ்க்கை! மகன் திவ்யனை நினைக்க மேலும் கவலையாக இருந்தது. நான்கு வயதான திவ்யன் கவிதாவின் ஒரே மகன். தந்தை பாலசுந்தரம் கனடாவில்.

திவ்யன் யாழ்ப்பாணத்தில் பிறந்த நாள் முதல் சோகங்களையே பார்த்துப் பழகிவிட்டவன். இப்போது வவுனியாவில் பட்ட சீரழிவில் மேலும் மெலிந்து போனான்.

மகனையும் இழுத்துக் கொண்டு தூக்க முடியாத ஒன்றிரண்டு மூட்டை முடிச்சுக்களோடு பஸ் பிடித்து கொழும்பை வந்தடையும்போது நேரம் இரவு 11 மணியைத் தாண்டியிருந்தது. இருப்பினும் கொழும்பு நகரில் இன்னும் சனநடமாட்டம் ஓயவில்லை. அதைப் பார்த்த திவ்யனுக்கு மட்டுமல்ல கவிதாவிற்கும் ஆச்சரியம். 'ஆஹா! இங்கு மட்டும் மனிதர்கள் எவ்வளவு சுதந்திரமாகத் திரிகிறார்கள். காலை, மாலை, இரவு, பகல் என்ற கட்டுப்பாடுகள் இவர்களுக்கு இல்லையே!' கவிதாவின் மனம் ஏங்கியது.

எப்படியோ ஒரு லொட்ஜைப் பிடித்து, கால்முகம் அலம்பி, கிடைத்ததை உண்டு, பாயில் சாய்ந்தபோது கவிதாவிற்கு மேலெல்லாம் பயங்கரமாய் வலித்தது.

மறுநாள் காலை கொழும்பு கொட்டாஞ்சேனையில் வசிக்கும் முத்தையா மாமாவின் வீட்டைத் தேடிப்பிடித்து மூட்டை முடிச்சுகளோடு வாசலில் போய் நின்றபோது அவர்களுக்குப் பயங்கர ஆச்சரியம். 'இவர்கள் எப்படி இங்கு வந்தார்கள்?' என்பதைப் போல் பார்த்தார்கள்; வரவேற்றார்கள்.

முத்தையா மாமா ஊர் நிலமைகளைக் கவிதாவிடம் விசாரித்தார். கூடவே பொலிசில் பதிவது சிரமம் என்பதையும், அதனால் வீட்டில் தங்குவது பிரச்சனையாக இருக்கும் என்பதையும் மறைமுகமாகச் சொல்லி முடித்தவரின் முகத்தில் சோகம் அப்பியிருந்தது.

"என்ன பிள்ளை செய்யிறது? ஊரில இருந்து சொந்த பந்தம் எண்டு யாராவது வந்தாக்கூட வீட்டில தங்க வைச்சுக் கவனிக்க முடியாத ஒரு கேவலமான வாழ்க்கையை வாழ வேண்டியதாப் போச்சு!" பெருமூச்சு விட்டார்.

முத்தையா மாமா நல்லவர். கவிதாவிற்கு அது தெரியும். இருப்பினும் 'பொலிஸ் பதிவு' விடயத்தில் முத்தையா மாமா மட்டும் விதிவிலக்காக இருக்க முடியாதல்லவா?

"நீங்கள் கவலைப்படாதீங்கோ மாமா. இப்ப நாங்கள் இருக்கிற லொஜ் நல்ல இடம். அங்க எல்லா வசதியும் இருக்கு மாமா." கவிதா சமாளித்தாள்.

இவற்றையெல்லாம் ஒரு மூலையில் குந்தியிருந்தபடி அவதானித்துக் கொண்டிருந்த, முத்தையாவின் வயதான தாயார் கமலம் ஆச்சி கரகரத்த குரலில்,

"பிள்ளை நீ எங்க இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் நாளைக்குத் தீபாவளி. அதனால் காலைமையே இங்க வந்திடு என்ன?" ஆச்சியின் குரலில் பாச உணர்ச்சி ஒட்டிக் கொண்டிருந்தது. இதற்கிடையில் திவ்யன்,

"தீபாவளி எண்டால் என்னம்மா?" ஆர்வமாய்க் கேட்டான். யாழ்ப்பாணத்தில் அவன் எப்பொழுதுமே தீபாவளி கொண்டாடியதில்லை. ஆகையினால் அது அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது.

"மகன் ஆச்சியிட்டப் போய்க் கேள் வடிவாச் சொல்லுவா." கவிதா சொன்னது தான் தாமதம், கமலம் ஆச்சியுடன் தொற்றிக் கொண்ட திவ்யன் தீபாவளி பற்றி விசாரித்தான்.

"தீபாவளி என்றால் புது உடுப்பெல்லாம் போட்டு சந்தோசமாகக் கொண்டாடும்நாள்" என்ற பாட்டியின் விளக்கம் திவ்யனுக்குத் திருப்தியளிக்கவில்லை.

"பாட்டி! தீபாவளியை நாங்கள் ஏன் கொண்டாடுறம்?" திவ்யனின் அடுத்த கேள்வியைக் கேட்ட கமலம் ஆச்சி முற்றத்தை வெறித்துப் பார்த்தாள், பெருமூச்சு விட்டாள்.

"அதுதான் மகன் எனக்கும் தெரியேல்லை!!"



படிப்பகம்

www.padippakam.com

# விடிந்தால்தான் தீபாவளி

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்

விடிந்தால் தீபாவளி
வீடெங்கும் விழாக்கோலம்.

மண்ணகத்தில் மாபெரும் விழாவாம்
விண்ணகத்து தேவர்கள் எட்டிப்பார்த்தனர்.
"நாளைதான் அந்த நன்னாள்
நரகாசுரன் வீழ்ந்த பொன்னாள்"
தேவர்கள் தமக்குள் பேசிக்கொண்டனர்.

"காதளவு விரிந்த கண்களுடன்
நூலளவே தெரியும் இடையுடன்
மார்பளவை மூடிய ஆடையுடன்
பேரழகி ரம்பை ஆடட்டும்.
பூவுலகு கொண்டாடும் தீபாவளி
மேலுலகையும் பற்றிக் கொள்ளட்டும்"
இந்திரன் இட்டான் உத்தரவு.

"இன்று ஒத்திகை உம் முன்பாக;
நாளை நடன முத்திரை சபை முன்பாக!
கண்டுகொள் கலை நயம்,
உண்டுகொள் உடல் எழில்"
ரம்பை ஆடினாள் இந்திரன் முன்னால்.

"தும்பைப் பூப்போன்ற மென்மை
ரம்பை உன்மேனியின் தன்மை.
அம்பைத் தொடுத்திடும் விழிகள்
அறிவை மயக்கிடும் எழில்கள்.
பருவ மயிலே ஆடடி
உருக வேண்டும் நானடி"

"பருகத் தரவோ தேன் இதழ்
உருகத் தரவோ பொன் உடல்?"

"தீட்டினால்தான் வைரம் ஜொலிக்கும்-உன்னை
தீண்டினால்தான் உன் வதனம் சிவக்கும்."

"தீட்டினால்தானே உருவாகும் ஓவியம்
தீண்டினால்தானே உருவாகும் காதல் காவியம்"
ரம்பை பதில் பாட்டுப் பாடினாள்.

கூத்தும் பாட்டும் கும்மாளமும்
விண்ணுலகும் விழாவுக்குத் தயாரானது.

இடி முழக்கமாய் கேட்டது சிலிப்பொலி
ஈரேழு உலகையும் அதிரவைக்கும் பேரொலி.

ரம்பையை வீணையாய் மீட்டிய இந்திரன்
"வம்பனாய் சிரிப்பவன் யாரவன்?"
என்று சீறியே எழுந்தான் விரைந்தான்.
"பாதியில் போவதோ பசியென்னாகும்"
மஞ்சத்தில் கிடந்தவள் மோகத்தில் சிணுங்கினாள்.

நகைத்தவன் நரகாசுரன்-அவனிருந்தது
நரகலோகத்து கொடும் சிறைக் கூடத்தில்!

"பேயெனச் சிரித்த பேடி நீயோ?
சாயென வீழ்த்தி உன் சரித்திரம் முடித்தார்.
ஏனடா நகைத்தாய், உன் விதியை நினைத்தோ?"

மறுபடி இடியென நரகாசுரன் நகைத்தான்.
"கசையடி பெறவென ஆசையோ உனக்கு?"
வசைக்கணை வீசின இந்திரன் உதடுகள்.

"அழகிய வீணை போலொடு உடலாள்
பழகிய உனக்கு விருந்திடும் உடலாள்
கழுவும் நீரில் நழுவிடும் மீனாய்-நான்
தழுவிடும் போது தப்பிடும் பெண்ணாள்
ஒத்திகை பார்த்து ஆடியதேனோ?"

இந்திரன் உடனே சிரிக்கலானான்.

"விடிந்தால் நீ வீழ்ந்த தினம்.
மகிழ்ந்தார் மண்ணுலக மாந்தரெல்லாம்.
மண்ணுலகம் அதைக் கொண்டாட
விண்ணுலகம் மட்டும் விலகி நிற்கலாமோ?"

நரகாசுரன் முகத்தில் கேலிக்குறி.
"இந்திரா! பூவுலகின் போக்கையெல்லம்
எட்டிப்பார்க்க உனக்கு ஏதுதான் நேரம்?
ரம்பை ஒருபுறம், ஊர்வசி மறுபுறம்
இன்பக் கேணியில் இருந்து
நீ மீள்வதுதான் எவ்விதம்?"

"கேலியா அசுரனே!-உன்னை
வென்றநாள் நாளைதான்
நீ வீழ்ந்த நாள் தீபநாள்!"

"வீழ்ந்தது நான் மெய்யெனில்-பூமியில்
இருள் சூழ்ந்தது யாரினால்?

"பூமியில் இருளா?-பேயனே
என்னடா புதுக்கதை?"

"புன்னகை அரசனே இந்திரா!-நீ
மல்லிகைப் பெண்களை பின்னர் ஆளலாம்.
பூமியை ஒரு முறை காணலாம் வா!"

"உன்னுடன் நானுமா?-மானிடர்
கண்டதும் கலங்குவார்."

என்னையும் விழுங்கிடும்
எத்தர்கள் இருக்கிறார் பூமியில்.
மானிடப் பேய்களை கண்டவர் மானிடர்
நம்மிடம் அஞ்சிடார் வா!"

பூமியில் விரிந்தது பொல்லாக் காட்சி
"பாரடா இந்திரா பார்" காட்டினான்

வில்லுடன் அம்புடன் சேனைகள் பாய்ந்தன.
மெல்லுடல் மங்கையர் மிதிபட்டழிந்தனர்.
பொல்லுடன் ஆடிய கிழவரும் சாய்ந்தனர்.
பூவுடலுடன் துள்ளிய சிறுவரும் செத்தனர்!

"அழகிய பெண்களை அழைத்துவா விருந்துக்கு!
அழுகின்ற பெண்களை அடித்துவா களிப்புக்கு!
தட்டிக் கேட்பவர் சிரங்களை வெட்டி வா!
கொட்டிக் கிடக்கும் பொன் திரட்டி வா!"
தளபதி போலவன் தளராமல் ஆணையிட்டான்.

இந்திரன் திரும்பி அருகே பார்த்தான்.
"நான் இங்குதான் இருக்கிறேன்
அது நானல்ல இந்திரா! நம்புக!"
என்றான் நகைப்புடன் அசுரன்.

"என்னது ஆயுதம்?-நம்மிடம்கூட
இல்லையே இதுபோல்!"

நகைத்தான் நரகாசுரன்.
"புதிய நரகாசுரர்களின்
பொல்லாத ஆயுதங்கள்!-என்னை
அழித்ததாய் இறுமார்ப்புக் கொண்டீரே
இதோ பாரடா- இதோ பாரடா
என்னைப் போலவே
எத்தனை எத்தனை புதிய அசுரர்கள்.
ஒருவனை வீழ்த்தினீர்
ஒழிந்ததா கொடுமைகள்?
தீபமா ஏற்றினீர்? தீபமா ஏற்றினீர்?
தீயிருள் எங்கும் நிலவுதல் காண்க
பேயிருள் கையினில் பூமியைப் பாரும்
மையிருள் தன்னில் மாய்பவர் காண்க!
தீபம் ஏற்றினால் தீயிருள் போகுமோ?



சூரிய நெருப்பை மூட்டிட வேண்டும்.
வீரிய இந்திரா முடியுமா உன்னால்?"

"அதோ மனிதன்-யாரவன்
தொழில் என்ன செய்கிறான்?"

"எண்ணெயில் எதனையோ
இரக்கமில்லாமல் கலக்கிறான்.
பாலில் நீரை பதமின்றி சேர்க்கிறான்
கலப்பட சூரர்கள்
பலபேர் இருக்கிறார்."

"மானிடபூமியில் சூரர்கள் கொட்டமா?
நானுதல் இந்த மனிதருக்கில்லையா?
யாரிங்கே வேந்தன்-சீர்பெற
ஆட்சி நடத்துவதில்லையா?

"வெட்டுகிறார், வீசி வீழ்த்துகிறார்
இவர்களன்றோ
வீண் செயல் செய்யுகின்றார்.
வேந்தனை நீர் நோகுவதால்
யாது பலன்?"

இந்திரன் உடனே குறள் சொன்னான்.
"கொலைமேற்கொண் டாரிற் கொடிதே-
அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து"

"இதற்கு பொருள் என்ன இந்திரா?"

"கொடிது கொடிது
கொலைத் தொழில்-அதனினும்
கொடிது
வருந்தும் மக்களை திரும்பியும் பாரா
முறைதவறிய அரசர்!"

இந்திரன் திரும்பினான்
ரம்பை வந்து நயமாய் சொன்னாள்:
"விடிந்தால் தீபாவளி!"
இந்திரன் மறுத்தான்.
"விடியும் என்ற நம்பிக்கை
மடிந்துவிட்டதடி.
விடிந்தால்தான் இனித் தீபாவளி!

மற்றொரு உத்தரவும்
மறக்காமல் இட்டான்.
"நரகாசுரனை விடுதலை செய்யவும்!"
"என்ன? விடுதலையா? இவனுக்கா?
தேவர்கள் வியந்தனர்.

இவன் இங்கிருப்பதால்தான்
நரகாசுரன் ஒழிந்தான் என்று
நீண்ட துயில்
நாம் கொண்டுவிட்டோம்"

# 'டைட்டன்' போட்டிகளில் இந்தியா
## பலமும்-பலவீனமும்

டைட்டன் கிண்ணப் போட்டிகளில் இருந்து இந்திய அணி கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருக்கின்றன.

முதல் பதினைந்து ஓவர்களில் டெண்டுல் கருக்கு ஈடுகொடுக்கக்கூடிய துடிப்பான ஜோடி அவசியம். தற்போதுள்ளவர்களில் சித்துவை மட்டும்தான் ஒருநாள் போட்டிகளுக்கு டெண்டுல்கருடன் ஜோடி சேர்க்கலாம்.

சித்து நிலைத்து மனம்வைத்து ஆடத் தொடங்கிவிட்டால் ஒவ்வொரு அடியும் நாயடி பேயடிதான். சித்துவிடம் உள்ள ஒரே ஒரு குறைபாடு அடிக்கடி ரன் அவுட் ஆகிவிடுவது.



பாராட்டுக்குரியது தென்னாபிரிக்க அணி. அடுத்த உலகக் கிண்ணப்போட்டியில் தென்னாபிரிக்க அணி ஒரு பிடி பிடிக்கத்தான் போகிறது.

இரண்டுபேர் நன்றாக ஆடினால் ஏனையோர் வந்த வேகத்தில் திரும்பிச் செல்வது; அல்லது துடுப்பாட்டத்தில் வெளுத்து வாங்கினால் பந்துவீச்சு, பந்து தடுப்பில் கோட்டை விடுவது; பந்து தடுப்பு பிரமாதமாக இருந்தால் துடுப்பாட்டத்தில் சுருண்டுபோவது. அநேகமான போட்டிகளில் இந்திய அணியிடம் காணப்படும் தொற்றுவியாதி இதுதான்.

அணிமுழுவதும் உத்வேகம் பெற்று ஒன்றுபட்டு எழுமானால் இந்திய அணியை ஜெயிப்பது சுலபமல்ல. அந்தளவுக்கு சிறந்த துடுப்பாட்ட வரிசை உள்ள அணிகளில் ஒன்று இந்தியஅணி. ஆனால் ஒரு துரதிர்ஷ்டம்- எப்போதாவது ஒரு முறை அத்தி பூத்தாற்போலத்தான் இந்திய அணி முழுவதும் கட்டுப்பாடான படைவரிசையாக சிலிர்த்து எழுவதைப் பார்க்க முடிகிறது.

டெண்டுல்கர்தான் கப்டன் என்பதை மறந்துவிட்டு தன்பாட்டில் அடித்தாடத் தொடங்கிவிட்டால் பவுண்டரிகள் பறக்கும். துடுப்பாட்டத்தில் மின்னல் தெறிக்கும் என்பதையும் டைட்டன் கிண்ணப் போட்டிகளில் காணமுடிந்தது.

சில போட்டிகளில் நன்றாக ஆடியவுடன் திருஷ்டிபட்டதுபோல ராகுல் திராவிட்டும், கங்குலியும் இடைக்கிடையே ஏமாற்றிவிட்டனர். மொங்கியாவும் அப்படித்தான். இதுவும் இந்திய அணிவீரர்களுக்கு ஏற்படும் நீண்டகாலக் குறைபாடு.

இந்திய அணி முரட்டுக்காளைதான். அடிக்கடி கொம்பு சீவிவிட்டால்தான் அது களத்தில் சீறியெழும்- எதிரணியைக் குத்திக் குதறும். கொம்பு சீவும் வேலை டெண்டுல்கருக்குத்தான்.

டைட்டன் கிண்ணப்போட்டியில் பரிதாபத்துக்குரியது அவுஸ்திரேலிய அணி.

# சிந்தியா பதில்கள்

* ஜே.ஆர்.ஜயவர்தனாவின் மரணம் பற்றி என்ன நினைக்கிறீர்?

ஜெ. நவநீதன், கொழும்பு-05.

புலிகளின் 'ஹிட் லிஸ்'டிலிருந்து தப்பிச் சென்றுவிட்டார். நிம்மதியான மரணம்!

☆ ☆

* கமலின் 'இந்தியன்' ஒஸ்கார் விருது பெறுமா?

வி. சர்வானந்தன், சிலாபம்.

பெறாது! 'இந்தியன்' சிறப்புக்கு முக்கிய காரணம் மேக் அப் அசத்தல். ஹொலிவூட்டைப் பொறுத்தவரை அது சாதாரணம். தவிர ஒஸ்கார் விருது என்பது அமெரிக்கப் படங்களுக்கு உரியது என்று கமலே சொல்லிவிட்டாரே! ஒஸ்காருக்கு செல்வது மூலம் ஒரு கௌரவம் கிடைக்கும் என்பது மட்டுமே பலன்.

☆ ☆

* மறைந்த ஜனாதிபதி ஜே. ஆரை ஆளும் தரப்பினரும் பாராட்டியுள்ளனரே! என்ன காரணம்?

என். ஷாகீர், புத்தளம்.

அவர் இனி உயிரோடு வரமாட்டார் என்ற நம்பிக்கைதான் காரணம்.

☆ ☆

* 'இராணுவ கட்டுப்பாடு' என்று சொல்கிறார்களே? எல்லா விஷயத்திலும் கட்டுப்பாடாக இருக்க முடியுமா?

கே. நிலாந்தன், திருமலை.

அமெரிக்க இராணுவத்தில் நடந்த ஒரு கதை.

காட்டுப் பகுதி ஒன்றில் இராணுவமுகாம் அமைத்திருந்தனர். ஒரு மேலதிகாரி அந்த இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தார். பல சமாச்சாரங்களையும் பற்றிக் கேட்டுவிட்டு, ஒரே ஒரு சமாச்சாரத்தை மட்டும் சுற்றிவளைத்துக் கேட்டார்.

"நீங்கள் உங்கள் மனைவிமாரையும், காதலிகளையும் பிரிந்திருக்கிறீர்கள். மனதை சிற்றின்பம் பக்கம் செல்லவிடாமல் இருக்க என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"கடுமையான உடற்பயிற்சி செய்கிறோம்."

"அபாரம், அடுத்தது?"

"காலை, மாலை இரண்டு வேளையிலும் யோகாசனம் செய்கிறோம்."

"அடடே பிறகு?"

"உணவில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறோம். சபலம் ஏற்படுத்தாத உணவை மட்டுமே சமைக்கச் சொல்கிறோம்."

"பிரமாதம். பிறகு?"

"எதற்கும் பாதுகாப்பாக இருக்கட்டுமே என்று இந்தக் காட்டுப்பகுதியில் வாழும் சில இளம் பெண்களையும் துணைக்கு வைத்துக்கொண்டிருக்கிறோம்," என்றார்கள் கட்டுப்பாடான அந்த வீரர்கள்.



* டியர் சிந்தியா! சிரிப்பு மனிதனுக்கு ஒரு நல்ல மருந்து என்கிறார்களே உண்மையா?

எம். பிரியதர்சினி, மட்டக்களப்பு.

காசா, பணமா நீங்களே பரிசோதித்துப் பார்க்கலாமே! முடிந்தால் பயனை ஒரு குறிப்பாக எழுதி அனுப்பவும்.

☆ ☆

* ரோஜா, நக்மா, மீனா, ரம்பா இவர்களை ஒப்பிட்டு ஜோரான விளக்கம் சொல்லும். உம்மை நான் மறக்கவே மாட்டேன். சொல் வீரா?

ஜி. ஜீவராஜ், வவுனியா.

உப்பிட்டவரைத்தான் உயிர் உள்ளவரை நினைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒப்பிட்டவரை என்று தப்பாகப் புரிந்து கொண்டுவிட்டீர்கள்.

☆ ☆

* சிந்தியா! தீர்வுப் பொதியின் நிலை எவ்வாறு இருக்கிறது?

கோ. அன்பழகன், கொழும்பு-11.

பொதி என்றதுமே வெடிகுண்டு ஞாபகம்தானே வருகிறது! நாட்டு நிலமை அப்படி.. தீர்வுப் பொதி என்றதும், அதே பழக்க தோஷத்தால் புரளிகள்தான் கிளம்பிக் கொண்டிருக்கின்றன.

☆ ☆

* டியர் சிந்தியா! இந்திய அணிக்கு பிரபாகர் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படுவாரா?

கு. பிரபாகரன், ஹட்டன்.

'நோ ஐடியா' என்று நழுவியிருக்கிறார் டெண்டுல்கர். அநேகமாக முன்னாள் வீரர் என்ற முத்திரை தான் அவருக்கு நிரந்தரம்.

☆ ☆

* பட்டம், பதவி, கண்ணியம், அந்தஸ்து, இவைகளில் இவ்வுலகிலும், மறுவுலகிலும் அழியாததும், நிலையானதும் எது?

அன்சீர்.ஏ.மஜீட், கல்கமுவ.

மறுவுலகில் எனக்கு நம்பிக்கை கிடையாதுங்க மஜீட்! பட்டம், பதவி தேடிவந்தாலும், கண்ணியம் மூலம் அவற்றுக்கு பெருமை சேர்த்து அதன்மூலம் பெறப்படும் அந்தஸ்துதான் இவ்வுலகில் நிலையாக இருக்கும்.

☆ ☆

* நேரமாற்றத்தில் அரைமணி நேரத்தை குறைத்ததுக்குப் பதிலாக பழைய நேரத்தையே அப்படியே கொண்டுவந்திருக்கலாமே?

சி. கணேசதாஸ், மட்டக்களப்பு.

17 வருடகாலமாக யு.என்.பி.க்கு நல்ல நேரமாக இருந்த நேரம் என்று கோபமோ தெரியவில்லை. மனிதனாக இருந்தால் விசாரணைக் கமிஷன். அது மணியாக இருந்தமையால் மாற்றல் உத்தரவோடு தப்பிவிட்டது.

* வாழ்க்கை கசப்பது ஏன்?

ஏ.எஸ்.எம். நவ்சாத், அக்குறணை.

வாழ்க்கையில் உள்ள இனிப்புக்களைக் கண்டறிந்து சுவைக்கத் தெரியாமல் இருப்பதால்.

☆ ☆

* மணலைக் கயிறாகத் திரிப்பது என்றால் என்ன?

எம். சந்தானம், கந்தப்பளை.

நீர் அரசியல்வாதிகளின் அறிக்கைகளைப் படித்ததே இல்லையாக்கும்.

☆ ☆

* சபலப் புத்தியுடையவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?

செ. கஜேந்திரன், நீர்கொழும்பு.

மனைவிக்கு கணவன்மேல் நீண்டநாளாக ஒரு சந்தேகம். ஒரு நாள் நேரடியாகவே கேட்டுவிட்டாள்.

"உங்களுக்கும் கீர்த்தனாவுக்கும் என்ன தொடர்பு?" என்று கேட்டாள்.

உடனே கணவர், "ஐயையோ கீர்த்தனாவா? யார் அது? எனக்குத் தெரியாதே," என்றானாம்.

மனைவி விடவில்லை.

"அப்படியானால் கற்பூரத்தை அணைச்சு சத்தியம் செய்வீர்களா? " என்று கேட்டாள்.

கணவன் முகத்தில் உடனே சந்தோசம்.

"கற்பூரத்தை அணைக்கவா? யார் அவ கற்பூரம்?" என்று கேட்டானாம்.

☆ ☆

* 'நீ எட்டடி பாய்ந்தால் நான் பதினாறடி பாய்வேன்' என்று பேசுகிறார்களே! அதுக்கு என்ன அர்த்தம்?

செல்வி சி. ராஜேஸ்வரி, ஹட்டன்.

ஒரு கொலைக் குற்றவாளிக்கு நீதிபதி மரண தண்டனை கொடுத்துவிட்டார். குற்றவாளிக்காக வாதாடிய சட்டத்தரணி சற்றும் மனம்தளரவில்லை.

"கனம் நீதிபதி அவர்களே! என் கட்சிக்காரர் கொலை செய்ததாகக் கூறப்படும் நபர் அதோ உயிரோடு வருகிறார்," என்றார் சட்டத்தரணி.

நீதிபதி உட்பட நீதிமன்றத்தில் இருந்தவர்கள் எல்லோரும் வாசல்பக்கமாக திரும்பிப் பார்த்தார்கள். அங்கே யாருமே வரவில்லை.

"நீதிபதி அவர்களே! நான் பொய்தான் சொன்னேன். நீங்களும் அதை நம்பித் திரும்பிப் பார்த்தீர்கள். அப்படியானால், அந்த நபர் உயிரோடு இருக்கலாம். என் கட்சிக்காரர் அவரைக் கொலை செய்யாமலும் இருக்கலாம் என்ற சந்தேகம் உங்கள் அடிமனதில் இருப்பதாகத்தானே அர்த்தம். அந்த சந்தேகத்தின் அடிப்படையில் என் கட்சிக்காரரை விடுதலை பண்ணுங்கள்," என்றார் சட்டத்தரணி.

நீதிமன்றத்தில் உள்ளவர்கள் சட்டத்தரணியின் வாதத்திறமை கண்டு புல்லரித்துப் போனார்கள். நீதிபதி மட்டும் வெகு நிதானமாகச் சொன்னார்:

"நான்கூட சந்தேகத்தில் திரும்பிப் பார்த்தேன் என்பது உண்மைதான். ஆனால் உங்கள் கட்சிக்காரர் மட்டும் திரும்பிப் பார்க்கவே இல்லை. ஏனென்றால் தான் கொலைசெய்த நபர் செத்துப் போனதில் அவருக்கு சந்தேகமே இல்லை. அதனால் தண்டனையை உறுதி செய்கிறேன்!" என்றார் நீதிபதி.

☆ ☆

* டியர் சிந்தியா! கடி ஜோக் ஒன்று கிடைக்குமா?

எச்.எம்.நிசாம், மருதானை.

இது பரவாயில்லையா என்று பாருங்கள்.

இராமசாமி தன் நண்பரிடம் திடீரென்று ஒரு கேள்வி கேட்டார்.

"கிணத்தில் கல்லைப் போட்டா மேலே நிக்காமல் ஏன் உள்ளே போகுது?"

"என்ன இராமசாமி நீ. இது கூடவா தெரியாது? கல்லுக்கு அடர்த்தி அதிகம். பாரம் தாங்காம உள்ளே போகுது" என்றார் நண்பர்.

அதுக்கு இராமசாமி:

"அதெல்லாம் இல்லை, வேறொரு முக்கியமான காரணம் இருக்கு" என்றார்.

"அது என்ன காரணம்?" என்றார் நண்பர். இராமசாமி டக்கென்று சொன்னார்:

"கல்லுக்குத்தான் நீச்சல் தெரியாதே. அதனால்தான் உள்ளே போகுது!"

☆ ☆

* கிருஷாந்தியின் மரணத்தில் கொலையாளிகளுக்கு தண்டனை கிடைக்குமா?

வி. நிரோசா, வவுனியா.

விசாரணை ஒழுங்காக நடந்தாலும்கூட நடைபெற்ற சம்பவத்துக்கு சாட்சிகள் இல்லை, தடயங்கள் இல்லை. தப்புவதற்கு பல ஓட்டைகள் உள்ளன. எனக்கென்னவோ விசாரணை கோருவதைவிட, தடயங்கள் அழிக்கப்பட்டதைக் கண்டித்து உரியவர்கள் குரல் எழுப்புவதுதான் முக்கியம் என்றுபடுகிறது.



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 56

இராமபிரான் இலக்குவனை தன் அருகில் வருமாறு அழைத்த தோரணையிலிருந்து, அண்ணன் கடுஞ்சினமுற்றிருக்கிறார் என்பதனை இலக்குவன் அறிந்து கொண்டான். மிகவும் அவதானமாக அண்ணன் அருகில் சென்று குனிந்து வாய் பொத்திய வண்ணம் நின்றான். சற்றுமுன்னர் சோகத்தால் சோர்ந்திருந்த அண்ணலின் கண்கள் இப்போது கோபத்தால் சிவந்திருந்தன. தம்பியைப் பார்த்து, "தம்பி! சுக்கிரீவன் நமக்குக் கொடுத்த வாக்கினையே மறந்துவிட்டான். நன்றி கெட்டவனாக மாறிவிட்டான். ஆட்சி கிடைத்தமையினால் ஏற்பட்ட மகிழ்ச்சி அவனுடைய மனச்சாட்சியை மாய்த்துவிட்டது. வாலியை வதைக்க நாம் ஏவிய கணைகளைப்போல் கணக்கிலடங்காத பாணங்கள் நம்மிடமிருப்பதையும் அவன் நினைத்ததாகத் தெரியவில்லை. உடனடியாக கிட்கிந்தை சென்று சுக்கிரீவனைக் கண்டு அவன் நமக்களித்த வாக்கினை நினைவூட்டு. உடனடியாக சீதையைத் தேடும் பணி ஆரம்பிக்க வேண்டும். இதற்கு மறுத்தால் வானர இனமே அழிந்துபோகவேண்டி நேரிடும் என்பதனை அவனுக்கு எடுத்துக் கூறு!" என்று பணித்தார்.

இலக்குவனுக்கும் சுக்கிரீவன் மீது அப்போது அடங்காத கோபம் ஏற்பட்டிருந்தது. அண்ணலிட்ட பணியை உடனடியாக ஏற்று விடைபெற்றுக்கொண்டு புறப்பட ஆயத்தமானான். நற்செய்தியுடன் திரும்புமாறு இராமர் கூறியதும், புயல் சீறிப்பாய்வது போல் இலக்குவன் புறப்பட்டான்.

தம்பி இலக்குவனுக்குக் கோபம் வந்தால் எவ்வாறு நடந்து கொள்வான் என்பதனை அண்ணன் இராமர் அறிவார். இதனால் அவனுடைய வேகத்தினைத் தணிக்க எண்ணிய இராமர், இலக்குவன்- சில எட்டுக்கள் எடுத்து வைத்ததும், "தம்பி!" என்று மெதுவாக அழைத்தார். நின்று உடன் திரும்பி அண்ணலின் காலடியில் இலக்குவன் மீண்டும் வந்து நின்றான். "தம்பி! சினத்தோடு கிட்கிந்தை செல்ல வேண்டாம். சற்று நிதானமாகச் சென்று, நயமாக உரையாடி நல்ல செய்தியுடன் வருவாயாக," என்று கூறி அனுப்பிவைத்தார்.

## இலக்குவனின் கோபமும் வேகமும்

அண்ணனின் அறிவுரையுடன் புறப்பட்ட இலக்குவனின் கோபம் தணிந்தாலும் வேகம் தணியவில்லை. சூறாவளி போல் சுழன்றது அவனுடைய வேக நடை. சுற்றியிருந்த பெருமரங்களெல்லாம் இலக்குவனின் நடை வேகத்தால் சாய்ந்தன. குன்றுகள் கூட இலக்குவனின் பாதையிலிருந்து நகர்ந்து வழிவிட்டன. சில நாழிகைக்குள் அவன் கிட்கிந்தை மலைக்கோட்டை வாயிலை அடைந்து விட்டான். இலக்குவனின் வருகை கண்டு கோட்டை வாயில் காவல் வானரங்கள் நடுநடுங்கின. வாயிற் கதவினை மூடித் தாழிட்டன. இதனால்- அண்ணனிட்ட கட்டளையையும் மீறி இலக்குவன் சினங்கொண்டான்.

கிட்கிந்தைக்கோட்டைக்குள் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டன. வானரங்கள் அச்சங்கொண்டு அங்குமிங்கும் தாவிக் குதித்துக் கூச்சலிட்டன.

சுக்கிரீவன் நிறைந்த போதையுடன் வானர மாதர்களை அணைத்த வண்ணம் கூத்தாடினான். இலக்குவன் கோட்டை வாயிலை அடைந்து விட்ட பின்னும் தன் சித்தப்பாவின் சித்தப்பிரமையைத் தெளிய வைக்காதிருந்தால் ஏற்படப்போகும் தீமையை உணர்ந்த அங்கதன் அந்தப்புரத் துக்குள் புகுந்தான். அவன் சென்ற வேகத் தையும், அவன் முகத்தில் காணப்பட்ட வேதனையுடன் கலந்து பரபரப்பையும் கண்ட மங்கையர் கூட்டம் சுக்கிரீவனை விட்டு விலகி ஓடியது. அங்கதன் சுக்கிரீவன் அரு கில் சென்று, "அரசே! கோதண்டராமரின் தம்பி இலக்குமணன் கொந்தளிக்கும் எரிமலை போல் கோட்டை வாயிலில் வந்து நிற்கிறார்.

## இராஜகுமாரன்

கார்காலம் நான்கு மாதங்கள் முடிந்து இளவேனிற் காலம் தொடங்கிவிட்டது. தாங்கள் படை திரட்டி வந்து சீதாப்பிராட்டியாரைத் தேடித் தருவதாக வாக்களித்திருந்தீர்கள். ஆனால் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களே!" என்று வேகமாக வார்த்தைகளைக் கொட்டினான்.

கார்காலம் முடிந்து விட்டதாக அங்கதன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் சுக்கிரீவனின் வெறி சிதறிவிட்டது. மயக்கம் தெளிந்து விட்டது. தன் எதிரே நின்றது தன் அண்ணன் மகன் அங்கதன் என்பதை அப்போதுதான் உணர்ந்தான்.

"மகனே அங்கதா! கார்காலம் முடிந்து விட்டதா? இத்தனை காலம் போனதே எனக்குத்தெரியவில்லையே! சரி, அமைச்சர் ஆஞ்சநேனயர் எங்கே? அவரை உடன் வரச்சொல்!" என்று கூறும்போதே ஏற்கனவே வாயிற்கதவோரம் வந்து நின்றுகொண்டிருந்த அனுமன் உள்ளே பிரவேசித்தார். அரசருக்குரிய வணக்கத்தைத் தெரிவித்த வண்ணம்,"மன்னவா! தசரத குமாரர்களுக்கு நாம் கொடுத்த காலக்கெடு கடந்து விட்டது. கடும் கோபத்துடன் இளையபெருமாள் கோட்டை வாயிலில் காத்து நிற்கிறார்," என்று கூறியதும் சுக்கிரீவன் பதறிப் போனான்.

"அனுமனே! உடனடியாக அண்ணி தாரையை அனுப்பி இலக்குவனை தகுந்த மரியாதையுடன் அரண்மனைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள். அத்துடன் நாலா திக்குகளுக்கும் நமது தூதர்களை அனுப்பி வானர வீரர்களை அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள். இதோ சிரமபரிகாரங்களை முடித்துவிட்டு நானும் ஓடோடி வந்து சேருகிறேன்," என்று பணித்தான் சுக்கிரீவன்.

## வானரர் அளித்த வரவேற்பு

சற்று நேரத்துக்கெல்லாம் கோட்டைக் கதவு திறக்கப்பட்டது. பூரண கும்பத்துடன் அந்தணர்கள், அறிஞர்கள் ஆகியோர் திரண்டு நின்று முகமன் கூறி இலக்குமணனை வரவேற்றனர். இக்குழுவில் நடுநாயமாக-உச்சி முதல் பாதம்வரை வெண் துணியால் தன் அங்கங்களனைத்தையும் போர்த்தி மூடிய வண்ணம் தாரை நின்றாள். தரையைப் பார்த்த வண்ணம் முன்நோக்கிச் சென்று இலக்குவன் தாள் பணிந்தாள். தாரையுடன் பல சேடிப்பெண்களும் சென்றனர். தன் தாய்மார், தன் தர்மபத்தினி ஊர்மிளை ஆகிய பெண்களைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் தலை நிமிர்ந்து பார்த்தறியாத இலக்குவன், தாரையின் பாதங்களைப் பார்த்தே அவளுடைய நிலையை அறிந்து கொண்டான். தன் தாளினை தாரை பணிந்ததும் துணுக்குற்றுப் பின்னால் சில எட்டுக்களை வைத்துக்கொண்டு, தன் கன்னங்களில் இருகைகளால் தட்டியவண்ணம் "ராம ராம ராமா" என்றான். இக்காட்சிகளால் இலக்குவனின் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த கோபத்தணல் தானாகவே தணிந்து குளிர்ச்சி கண்டுவிட்டது. வரவேற்பளித்த குழுவினர் இலக்குவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்தினர். இப்போது அனுமன் இலக்குவனிடம் வந்து நின்று வணங்கினான். அனுமனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் இலக்குவன். அனுமனின் கண்களினூடாகவே சுக்கிரீவன் நடந்து கொண்ட முறையைக் கண்டு கொண்டான். 'அறிவிழந்து அநாகரிகமாக நடந்த தனது அரசன் சுக்கிரீவனை மன்னித்து விடும்படி.' யான கோரிக்கை அனுமனின் கண்களிலேயே தென்பட்டது. 'கோரிக்கை நிறைவேற்றப் படும்' என்ற கருத்தினை இலக்குவனின் பார்வையில் கண்டு தெளிந்த ஆஞ்சநேயன் திருப்தியடைந்தான்.

இதற்கிடையில் தன் கடன்களையெல்லாம் வேகமாக முடித்துக்கொண்டு கூப்பிய கரங்களுடன் சுக்கிரீவன் அங்கு வந்து சேர்ந்தான். தன்னுடன் காலை உணவினை அருந்த வருமாறு சுக்கிரீவன் விடுத்த வேண்டுகோளை இலக்குவன் ஏற்கவில்லை. உணவு, உறக்கம் ஆகியவற்றை மறந்தவராக அண்ணன் இராமன் இருக்கும்போது அரண்மனையில் அறுசுவை உண்டியை எவ் வகையிலும் ஏற்க முடியாதென இலக்குவன் மறுத்துவிட்டான்.

## வானர சேனை

ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்த சிவிகையில் இலக்குவனும் சுக்கிரீவனும் ஏறி அமர்ந்தனர். வானரப் படைகள் புடைசூழ சிவிகை உருசிய முகக்குகை நோக்கிப் புறப்பட்டது.

இலக்குவனும் சுக்கிரீவனும் இராம பிரானிடம் வந்து சேர்வதற்கு முன்னரே அங்கு பல்லாயிரக் கணக்கில் வானர சேனை வந்து குவிந்து விட்டது. இதனைக் கண்டதும் இராமர் தனது கோபத்தை மறந்தார்; துயரினையும் துடைத்து விட்டார். குகை வாயிலுக்குச் சற்றுத் தூரத்திலேயே சிவிகை இறக்கப்பட்டு இலக்குவனும் சுக்கிரீவனும் தரையிறங்கினர். உடனடியாகவே சுக்கிரீவன் இராமரிடம் ஓடிச்சென்று தாள் பணிந்தான். சுக்கிரீவனை வாரி எடுத்து தன் மார்புறத் தழுவிக்கொண்டார் இராமர். தொடர்ந்து ஆஞ்சநேயரும் சென்று இராமரின் அடி தொழுதார். இராமர் ஆஞ்சநேயனின் தோளினைத் தொட்டு உயர்த்தி உச்சிமோந்தார்.

குழுமியிருந்த வானரசைனியத்தை ஒரு முறை தன் கண்களால் இராமர் அளந்து கொண்டார். அவ்வீரர்களை அங்கதனை ஏவி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கச் சொன்னார். கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திக்குகளுக்கும் படைகள் தெரிவு செய்யப்பட்டு வழிநடத்தலுக்கான தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். தெற்கு நோக்கிச் செல்வதற்கு மட்டும் எவருக்கும் உடன் ஆணை பிறப்பிக்கப்படாமலிருந்தது. இராமரின் கண்கள் ஆஞ்சநேயனை அருகழைத்தன. அருகே சென்ற அனுமன் இராமரின் காலடியில் அமர்ந்தான்.

"அனுமனே! உன் மீதுதான் நான் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். தெற்கே செல்லும் படைக்கு நீயே தலைவன். அங்கதனும் உன்னுடன் வருவான். சீதையை நீயே காண்பாய். இதோ என் கணையாழி. நீ என் தூதன் என்பதை சீதை கண்டுகொள்ள இந்த அடையாளமே போதும். வெற்றியுடன் திரும்புவாயாக," என்றார் இராமர். ஆஞ்சநேயர் பக்திப் பெருக்கால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

(தொடர்ந்து வரும்)

# இராமர் தேர்ந்த தூதன்




### இராமாயணப் போட்டி: 54

**சரியானவிடை:- துறவறம் பூண்டிருந்தமையினால்.**

1. எம்.ஆர்.எம். கியாஸ். மனம்பொட, உக்குவெல.
2. எஸ். நாகபூஷணி. பண்டாரிக் குளம், வவுனியா.
3. ம. நித்தியகலா. கொம்மாதுறை, செங்கலடி.
4. வீ. குகதாசன். ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
5. மகேஸ்வரி ராமதாஸ்., வரகாஸ்தென்ன, வத்தேகம.

**போட்டி இல. 56** கேள்வி:- அனுமனுக்குரிய மற்றுமொரு பெயரினைத் தருக?

நவம்பர்.16 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.56, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# இவர்களின் தீபாவளி







| | |
|---|---|
| பில் கிளிண்டன் - | நான் ஜெயித்தால் தீபாவளி. |
| யெல்ட்சின் | - நான் பிழைத்தால் தீபாவளி. |
| தேவ கவுடா | - ஐந்து வருடம் பதவியில் குந்தியிருந்தால் தீபாவளி. |
| சந்திரிக்கா | - நான் போரில் ஜெயித்தால் தீபாவளி. |
| பிரபாகரன் - | நான் சினந்தால் தீபாவளி. |
| கருணாநிதி - | ஜெயா அழுதால் தீபாவளி. |
| ஜெயலலிதா | - சசி சிரித்தால் தீபாவளி. |
| சசிகலா | - சிறை திறந்தால் தீபாவளி. |
| டெண்டுல்கர் | - 'கப்' கிடைத்தால் தீபாவளி. |
| செந்தில் | - கவுண்டமணியை உதைத்தால் தீபாவளி. |
| சனத் ஜெயசூரியா - | 'சிக்ஸர்' தொடர்ந்தடித்தால் தீபாவளி. |
| நரசிம்மராவ் | - நான் சிரித்தால் தீபாவளி. |

# ரஜினியின் தீபாவளி



**காயூக:-** தீபாவளியை எப்படிக் கொண்டாடப் போறீங்க ரஜினி?

**ரஜினி:-** முன்னாடி சிவராத்திக்கு நித்திரை முழிச்சேன், நேற்று நவராத்திரிக்கு விரதம் பிடிச்சேன். நாளை தீபாவளிக்கு... ஹா ஹா ஹா

**காயூக:-** இந்த சிரிப்புக்கு என்னங்க அர்த்தம்?

**ரஜினி:-** நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது என்ற அர்த்தம். நான் என்ன செய்வேன் என்று அவனுக்குத்தான் தெரியும். (விரலைச் சொடுக்கி மேலே காட்டுகிறார்)

**காயூக:-** தீபாவளியன்னைக்கு தமிழ் நாட்டில தான் இருப்பீங்களா?

**ரஜினி:-** நான் எப்போ எங்கே இருப்பேன்னு யாருக்கும் தெரியாது. ஆனா எப்போ எங்கே இருக்கணுமோ அங்கே அப்போ கரெக்டான நேரத்தில இருப்பேன்.

**காயூக:-** உங்க தீபாவளி செய்தி என்னங்க?

**ரஜினி:-** சொல்லுவேன். ஆனா தீபாவளி தினத்தன்றுதான் சொல்லுவேன்.

**காயூக:-** அப்போ நீங்க தீபாவளிக்கு வரப் போறீங்க என்னுதானே அர்த்தம்.

**ரஜினி:-** ஹா ஹா ஹா (மேலே காட்டுகிறார்)

**காயூக:-** ரஜினி வருகிறார் தீபாவளிக்கு என்னு செய்தி போடலாமுங்களா?

**ரஜினி:-** எது நடக்கணுமோ அது நடக்காமப் போகாது. எது நடக்கக்கூடாதோ அது நடக்காது. முந்தாநாள் முடியோடு இருந்தேன். நேத்து முடியில்லாம இருந்தேன். இன்னைக்கு முடியோட இருக்கேன். நாளை என் தலையில் என்ன இருக்கும் என்னு எனக்கே தெரியாது. அவனாப் பார்த்து கொடுக்கறதுதான் என் தலையில் இருக்கும்.

**காயூக:-** முதலமைச்சர் என்னு முடிசூட்டப் படவும் தயாராக இருக்கீங்க போலிருக்கு.

**ரஜினி:-** இங்கே பாருங்க. என் முடி தன் பாட்டுக்கு வளர்ந்துகொண்டேயிருக்கும். என் தலையில் என்ன எழுதியிருக்கோ அது நடந்துகிட்டே இருக்கும். என் தலையில யாராவது கைவச்சாங்கன்னா கை வைக்கிறவங்களுக்குத்தான் நஷ்டம். அப்போ நான் சொல்லுறதையும் செய்வேன், சொல்லாத்தையும் செய்வேன்.

**காயூக:-** தூளுங்க தலைவா. தீபாவளிக்கு உங்க ரசிகர்களுக்கு வேட்டி சேலை கொடுப்பீங்களா?

**ரஜினி:-** நோ! வேட்டி கேக்காதீங்க வேலை கேளுங்க. சேலை கேட்காதீங்க சாலையை சரியா போட்டுத்தா என்னு கேளுங்க. அப்பதான் வாழ்க்கையும் ஓடும், சாலையில வண்டியும் ஓடும். பட்டாசு கொளுத்தாதீங்க. பக்கத்தில இருக்கிறவங்களுக்கு உதவி பண்ணுங்க. அப்பத்தான் மனசு நிறையும், (கை கூப்புகிறார்)

# மூலிகையில் மின்சாரம்

**செந்தில்:-** (பாடிக்கொண்டே வருகிறார்) மூலிகையில் மின்சாரம் மாளிகையில் சம்சாரம்

**கவுண்டமணி:-** நிறுத்துடா கரடி வாயா. நீ இப்போ பாடினாய் பாட்டு அதுக்கு என்னடா அர்த்தம்?

**செ:-** அண்ணே இங்கே பாருங்க. இது என்ன?

**கவு:-** இதைக் கண்டுபிடிச்சுச் சொல்ல கலிலியோ வரணுமாக்கும். நீ எருமை. அது புல்லு. ஏண்டா வைக்கோல் கிடைக்கலையா?

**செந்தில்:-** டோண்ட் மில் அண்டஸ்ராண்ட். திஸ் இஸ் மூலிகை. இதை வைச்சு மின்சாரம் கண்டுபிடிக்கப்போறேன் அண்ணே. அந்த மின்சாரம் மட்டும் என் கையில கிடைச்சுட்டா நான் கோடீஸ்வரன் ஆயிடுவேன். கோடீஸ்வரனின் சம்சாரம் குடிசையிலா இருப்பாங்க. நெவர்! மாளிகைக்கே குடிபோயிடுவாங்க.

**கவு:-** ஏண்டா பேமானி. ஆள் ஆளுக்கு இப்படியே கிளம்பினீங்க, ஆடு மாடு மேய புல்லே இருக்காதுடா. எத்தனை பேருடா இப்படி கிளம்பியிருக்கீங்க.

**செ:-** ஏன் அண்ணே, சாமியாரு சம்சாரத்துக்கு பிள்ளைவரம் கொடுத்தா நம்புறீங்க. நாங்க மூலிகையில மின்சாரம் பிடிச்சுத் தந்தா நம்பமாட்டேன் என்கிறீங்களே.

**கவு:-** ஒரு சாமி சென்றல் ஜெயில்ல இருக்காரு. இன்னொரு சாமி சென்னை ஜெயில்ல இருக்காரு. நீ எங்கேடா இருக்கப்போறே?

**செ:-** அண்ணே இப்படி காதைக் கொடுங்கண்ணே.

**கவு:-** நான் கொடுக்கமாட்டேன். நீ நாயி, கடிச்சிடுவே.

**செ:-** சாமியாராகிறதெல்லாம் பழைய பாஷன். மூலிகையை வைச்சு பெற்றோல் கண்டுபிடிக்கறது புதிய பாஷன். துப்பாக்கியோட பாதுகாப்பெல்லாம் கொடுப்பாங்க. பதவி கிடைச்ச மாதிரி பந்தாவா இருக்கலாமண்ணே. நம்ம கலைஞரு எந்தப் பெரிய பகுத்தறிவாளரு. அவருக்கே அல்வா கொடுத்திட்டாரு பெற்றோல் ராமரு.

**கவு:-** அதான் பித்தலாட்டமென்று விஞ்ஞானிங்க கண்டுபிடிச்சுட்டாங்களே. அந்த ராமரு காட்டுக்குப் போனாரு. பெற்றோல் ராமரு சிறைக்குப் போகப்போறாரு பாரு.

**செ:-** அண்ணே மிரட்டாதீங்க அண்ணே. என் எதிர்கால இலட்சியமே பெயிலாயிடும்.

**கவு:-** இவரு பெரிய இலட்சியப் புருஷரு. போடா பேமானி. மூலிகையில பெற்றோல் வருகுது, டீசல் வருகுது என்னு இனிமே எவனாவது கிளம்பினீங்க உருப்படியா வீடுபோய் சேரமாட்டீங்க.

**செ:-** அண்ணே வேண்டாமண்ணே. என் இலட்சியத்தை தியாகம் செஞ்சுட்டேன் அண்ணே.

**கவு:-** மவனே! இப்ப சொன்னே பாரு இது முறை.

**செ:-** தீபாவளிக்கு வீட்ல விசேஷமா அண்ணே?

**கவு:-** ஆமாண்டா. எருமைகளையெல்லாம் கூப்பிட்டு குளிக்கவைக்கப் போறோம். நீ மறக்காம வந்திடு.

**செ:-** கண்டிப்பா வந்திடுவேன் அண்ணே.

**கவு:-** வாக்கு மாறமாட்டியே?

**செ:-** கொடுத்த வாக்கையும், வாங்கிய உதையையும் திருப்பிக் கொடுத்து எனக்கு பழக்கமில்லை. அண்டர்ஸ்ராண்ட்.

**கவு:-** அப்படிங்களா. இப்பபாரு ஆடப்போறே டான்ஸ் (உதைக்கிறார்)

**செந்தில்:-** அண்ணே முதுகிலே பட்டாசா கொளுத்துறீங்க.


**கவு:-** இதுதான்டா தீபாவளி.


www.padippakam.com
படிப்பகம்

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# உருமாறும் பாறை



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

↓ ஆடு வளர்க்கலாம். கோழி வளர்க்கலாம். செல்லமாக நாய் வளர்க்கலாம். ஆபத்து இல்லை. ஆனால் இந்த நங்கை முதலை வளர்க்கிறாள். முதலையுடன் தோன்றி பார்ப்போர் யாவரும் மூக்கின் மேல் விரலை வைக்குமளவுக்கு வித்தைகளும் செய்கிறார். பிரிட்டனைச் சேர்ந்த இவரது பெயர் சுருக்கமாக ஜனா. முதலைகளின் ராணி என்றுதான் எல்லோரும் அழைக்கிறார்கள். பெண் என்பதால் முதலையும் மூர்க்கம் காட்டாமல் ஒத்துழைக்கிறதாக்கும்.

← ஆர்ட்டிக், அன்ராரக்டிக்கா என்பவை பூமியின் வடதுருவம், தென்துருவம் என்று அழைக்கப்படுகின்றன. அன்ராரக்டிக்கா கண்டத்தில்தான் அதாவது பூமியின் தென்துருவத்தில்தான் வெப்பநிலை குறைவான காலநிலை காணப்படுகிறது. அதனால் இதற்கு 'உறைந்த கண்டம்' என்றும் ஒரு பெயர் இருக்கிறது. பயங்கரமான குளிர். கைகால் எல்லாம் டைப் அடிக்கும்.

தென்துருவத்தில் வழக்கமாகவே பயங்கரக்குளிர் என்றாலும் இதுவரை காலத்திலும் படு பயங்கரக் குளிர் காணப்பட்டது 1983 ஜூலைமாதத்தில்தான். நீரின் உறைநிலையான சைபர் பாகை சென்ரிகிரேட்டினைவிட அதிகுறைவான வெப்பநிலையே காணப்பட்டது. அப்போதுதான் பனிப்பாறையும் உருவானது. இதுதான் இதுவரை காலத்தில் பதியப்பட்ட மிகக் குறைந்த வெப்பநிலையாக உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

சைபர்பாகை சென்ரிகிரேட்டை விடவும் 89.2 பாகை சென்ரிகிரேட் குறைவான வெப்பநிலையே பதிவுசெய்யப்பட்டதாகும்.

# உள்ளே வரலாமா?



↑ எந்தப் பாறையிலும் இல்லாத ஒரு விசேஷம் இந்தப் பாறையில் இருக்கிறது. அதுவா? இதுவா? என்று உங்களைக் குழப்பாமல் நேரடியாகவே விஷயத்தைச் சொல்லி விடுகிறோம்.

ஆகக்குறைந்த வெப்பநிலையில் பனி உறைந்து இப்படிப் பாறையாக மாறியிருக்கிறது.

# அலுமினியப் பறவை




↑ அன்ரனோவ் விமானம் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். நம்நாட்டிலும் அன்ரனோக்கள் பறந்தது, விழுந்தது எல்லாம் தெரியும்தானே.

படத்தில் இருப்பதும் அன்ரனோவ்தான். ஆனால் வித்தியாசமானது. அன்ரனோவ் அன்-225 என்பது இந்த ரகத்தின் பெயர். இதில் என்ன வித்தியாசம் தெரியுமா? இதனை ஒட்டுவதற்கு உள்ளே விமானி இருக்கத் தேவையில்லை. றேடியோ அலைத் தொழில் நுட்பத்தினால் (கம்பியூட்டர் அல்ல) இதனை இயக்கலாம். தரையில் இருந்து கொடுக்கப் படும் றேடியோ சமிக்ஞைகள் மூலம் இது எழும், பறக்கும், தரையிறங்கும். இதன் நிறை 20.4 கிலோ. அதாவது 45 இறாத்தல் மட்டும்தான். இரண்டு இறக்கைகளுக்கு இடைப்பட்ட தூரம் 18 அடி 6 அங்குலம். இதனைப் பாவனைக்கு விடுவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது. பிரித்தானியாவைச் சேர்ந்த சிபெர்க்கர் என்பவர் இதனை வடிவமைத்துள்ளார்.

[illegible] பாவனையில் உள்ள ஆளில்லாமல் பறக்கும் உளவு விமானங்களும் கிட்டத்தட்ட இதேபோலவே இருக்கும். கம்பியுட்டர் மூலமாக இயக்கப்படும் உளவு விமானங்களும் இருக்கின்றன. அலுமினியப் பறவைகளில்தான் எத்தனை ரகம்? எல்லாம் எதற்கு. சண்டை போடத்தானோ?

# சின்ன வீடு

↓ நம்மூர்களில் கன்றுகள், குட்டிகள் உற்பத்திக்கென நாம்பன், கிடாய் வளர்ப்பார்கள். உருண்டு திரண்டு பார்க்கப்பயமாகக் கரு கருவென்று முறுக்கேறிப்போய் இருக்கும்.

அத்தகைய ஒரு நல்ல இன இளம் காளைப் பன்றிதான் இது. இதன் பெயர்: பிரிட்டிஷ் பெடிக்கிரீ பன்றி.

உலகிலேயே இந்த ரகத்தில் 103 காளைப் பன்றிகள்தான் உள்ளன. அவற்றுள் 90 வீதமானவை பிரித்தானியாவில் உள்ளன.

மிகுதி ஜப்பானில் இருக்கின்றன. ஜப்பான் மன்னருக்கு இப் பன்றிகள் என்றால் கொள்ளை ஆசையாம்.

இதன் எடை சாதாரணமாக 640 கிலோ (1410 இறாத்தல்) உயரம் 1.43 மீட்டர் (4அடி 8 1/4 அங்குலம்) உலகிலேயே எடை கூடியதும், மிகக் குறைவான எண்ணிக்கையில் இருப்பதும் இந்த பன்றிதான். குடும்பப் பெருக்கம் மூலம் இவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க முயல்கிறார்கள். ஆனால் அதற்கான ஒத்துழைப்போ, ஆர்வமோ இவற்றிடம் இல்லையாம். சே! சோம்பேறிப் பன்றிகள்!






# அரிது அரிது

↑ 'சின்னவீடு' என்றதும் வேறு அர்த்தம் கொள்ள வேண்டாம். பிரிட்டனில் உள்ள வீடுகளில் அளவில் சிறிய வீடு இதுதான். நம்நாட்டில் இதைவிட சிறிய வீடெல்லாம் இல்லையா என்று நினைக்கிறீர்களா? விஷயம் அதுவல்ல. எல்லா வசதியும் உள்ள சிறிய வீடு இது என்பதுதான் விசேஷம். அதனால்தான் அதிசயம். இது கட்டப்பட்டது 19ம் நூற்றாண்டில். இரண்டு சிறிய அறைகள் இருக்கின்றன. கீழே ஒரு அறை. மாடியில் ஒரு அறை. சமையலறை, குளியலறையும் உண்டு. பிரிட்டனில கொன்வி மாநிலத்தில குவே என்னும் ஊரில்தான் இந்த வீடு இருக்கிறது.

இந்த வீட்டின் முன்பக்க உயரம் ஆக, ஆறு அடி. அகலம் 10அடி 2 அங்குலம். வீட்டின் முன்-பின் சுவர் களுக்கு இடைப்பட்ட தூரம் 8 அடி 4 அங்கலம். பார்த்தால் நம்ம ஊர் தபால் பெட்டி மாதிரித் தெரிகிறதல்லவா.